விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 20 சனிக்கிழமை (02.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 105

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## தகவல் தெரிந்தும் மூடிமறைத்தாரா?

# வெடிபொருள் மீட்பு குறித்து பீரிஸிடம் இன்று விசாரணை



(கொழும்பு) யாழ். சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி, கிளைமோர்கள் உள்ளிட்ட வெடிபொருட்கள் கொழும்பு வெள்ளவத்தைக்கு கொண்டுவருவதற்காக பதுக்கி வைக்கப்பட்டவை என தகவல் வெளியிட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இன்று விசாரணை நடத்தவுள்ளனர். பாதுகாப்பு அமைச்சின் உத்தரவுக்கு அமையவே இவ் விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயக மண்ணில் தொடரும் சிங்கள குடியேற்றம்

### நல்லிணக்கம் பாழ்படுமென ரெலோ கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் இராணுவ குடும்பங்களுக்கான வீடுகளை அமைத்து தமிழ் பிரதேசங்களை சிங்கள குடியேற்றத்தினால் கபளீகரம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு கண்டனம் தெரிவித்துள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) இந்த நடவடிக்கைகள் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் ந.ஸ்ரீகாந்தா வெளியிட்டுள்ள அறிக்கையில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா 24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.திறந்த நீதிமன்றத்தினுள் இலஞ்சம் பெற்ற பொலிஸ் கைது

### ஐந்நூறு ரூபாய் நோட்டில் ஆப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் திறந்த நீதிமன்றத்தினுள் வைத்து இலஞ்சம் பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டு யாழ் பொலிஸ் நிலையத்தில் நேற்றையதினம் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

நீதிமன்றில் கடமையாற்றும் 54 வயதுடைய பொலிஸார் ஒருவரே இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளார். நேற்றையதினம் யாழ் திறந்த நீதி 23ஆம் பக்கம் பார்க்க....

## கோவில்களில் மிருக பலியிடுவதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை

### நீதிபதி இளஞ்செழியன் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு கோவில்களில் விலங்குகள் வெட்டி வேள்வி நடத்துவதற்கு எதிராக யாழ்ப் பாணம் மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு ஒன்றை நேற்று வெள்ளிக்கிழமை பிறப்பித்துள்ளது.

ஆலயங்களில் விலங்குகளைப் பலிகொடுத்து நடத்தப்படும் வேள்விகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி அகில இலங்கை சைவ மகாசபை தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையின் போதே இந்த உத்தரவை நீதிபதி இளஞ்செழியன் பிறப்பித்துள்ளார்.

இறைச்சிக்கடைச் சட்டத்தின் கீழேயே இந்த 23ஆம் பக்கம் பார்க்க....

### இறுதி தீர்வுத் திட்டத்தை தயாரிக்க

## தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர்குழு இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் தீர்வுத்திட்ட முன்வரைபு சம்பந்தமான மக்கள் கருத்தறியும் செயறதிட்டம் நேற்றுடன் முடிவடைந்ததையடுத்து நிபுணர் குழுவானது இன்று முதல் மீண்டும் ஒன்று கூடித் தீர்வுத்திட்ட இறுதி வரைபை தயாரிக்கும் பணியில் ஈடுபடவுள்ளது.

இப் பணியானது எதிர்வரும் நாட்களில் முடிவுறும். பேரவையின் தீர்வுத்திட்ட வரைபுக்கு தமிழ் மக்கள் பெருமளவில் தமது ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்திருக்கும் இவ் வேளையில், அவற்றை பகுத்தாய்ந்து, உள்வாங்கி இறுதி 24ஆம் பக்கம் பார்க்க....

அன்பு வாசகர்களே!
ஜோதிட சிம்மம் கண்ணன் எழுதும் இந்தவார இராசி பலன்கள் உள்ளே...

## கொக்கிளாய் விகாரை குறித்து ஆளுநரிடம் விபரங்கள் கையளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியில் உள்ள தனியார் காணியில் அமைக்கப்படும் விகாரை தொடர்பான தகவல்களை வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடமிருந்து பெற்றுள்ளளார்.

முல்லைத்தீவு கொக்கிளாய்மேற்கு பகுதியில் உள்ள கிராமத்தில் தனியார் காணி ஒன்றில் அடாத்தாக விகாரை ஒன்றை அமைத்து வருகின்றனர்.

இது தொடர்பாக கடந்த 28 ஆம் திகதி திங்கட்கிழமை வடக்கு மாகாண ஆளுநரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதற்கு பதிலளித்த ஆளுநர், அந்த விடயம் தொடர்பாக தனக்கு எதுவும் தெரி 24ஆம் பக்கம் பார்க்க....

### வித்தியா படுகொலை வழக்கு

## கண்கண்ட இரு சாட்சியங்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

வித்தியா படுகொலைய்யை நேரில் கண்கண்ட இரு சாட்சியங்கள் நேற்றையதினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆஜர் செய்யப்பட்ட இவர்கள் இருவரும் எதிர்வரும் பன்னிரண்டாம் திகதியன்று முக்கிய வாக்குமூலம் ஒன்றினை மன்றில் வழங்கவுள்ளனர்.

புங் குடுதீவு பாடசாலை மாணவி சிவலோக நாதன் வித்தியா (வயது 18) கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தப் 24ஆம் பக்கம் பார்க்க....

# கண்கண்ட சாட்சியம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத்துறையிடம் அறிக்கை

## மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு குற்றப்புலனாய்வு துறை தம்மை துன்புறுத்துவதாக யாழ்.பிராந்திய மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ள வித்தியா கொலை வழக்கின் கண்கண்ட சாட்சியம் தொடர்பில் குற்றப்புலனாய்வு துறையிடம் தாம் அறிக்கை கோரியுள்ளதாக மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த முறைப்பாடு தொடர்பிலான விசாரணைகளை மனிதவுரிமை ஆணைக்குழுவின் தலைமை காரியாலயத்திற்கு பாரப்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் 11ஆவது சந்தேகநபராக கைது செய்யப்பட்ட கொலைச் சம்பவத்தை நேரில் கண்ட நபர் அரச தரப்பு சாட்சியாக மாறி மன்றில் சாட்சியமளிக்கவுள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியன.

மேற்படி கொலைச் சம்பவம் தொடர்பில் ஏற்கெனவே 10 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக தனியான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் 11 ஆவது சந்தேகநபரான உதயசூரியன் சுரேஸ்கரன் என்பவர் குற்றப்புலனாய்வு பொலிஸாரால் கடந்த 3ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட நபரை மற்ற நபர்களுடன் சேர்த்து மன்றில் ஆஜர்ப்படுத்தாமல் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் அவரை இரகசியமான முறையில் வேறு ஒரு தவணையில் மன்றில் ஆஜர்ப்படுத்தி வந்தனர். இந்நிலையில் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த 21ஆம் திகதி திங்கட்கிழமை 11ஆவது சந்தேகநபரை குற்றப் புலனாய்வு பொலிஸார் ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது, நீதிவான் ஏ.எம்.எம். றியால் சந்தேகநபரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 1ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். இந்தச் சந்தேக நபர் தனியாக யாழ்ப்பாணம் சிறைச்சாலையில விளக்கமறியலில் வைக்கப்பட்டு வந்தார். 11ஆவது சந்தேகநபர் அரச சாட்சியாக மாறி இந்த வழக்கில் சாட்சியமளிக்கவுள்ளதாக கூறப்பட்டது.

இந்நிலையில் சந்தேகநபரின் தாயார் தன் மகனை சாட்சியமாக மாறுமாறு குற்றப்புலனாய்வு பொலிஸார் துன்புறுத்துகின்றனர் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடொன்றினை பதிவு செய்திருந்தார். இந்நிலையிலேயே குறித்த முறைப்பாடு தொடர்பில் குற்றப்புலனாய்வு துறையினரிடம் அறிக்கை கோரியுள்ளதாகி, மனிதவுரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த முறைப்பாட்டில் கொழும்பு குற்றப்புலனாய்வு துறை சம்பந்தப்பட்டிருப்பதனால், மேற்படி முறைப்பாடு தொடர்பான விசாரணைகளை மனிதவுரிமை ஆணைக்குழுவின் தலைமை காரியாலயத்திற்கு கையளிக்கவுள்ளதாக இணைப்பாளர் தெரிவித்தார். (செ-4)

## நவீன செயற்கை கை இலவசமாக வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர ரோட்டரி கழகம் ஆஸ்திரேலிய ரோட்டரி கழகத்துடன் இணைந்து செயற்பாட்டு திறனுடைய எடை குறைந்த நவீன செயற்கை கைகளை மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசமாக வழங்க உள்ளது.

இந்நிகழ்வானது கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் (பழைய வைத்தியசாலை) நாளை 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும்.

ஐம்பது ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த செயற்கை கைகளை முழங்கைக்கு கீழே கைகளை இழந்த அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும் என ஏற்பட்டாளர் அறிவித்துள்ளார். (செ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

மலிவு விற்பனை
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதுவருடத்தை முன்னிட்டு இம்மாதம் 01-15 வரை சகல பொருட்களையும் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.
லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2381
(C-4187)

### தவறிவிட்டது

புதுக்குடியிருப்பு உடையார் கட்டு தெற்கு பகுதியில் வசிக்கும் சந்தியா வேலுப்பிள்ளை என்பவருடைய 877533301V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(C-4191)

தொடர்புகளுக்கு: 0770344097

ALL OUT
Pest Control Service
கறையான் தொல்லையா?

உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்துக் கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.
ஆலோசனையும் மதீப்பீடும் இலவசமாக வழங்கப்படும்.
(4076)
தொடர்புகளுக்கு: ந.ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200

## மரண அறிவித்தல்

### கந்தவனம் வள்ளிநாச்சி

பிறப்பு 28.08.1930 இறப்பு 30.03.2016



வடமராட்சி நவின்டிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் வள்ளிநாச்சி 30-03-2016 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற கந்தவனத்தின் (சைவப்பா இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், விக்னேஸ்வரி (இந்தியா), கலாநிதி சுப்பிரமணியம் (பொறியியலாளர்- அவுஸ்ரேலியா), உலகநாயகி (லண்டன்), பொன்னம்பலம் (கணக்காளர்-லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாலன் (கணக்காளர் - கொழும்பு), சந்திரகுமார் (பிரான்ஸ்), மந்தாகினி (கணக்காளர் -அவுஸ்ரேலியா), பானுமதி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சியாமளன், சிறிவக்சன், துவாரகன், ஹரிபிரசாத், சிறிஸ்சிகேசன், சிரானி, சிறிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சின்னத்தங்கநாச்சன் நடராஜா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03-04-2016 ஞாயிறு மு.ப 9.00 மணியளவில் அவரின் மாவடிவளவு நவின்டிலிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ம. புவேந்திரன்
மாவடிவளவு, நவிண்டில்,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.
T.P : 021 226 3098
0774744666

தகவல்:
குடும்பத்தினர்

(C-4189)

## கண்ணீர் அஞ்சலி

### இலங்கை வயம்ப பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன்

# ஜெயராஜா மகீதன்



பல்கலைத் தோழனே!
பேதமில்லா உபசரிப்பால் நற்
தோழமை கொண்ட தம்பா!
வளாக வாழ்க்கையில் சந்தித்த உன் நட்பு
வாழ்நாள் முழுவதும் தொடருமென்றிருந்தோம்
சிரிக்கச் சிரிக்கப் பேசி சிந்திக்கவைக்கும் உன்
சிநேகிதம் கண்டு மகிழ்ந்திருந்தோம்
வயம்ப வாழ்க்கை நிறைவடைகையிலே
மலரும் தோழமை நினைவுகளுடன் சிதறினோம்
வளரும் நம் தோழமை என்று....
பல்கலைத் தேவைக்காய் வந்த உன் உயிரைப்
பாதையில் காலன் கவர்ந்த செய்தி
காற்றாய்ப் பறக்கையில் கதிகலங்கிப் போனோம்
காற்றிலேவந்த சேதி பொய்யாகிப் போகாதோ...?

உயிராகமிளிர்ந்த உறவே! – தோளோடு
துணைநின்ற தோழா!
நிழலாகிப்போன உந்தன்
நீங்காத நினைவுகளோடு வாழும்,

மலர்வு 1989.04.21
உதிர்வு 2016.03.30

வயம்ப நண்பர்கள்
இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்,
மாகந்துர,

(C-4193)

# கூகுள் பலூன் சிகிரியாவில்



இணையத் தள சேவையை துரிதப்படுத்துவதற்கான கூகுள் நிறுவனம் முன்னெடுக்கும் கூகுள் பலூன் வேலைத் திட்டத்தின் மற்றுமொரு பலூன் இலங்கை வான் பரப்புக்கு அனுப்புவதற்கான வேலைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சிகிரியாவில் நடைபெறும் "யோவுன் புரய" நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாக இந்த பலூன் வானுக்கு அனுப்பப்படவுள்ளது.

இந்த செயற்றிட்டத்தின் மூலம் நாடு முழுவதும் குறைந்த செலவில் இணைய சேவையினை பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு தொலைதொடர்புக் கோபுர உதவியின்றி இணைய வசதியைப் பெறும் உலகின் முதல் நாடாக இலங்கை மாற்றம் பெறும் என்பதும்குறிப்பிடத்தக்கது.(இ-5)

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு

(கொழும்பு)

தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அமைச்சர்களின் செயற்பாடுகள், செலவீனங்கள் தொடர்பான விபரங்களை ஊடகங்களும் பொது மக்களும் அறிந்து கொள்வதற்கு வழி செய்யும் வகையிலான தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதாக நல்லாட்சி அரசாங்கம் அதன் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

அதன் பிரகாரம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான வரைபு கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த சட்டமூலம் காரணமாக தமது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாகவும், எனவே குறித்த சட்டமூலத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் உத்தரவிடுமாறு கோரி நேற்று முன்தினம் உச்சநீதிமன்றத்தில் மூவர் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

இலங்கைத் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த இந்திக கமகே, இசுரு புத்திக ஆகியோரும், ஓய்வுபெற்ற லெப்டினண்ட் கேணல் அனில் அமரசேகர என்பவரும் இணைந்து இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்களில் அனில் அமரசேகர என்பவர் கடந்த காலங்களில் மகிந்த அணியின் அரசியல் செயற்பாடுகளில் கலந்து கொண்ட ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வடக்கு மாகாணத்திலிருந்து ராணுவக் குறைப்பை ஆயுத மீட்பு தடுக்கும்

## இந்தியன் எக்ஸ்பிரஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**வடக்கு மாகாணத்திலிருந்து ஆயுதங்கள் கண்டெடுக்கப்படுவது ராணுவ பிரசன்னத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு தடையேற்படுத்தி விடும் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.**

இலங்கையின் வடக்குப் பகுதியில் அண்மையில் தற்கொலைத் தாக்குதல் அங்கிகள், மோட்டார் எறிகணைகள் உள்ளிட்ட ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறித்து இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்டுள்ள செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பர்தான வேண்டுகோள் வடக்கில் இராணுவத்தின் எண்ணிக்கையைக் குறைப்பதாகும்.

வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைத்து பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதாக இலங்கை அரசாங்கமும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் உறுதியளித்துள்ளது.

ஆனாலும் வடக்கில் இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பான அரசாங்கத்தின் முடிவில் இராணுவத்தினர் அதிருப்தியுற்றிருந்தனர்.

இந்நிலையில், வடக்குப் பிராந்தியத்தில் இருந்து தற்கொலைத் தாக்குதல் அங்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் கண்டெடுக்கப்படுவது அப்பகுதியல் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைப்பதில் தடைகளை ஏற்படுத்தும் என்றும் குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது .(இ-5)

# அமைச்சர் ஜோன் அமரதுங்க கைது செய்யப்பட வேண்டும்

மாபோல வத்தளையில் நடைபாதை ஒன்று அகற்றப்பட்டமை தொடர்பில் சிங்ஹல ராவய நேற்று முன்தினம் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாட்டைசெய்துள்ளது.

இது தொடர்பில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவை கைது செய்ய வேண்டும்என்று அந்த முறைப்பாட்டில் கோரப்பட்டுள்ளது.

பொது உடமையான நடைபாதையை அகற்றிய குற்றச்சாட்டுக்காக அவரை கைது செய்ய வேண்டும் என்று சிங்ஹல ராவயவின் செயலாளர் மாகல்கந்த சுதத்த தேரர் கோரியுள்ளார். நாட்டின் சட்டத்துக்கு எதிராக செயற்படுபவர்கள் கைது செய்ய்படுவர்என்று ஏற்கனவே பிரதமர் எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஜெனிவாவில் முறையிட சென்றபோது

# பயணப் பொதிகளைத் தொலைத்த கம்மன்பில, பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகருக்கு சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில மற்றும் பந்துல குணவர்த்தனவின் பயணப் பொதிகள் காணாமல் போயுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

டலஸ் அழகப்பெரும, கம்மன்பில் மற்றும் பந்துல குணவர்தன ஆகியோர் தனி தனியாகவே ஜெனிவாவிற்கு சென்றுள்ளனர்.

அதற்கமைய உறுப்பினர்கள் மூவர் மூன்று விமானங்களில் ஜெனிவாவிற்கு சென்று கூட்டு எதிர்க்கட்சியாக யோசனை ஒன்றை ஒப்படைத்துள்ளனர்.

தமக்கு எதிராக நிதி குற்றப் புலனாய்வு பிரிவு மற்றும் அரசாங்கத்தினால் இடம்பெற்ற அநீதிகள் தொடர்பில் சர்வதேசத்திடம் அறிவிக்கவே சென்றுள்ளனர்.

உதய கம்மன்பில முதலாவதாக ஜெனிவாவை நெருங்கிய நிலையில் அங்கு தனது பயணப் பொதி காணாமல் போயுள்ளமை தொடர்பில் அறிந்துகொள்ள முடிந்துள்ளது. உரிய முறையில் தனது பயண பொதி விமானத்தில் ஏற்றவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. அதன் பின்னர் இது தொடர்பில் அவர் ஜெனிவா விமான நிலையத்தில் அறிவித்துள்ளார்.

அதன் பின்னர் பந்துல குணவர்தன ஜெனிவா நகரத்திற்கு சென்றுள்ளார். அவர் கம்மன்பிலவிடம் சென்று தனது பயண பொதி காணாமல் போயுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அதற்கு பதிலளிக்கும் வகையில் பொதி காணாமல் போனோர்சமூகத்திற்கு அழைப்பதாக தெரிவித்துள்ளார்.

பந்துல குணவர்த்தன தனது பயண பொதியில் அவசியமான உடைகளை வைதது கொண்டு வந்துள்ளார். எனினும் கம்மன்பிலவின் அனைத்து அவசியமான பொருட்களும் அடங்கிய பொதி காணாமல் போயுள்ளது. (இ-5)

# தேசிய பாதுகாப்பு குறித்து மகிந்த நாடாளுமன்றத்தில் விளக்கமளிக்க வேண்டும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஆயுதங்கள் மீட்கப்பட்டமை தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து என்ற விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்கு வந்து கூற வேண்டும்.

அதேநேரம் இந்த சம்பவம் தொடர்பாக தமக்கு கிடைத்துள்ள தக்வல்களை முன்னாள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ்வெளியிடவேண்டும்என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது கருத்துரைத்த அவர், மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு தொடர்பாக நாடாளுமன்றத்தில் கருத்துரைத்தால், அது தொடர்பில் விவாதிக்க முடியும் என்று தெரிவித்தார்.

இதேவேளை முன்னாள் அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், இந்த ஆயுதங்கள் வெள்ளவத்தைக்கு கொண்டுவரப்படவிருந்ததாக தெரிவித்த தகவல் தொடர்பில் பொலிஸார் அவரை விசாரணை செய்ய வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை பயங்கரவாதம் மீண்டும் தலையெடுக்க அனுமதிக்கப்படமாட்டாது. அத்துடன் இனவாதத்துக்கு இடமளிக்கப்படாது என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (இ-5)

# மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் செயற்படுங்கள்; ஓய்வுக்கு முன்னர் பொலிஸ்மா அதிபர் அறிவுரை

(கொழும்பு)

மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் செயற்படுங்கள். இதுவே எனது 36 வருட பொலிஸ் சேவை அனுபவத்தின் ஊடாக உங்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்பும் செய்தி என பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்தார்.

பொலிஸார் குறித்து தகவல்களை வெளிப்படுத்தும் "தேச" என்ற வருடாந்த சஞ்சிகையின் வெளியீட்டு வைபவத்தில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



சபாநாயகர் கரு ஜயசூரிய பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்த வைபவத்தில், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மத்தியில் தொடர்ந்து உரையாற்றிய பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 11 ஆம் திகதியுடன்நான்பொலிஸ்சேவையில் இருந்து ஓய்வு பெறுகிறேன். 1982 ஆம் ஆண்டு நான் எத்தகைய சந்தோஷத்துடன் பொலிஸ் சேவையில் இணைந்தேனோ அதே சந்தோஷத்துடனேயே ஓய்வு பெறுகிறேன். எனது பதவிக் காலத்தில் எனக்கு அனைத்து நிலை உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்பு வழங்கினர். அதனாலேயே என்னால் வெற்றிகரமாக செயற்பட முடிந்தது.

நான் பொலிஸ்மா அதிபர் பதவியை எதிர்பார்த்து சேவை செய்யவில்லை. அந்த பதவி என்னை தேடி வந்தது. அதனையே நான் உங்களுக்கும் கூறுகிறேன். பதவியை எதிர்பார்க்க வேண்டாம். மனச்சாட்சிக்கு அமைவாக சேவை செய்யுங்கள். பதவிகள் உங்களை நாடி வரும். பதவிகளைப் பெற்றுக்கொள்ள யாரின் பின்னாலும் சிபாரிசுக்களை எதிர்பார்த்து செல்லாதீர்கள்.

அப்போது தான் உங்களால் சுயாதீனமாக கடமைகளை செய்ய முடியும். எனது 36 வருட பொலிஸ் சேவையில் இருந்து உங்களுக்கு சொல்ல நான் விரும்புவது மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் கடமைகளை செய்யுங்கள். அவ்வளவுதான் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)



# இந்திய அணியின் தோல்வியை கொண்டாடிய பங்களாதேஷ் வீரர் ரஹீம்

## கண்டனத்தையடுத்து மன்னிப்பும் கேட்டார்




அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்து டுவிட் பதிவேற்றிய பங்களாதேஷ் வீரர் முஷ்பிகுர் ரஹீம் தனது செயலுக்கு வருத்தமும் தெரிவித்துள்ளார்.

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியிடம் இந்திய அணி வீழ்ந்தது.

இதனால் இந்திய ரசிகர்கள் அனைவரும் கவலையடைந்தனர். இந்நிலையில் இந்திய அணியின் தோல்வியை கொண்டாடும் விதமாக பங்களாதேஷ் அணியின் விக்கெட் காப்பாளர் முஷ்பிகுர் ரஹீம் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

அதில், இந்திய அணித்தலைவர் தோனியின் புகைப்படத்தை பதிவேற்றி, இந்திய அணி அரையிறுதியில் தோல்வி அடைந்தது மகிழ்ச்சி அளிக்கிறது என்று குறிப்பிட்டு இருந்தார்.

இந்த பதிவு இந்திய ரசிகர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

இதையடுத்து ஏராளமான ரசிகர்கள் அவரது பதிவுக்கு கண்டனங்கள் தெரிவித்து தங்களின் பதில்களை பதிவேற்றினர்.

ஒரு சிலர் அவருக்கு மிரட்டலும் விடுத்தனர். இதையடுத்து அந்த பதிவை நீக்கிய ரஹீம் தனது செயலுக்கு மன்னிப்பு கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது பதிவில், அனைவரும் என்னை மன்னித்து விடுங்கள். நான் மேற்கிந்திய தீவுகள் அணியின் ரசிகர் என்பதால் இவ்வாறு பதிவிட்டேன்.

எனினும் எனது கடினமான வார்த்தைகளுக்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (க)

## இந்தியா தோல்வியடைந்ததால் இன்ஜினியரிங் மாணவி தற்கொலை

உலக கிண்ணம் அரையிறுதி போட்டியில் இந்தியா அணி தோல்வியடைந்ததால் இன்ஜினியரிங் மாணவி ஒருவர் தற்கொலை செய்துகொண்டதாக நெஞ்சை உருக்கும் தகவல் வெளியாகியுள்ளது.


நேற்று முன்தினம் நடைபெற்ற உலக கிண்ணம் அரையிறுதி போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா தோல்வியடைந்தது. இந்த தோல்வியால் ரசிகர்கள் கவலையடைந்தனர்.

இந்நிலையில், மத்திய பிரதேச மாநிலத்தின் குவாலியர் நகரில் உள்ள இன்ஜினியரிங் கல்லூரியில் பயின்று வரும் மாணவி ஒருவர் இந்திய அணியின் தோல்வி காரணமாக தற்கொலை செய்து கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

தனது குடும்பத்தினரிடம் இந்தியா கண்டிப்பாக ஜெயிக்கும் என்று கூறி வந்த அந்த மாணவி இந்தியாவின் தோல்வியால் கடும் அதிர்ச்சியடைந்துள்ளார்.

இதையடுத்து தனது துப்பட்டாவால் தூக்கிட்டு அவர் தற்கொலை செய்து கொண்டதாக முதற்கட்டத் தகவல்கள் வெளியாகியுள்ளது. (க)

## இந்திய அணியின் தோல்விக்கு தோனி சொல்லும் காரணம்




ரி20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதி போட்டியில் மேற்கிந்திய அணியிடம் இந்தியா 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவி இறுதிப் போட்டி வாய்ப்பை நழுவவிட்டது.

இந்நிலையில் இந்திய அணியின் தோல்விக்கான காரணம் குறித்து அணித் தலைவர் தோனி கூறுகையில்,

பனிப்பொழிவும், இரண்டு நோபோல்களும் தோல்விக்கு காரணம் எனக் கூறியுள்ளார்.

அத்துடன் நாங்கள் நாணயசுழற்சியில் தோற்றது பின்னடைவை ஏற்படுத்தியது, பனிப்பொழிவு காரணமாக ஸ்பின்னர்களால் பந்து வீச்சை சரியான முறையில் பற்ற முடியாமல் போய்விட்டது.

இந்த போட்டியை வெற்றிக்கு திருப்ப வேண்டும் என்று நினைத்தோம், ஆனால் 2 நோபால்கள் எங்களை ஏமாற்றிவிட்டது.

ஆனால் பிட்ச் உள்ளிட்ட சூழ்நிலைகள் கடினமாக இருந்த போதிலும், எங்களால் முடிந்த அளவு முயற்சி செய்து விளையாடினோம் என அவர் மேலும் கூறியுள்ளார். (க)


# INVITATION FOR BIDS TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct Cost of the work (Rs.In Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation of NTS Students Hostel First Floor | 500.00 | 215,000.00 | 91 | 10.78 | C6 |
| 2. | Renovation of NTS Students Hostel Ground Floor | 500.00 | 115,000.00 | 91 | 5.56 | C7 |
| 3. | Repairing Medical Clinic Complex Roof | 500.00 | 110,000.00 | 91 | 5.50 | C7 |
| 4. | Renovation of Wards 27 & 28 | 500.00 | 65,000.00 | 91 | 3.04 | C8 |
| 5. | Renovation of Ward 30 | 500.00 | 45,000.00 | 91 | 2.10 | C8 |
| 6. | Construction of Clinic Book Issuing Place and Record Room at Clinic Complex | 500.00 | 25,000.00 | 91 | 1.11 | C9 |
| 7. | Renovation of X-Ray Depart ment Toilets & Renovation of Old Police Post Area as Canteen | 500.00 | 25,000.00 | 91 | 1.09 | C9 |

2.Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

3.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD)

4.Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

5.A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 04.04.2016 up to 19.04.2016 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

6.Sealed bids Shall be delivered to the address below at or before 10.00 hrs on 20.04.2016, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital Jaffna.**
**02/04/2016.**

(சி-4186)

# முதலீட்டு வருமான வரியை அரசாங்கம் நீக்காவிட்டால் முதலீடுகள் வீழ்ச்சியடையும்

## முதலீட்டுச் சந்தைக் கட்டுப்பாட்டாளர் பிரதமருக்கு சுட்டிக்காட்டு

முதலீடுகள் மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள முதலீட்டு வருமான வரியை நீக்குமாறு இலங்கை முதலீட்டுச் சந்தை கட்டுப்பாட்டாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு பங்கு பரிவர்த்தனைக்கு விதிக்கப்பட்டுள்ள முதலீட்டு வருமானவரியை விலக்கிக் கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். இந்த வரி விலக்கிக் கொள்ளப்படும் என நாங்கள் நம்புகின்றோம் என பாதுகாப்பான பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழுத் தலைவரான கருணாரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த அரசாங்கத்தின் நிதி முகாமைத்துவ தவறுகளைத் திருத்துவதற்காக புதிய அரசாங்கம் இயலுமைக்கு அப்பாற்பட்ட விதத்தில் செயற்படுவதனாலேயே தற்போதைய நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் நாணயப்பெறுமதி என்பன வீழ்ச்சியடைவதாக நியாயப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலைமையில் நாணய விகிதம் வீழ்ச்சியடைந்து காணப்படுமானால் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலிடுவதற்கு முன்வர மாட்டார்கள்.

வரிகள் மீதான மீளாய்வில் முதலீட்டு வருமானவரியானது கொழும்பு பங்குபரிவர்த்தனையில் அதிகதூரம் சென்றுவிட்டது. இதனால் பங்குச்சந்தை நடவடிக்கைகள் கடுமையாக பாதிப்படையும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதலீட்டு வருமான வரியை அமுல்படுத்துவதற்கு அழுத்தம் கொடுத்துள்ளார். ஏனென்றால் 80 வீதமான நாட்டுமக்கள் அதிகளவு வரியைச் செலுத்துகின்ற அதே நேரத்தில் 20 வீதமான முதலீட்டாளர்கள் 80 வீதமான முதலீடுகளைக் கொண்டுள்ளனர். மத்திய தரவகுப்பு மக்கள் பங்குச்சந்தை நடவடிக்கையில் தீவிரமாக பங்கு கொள்ள வேண்டும் என்பதே பிரதமரின் எதிர்பார்ப்பாகும்.

தாய்லாந்து, மலேசியா, கொங்கொங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் முதலீட்டு வருமானவரி பூச்சியமாகும். இந்தோனேஷியாவில் 0.1 வீதமாகும். ஜப்பானில் 10வீதமும் அமெரிக்காவில் குறுகிய காலப்பகுதிக்கும் நீண்ட காலப் பகுதிக்கு அடைப்புக்குறிக்குள் 0-20 வீதமும் என காணப்படுகிறது.

இவை வளர்ச்சியடைந்த பங்குச்சந்தைகளாகும். அரசாங்கம் முதலீட்டு வருமான வரியை அமுல்படுத்துமாயின் அதுதற்போதுள்ளநிலைமையை மேலும் சீர்கெடச் செய்யும். முதலீட்டு வருமான வரிக்குப் பதிலாக பங்குப் பரிவர்த்தனை வரியை அரசாங்கம் அமுல்படுத்த முனைகிறது:

இந்தவரியை நீக்குமாறு யாரும் கோரவில்லை. இதன் மூலம் 1.3பில்லியன் வருமானம் கிடைக்கிறது. அது செலுத்தப்படக்கூடியது.

முதலீட்டு வருமானவரியை நீக்கும் எமது கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என தாம் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3)

# ஸ்தாபகர் தினமும் பரிசில் நாளும் நாளை

யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஸ்தாபகர் தினமும் பரிசில் நாளும் நாளை 3 ஆம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறும். மேற்படி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அச்சுவேலி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் சி.நந்தகுமார், சிறப்பு விருந்தினராக லண்டன் கட்டட பொறியியலாளர் வைகோபால் சங்கரப்பிள்ளை, கௌரவ விருந்தினராக இக்கல்லூரியின் ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி ம.சிவசிதம்பரலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். ஸ்தாபகர் நினைவுப்பேருரையை இக்கல்லூரியின் ஆசிரியர் தி.செல்வமனோகரன் நிகழ்த்துவார். (இ)


## நீங்கள் ஓய்வுபெற்று விட்டீர்களா?

நீங்கள் வெற்றிகரமான எதிர்காலம் ஒன்றை தெரிவு செய்ய விரும்புகிறீர்களா?...
எமது சர்வதேச நிறுவனத்துடன் இணைந்து நீங்கள் விரும்பிய அளவு சம்பாதிக்கும் திறனுக்கு உங்களை பலப்படுத்திக் கொள்ளுங்கள்.

**தகைமை**

- வயது:-50-60
- பகுதிநேர வேலை செய்ய விரும்புபவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

(4068)

**உங்கள் பயணத்தினை இப்பொழுதே ஆரம்பியுங்கள்.**

Contact: No. 62/6, Stanley Road, Jaffna.
077 712 1868, 077 362 0981


## பொருளாதாரத் தடையால்

# வடகொரியாவில் மீண்டும் பஞ்சம்


## அரசு எச்சரிக்கை

வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் அரசாங்க பத்திரிகையான ரோடோங் சின்முன் ஒரு பரபரப்பு செய்தியை வெளியிட்டுள்ளது.

அதில், 'குடிமக்களே, வடகொரியா நாட்டை தாக்க மீண்டும் ஒரு கடுமையான பஞ்சம் ஏற்பட போகிறது. மரங்களின் வேர்களை மீண்டும் சாப்பிடுவதற்கான சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த பஞ்சத்தை எதிர் கொள்ள குடிமக்கள் தயாராக இருக்கும்படி' அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்லாமல், 'இந்த பஞ்சத்தில் உயிரிழப்புகள் ஏற்பட்டாலும், ஜனாதிபதியும் அரசாங்கத்தையும் குறை கூறக் கூடாது. நமது உயிரை கொடுத்தாவது அரசாங்கத்தின் பெயரை காப்பாற்ற வேண்டும்' என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)


# 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



கிருஷ்ணராஜா கிருஷ்ணரூபன்
பிறப்பு:- 1980.10.12
இறப்பு:- 2009.04.02

(4030)

அன்புச் செல்வங்களே
வளர்பிறைபோல் வாழ்ந்தீர்கள்
காலத்தின் சூழ்நிலையால்
தேய்பிறை போல் மறைந்து
விட்டீர்களே
ஏழு ஆண்டுகள் ஆனதே
உங்கள் அன்னை, தந்தை, மகன்,
சகோதரிகள், மைத்துனர்,
மருமக்கள் மற்றும் உறவுகளை
உங்கள் பிரிவின் துயரம்
அனலென நெஞ்சில் எரிக்கிறதே.
சாந்தி!



கிருஷ்ணராஜா மயூரதன்
பிறப்பு:- 1987.04.15
இறப்பு:- 2009.04.21

உடையார்கட்டு வடக்கு,
உடையார்கட்டு.

தகவல்:
தந்தை- க.கிருஷ்ணராஜா

# இராசி பலன்

02.04.2016
(பங்குனி 20, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு
தசமி பின்னிரவு 3.08 மணிவரை
உத்தராடம் முற்பகல் 10.13 மணிவரை
சுபநேரம் 3.10-4.40 மணிவரை
இராகுகாலம் 9.10-10.40 மணிவரை

| | | | |
|---|---|---|---|
| சூரி சுக் | புத | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் புனர்பூசம் | | |
| சந் | | | குரு ராகு |
| | சனி, செவ் | | |

**வளவன்**

**மீனம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மேடம்:** தொழில் ரீதியாக புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், கனவு பலிதமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**இடபம்:** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், அதிகம் செலவாகுமென நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, பிரயாண பயமுண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** உறவினர்கள் நலன்கருதிய செலவுகள் இடம்பெறலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்வது பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கடகம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள்.

**சிம்மம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**தனுசு:** நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, தொலைபேசி அழைப்புக்கள் மகிழ்ச்சி தரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


**விருச்சிகம்:** உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், வெற்றிகரமான தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள்.

**கன்னி:** உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

# நயினாதீவில் புத்தர் சிலை அமைப்பு விவகாரம் வடமாகாணசபை உறுப்பினர்கள் நேரில் விஜயம்





நயினாதீவு புத்தவிகாரையின் பிக்குவினால் கடலில் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டு வரும் புத்தர்சிலை விவகாரமானது உலகெங்குமுள்ள இந்துக்கள் மற்றும் தமிழர்கள் மத்தியில் அதிர்வலைகளையும் அதிருப்திகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் பிரதேச மக்களின் வேண்டுகோளையடுத்து, மக்களின் நிலையை அறிந்து கொள்ளவும் நிலைமைகளைப் பார்வையிடவும் நேற்று முன்தினம் வடமாகாணசபை உறுப்பினர்கள் நயினாதீவுக்கு நேரில் விஜயம் செய்து பார்வையிட்டு, மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து கொண்டனர்.

வடமாகாணசபை உறுப்பினர்களான பா.கஜதீபன் மற்றும் விந்தன் கனகரத்தினம் ஆகியோருடன் காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் வே.ஆனைமுகன், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் ஆகியோர் நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுவரும் இடத்திற்கும் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் மக்களுடன் கலந்துரையாடி நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

உள்ளூரில் பல அடிப்படைக் கட்டமைப்புக்கள் மேற்கொள்ளப்படாத நிலையில், அத்தியாவசிய சேவைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள சூழ்நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் குறித்து மக்கள் அதிருப்தி வெளியிட்டதுடன், இவ்வாறான அடிப்படைவாத செயல்களை தடுத்து நிறுத்துமாறும் கோரிக்கைவிடுத்தனர்.

தம்முடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட மக்களிடம் அவர்களது கருத்துக்களை பகிரங்கமாக வெளிப்படுத்துவதில், ஒருவிதமான தயக்க நிலை காணப்படுவதை தாம் அவதானித்ததாக வடமாகாணசபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.(இ-89)

## தங்கம் நூல் வெளியீடும் ஞாபகார்த்த அஞ்சலியும்

சமூகப் போராளி அமரர் க. தங்கவடிவேலின் தங்கம் நூல் வெளியீடும் ஞாபகார்த்த அஞ்ச லியும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் கம்பர் மலைபொன் கந்தையா சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (இ)

## கல்வியியலாளன் ஆய்விதழ் நூல் வெளியீட்டு விழா

கல்வியியலாளன் ஆய்விதழ் எனும் நூல் வெளியீட்டு விழா கோப்பாய் யாழ்ப்பாணம் தேசிய கல்வி நிலையத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் தேசிய கல்வி நிலையத்தின் தலைவர் எஸ். அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ)

## இசையரங்கு

இணுவையூர் ரசிகப் பிரியாசபா கலை வளர்ச்சி மையத்தின் மாதாந்த இசையரங்கு,தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு இணுவையூர் வி.கே குகானந்தன் தலைமையில் நடை பெறவுள்ளது. (இ

# குறைந்த விலையில் காளானை கொள்வனவு செய்ய ஏற்பாடு

யாழ்.மாவட்டத்தில் உள்ள உணவகங்களுக்கு குறைந்த விலையில் காளானை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் செய்து கொடுக்கப்படும் என யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள மாகாண விவசாயப் பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம் தெரிவித்துள்ளார். இது தொடர் பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் காளான் பயிருக்குரிய தேவை அதிகரித்துக் காணப்படுகிறது. அதற்கு ஏற்ற வகையில் காளான் உற்பத்தியிலும் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் உள்ள உணவகங்களுக்கு காளான் அதிகளவில் தேவைப்படுகின்றது.

காளான் உற்பத்தியை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு அதற்குரிய பயிற்சிகளையும் உதவிகளையும் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் வழங்கிவருகிறது.

ஆனால் காளான் தேவை உடையவர்களுக்கு உரிய முறையில் காளான் உற்பத்தியாளர்களின் தொடர்புகள் கிடைக்காமையினால் கொள்வனவு செய்வதில் பாரிய சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அவர்கள் குறிப்பாக உணவக உரிமையாளர்கள் வெளி மாவட்டங்களில் இருந்து அதி கூடிய விலைக்கு அதாவது ஒரு கிலோ காளானை ஆயிரம் ரூபாவிற்கும் கொள்வனவு செய்கிறார்கள்.

ஆகவே காளான் தேவை உடையோருக்கு குறிப்பாக உணவகங்களின் உரிமையாளர்களுக்கு அவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் ஆர்வமுள்ளவர்களுக்கு பயிற்சிகளையும் காளான் தேவைப்படுபவர்களுக்கு காளான் உற்பத்தியாளர்களின் தொடர்புகளை ஏற்படுத்தி கொடுக்கமுடியும். அத்துடன் ஒரு கிலோ காளானை 400 ரூபாய்க்கு பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

இதன் மூலம் இங்குள்ள காளான் உற்பத்தியாளர்களுக்கும் தரமான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## க.பொ.த. (சா/த) பெறுபேறுகள்-2015

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

ரி.விதுசன்-6ஏ2பிஎஸ், ரி.துளசிதரன்- 2பி2சி3எஸ், எஸ்.சுவஸ்திகா-பி4சி2எஸ், எஸ்.சுதர்மிலா-பி2சி3எஸ், யே.சாயிக்குமரன்-2சி6எஸ்.




## நூலாய்வுக் கருத்தரங்கு

இரட்டைத் தேகியமும் பண்பாட்டுப் புரட்சியும் நூலாய்வுக் கருத்தரங்கு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு சமூக செயற்பாட்டாளர் வை.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ

## பண்டிதர் கணபதிப்பிள்ளையை நினைவு கூரும் நிகழ்வு நாளை

பண்டிதமணி சிகணபதிப்பிள்ளை அமரத்துவமடைந்த முப்பதாவது ஆண்டு நினைவு கூரும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை கலாசாலை வீதி, பண்டிதமணி இல்லத்தில் மாலை 3 மணிக்கு நிகழவுள்ளது.

இந் நிகழ்வில் அவர் எழுதிய கந்தபுராண போதனை என்னும் நூல் மீள்பதிப்புச் செய்து வெளியிடவுள்ளது. (இ

# வர்ணஇரவு விருதிற்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படவுள்ள வர்ண இரவு விருதிற்கான விண்ணப்பங்கள் கல்லூரியின் பழைய மாணவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்துள்ளார்.

மத்திய கல்லூரியில் கல்வி கற்று விளையாட்டுத்துறை அமைச்சு, கல்வியமைச்சு, இளைஞர் விவகார அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சில் பதிவு செய்யப்பட்ட தேசிய மட்ட சங்கங்கள் போன்றன நடத்திய போட்டிகளில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டியவர்கள், தேசிய அணியில் இடம் பெற்றவர்கள், சர்வதேச போட்டிகளில் கலந்துகொண்டவர்கள், சர்வதேச போட்டிகளில் வெற்றியீட்டியவர்கள் ஆகிய பழைய மாணவர்களிடமிருந்து இவ் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இவ் வர்ண விருதிற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் சான்றிதழ் பிரதியுடன் விண்ணப்பிக்க முடியும்.

தேர்வு செய்யப்படும் வீரர்களிற்கான கௌரவிப்பு கல்லூரியின் 200 ஆவது ஆண்டின் வர்ண விருது வழங்கும் விழாவில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பப்படிவங்களையும் சான்றிதழ்களையும் 28.04.2016 இற்கு முன்னதாக அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். அல்லது jcentralprin@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்க முடியும் என அதிபர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5-21)

## பெருந்திருவிழா

யாழ்.அத்தியடி அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகும்.

எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய்வடக்குகணேசா சனசமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நிலைய மண்டபத்தில் சனசமூக நிலைய தலைவர் கு.சண்முகநாதன் தலைமையில் இடம் பெறும்.

இதில் 12.01.2014 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல், கணக்கறிக்கை சமர்ப்பித்தல், புதிய நிர்வாகசபைத் தெரிவு என்பனவும் இடம்பெறும். (இ

# 331 முதிரைக் குற்றிகள் தம்பசிட்டி பகுதியில் மீட்பு

## ஒருவர் பொலிஸாரால் கைது




பருத்தித்துறை தம்பசிட்டி வீதியில் உள்ள காணி ஒன்றினுள் அனுமதிப்பத்திரமின்றி வைக்கப்பட்டிருந்த 331 முதிரைக் குற்றிகள் மீட்கப்பட்டதுடன் அதன் உரிமையாளரை தாம் கைது செய்துள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலைய தலைமைப்பீடப் பொலிஸ் பரிசோதகர் நுவான் பி.டந்தநாராயணா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் பருத்தித்துறை தம்பசிட்டி பகுதிக்கு வந்த காங்கேசன்துறை பிராந்திய பொலிஸார் பருத்தித்துறைப் பொலிஸாருடன் இணைந்து முதிரைக் குற்றிகளை மீட்டனர்.

வெற்றுக் காணி ஒன்றினுள் அனுமதிப் பத்திரமின்றி வைக்கப்பட்டிருந்த 331 முதிரைக் குற்றிகள் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது பல இலட்சம் ரூபாய் பெறுமதியானது. அதன் உரிமையாளரான 28 வயதுடைய இளைஞனையும் கைது செய்ததாகத் தெரிவித்த பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தனர். (இ-60)





யாழ். நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் ம.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற போது...

# நவீனமாகிறது பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் ஜப்பான் அரசாங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்து

## அமைச்சரவை ஏற்கனவே அனுமதி கொடுத்துள்ளது–நிமால் சிறிபால டி சில்வா

2020 ஆம்ஆண்டளவில் 15மில்லியன் பயணிகளை கையாளக்கூடிய வகையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை தர முயர்த்தும் பொருட்டு கட்டட நிர்மாணப்பணிகள் ஆரம் பிக்கப்படவுள்ளதாக போக்கு வரத்து மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரி வித்துள்ளார்.

மேற்படி செயற்றிட்டத் தின் ஒருபகுதிக்கு ஜப்பானிய அரசாங்கம் நிதியுதவி அளி க்க முன்வந்துள்ளது.இது தொட ர்பான ஒப்பந்தம் நேற்று முன் தினம் கைச்சாத்திடப்பட்டுள் ளது. இத்திட்டத்திற்கென 49 பில்லியன் ரூபாவை வழங்கு வதற்கு ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்புக்கான நிறுவ னம் உடன்பட்டுள்ளது. 4வரு டங்கள் கொண்ட மேற்படி செயற்றிட்டத்திற்கு 83 பில் லியன் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டளவில் இலங்கையை சுற்றுலா, தக வல் தொழில்நுட்பம்,விமான சேவை மற்றும் கடற்போக்கு வரத்து போன்ற துறைகளில் கேந்திர நிலையமாக மாற்று வதற்கு திட்டம் தீட்டப்பட்டுள் ளதுஉயர்திறன் கொண்ட நவீன சர்வதேச விமானநிலையம் இலங்கைக்கு மிகவும் தேவை யாகவுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டே பண்டார நாயக்க சர்வதேச விமான நிலை யத்தை தரமுயர்த்துவ தற்குத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்திற்கு அமைச் சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலை யில் இந்தமாதம் இந்தப் பணி கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கட்டட நிர்மாணப்பணிகள் மற் றும் அபிவிருத்திப் பணிகள் என்பவற்றை ஏற்கனவே ஜப் பானிய அரசாங்கம் செய்து கொடுத்திருந்தது.

இவை திருப் திகரமாக இருப்பதனால் இப் பணி களை மேற்கொள்வதற் கான ஒப்பந்தம் ஜப்பானுடன் செய் யப்பட்டுள்ளதாக அமை ச்சர் மேலும் சுட்டிக்காட்டியு ள்ளார்.

இதேவேளை யாழ்ப்பா ணம் பலாலி விமான நிலை யத்தை இந்திய அரசாங்கம் அபிவிருத்திசெய்ய முன்வந்த போதும் அதற்கான நடவடிக் கைகள் குறித்து அமைச்சர் கருத்து எதனையும் தெரிவிக்க வில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (3)

# சாப்பாடில்லாமல் உயிரிழப்புகள் ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளன

அன்றாடசாப்பாட்டிற்கேஎமது குடும்பத்தில்பெரும்பிரச்சினை ஏற்பட்டுள்ளது.தொடர்ந்தும் சம் பளம் கிடைக்காமல் இருப்பத னால் சாப்பாடு இல்லாமல் உயிரிழப்புக்கள் கூட ஏற்பட வாய்ப்பிருப்பதாக திக்கம் வடி சாலையில் பாதுகாப்புப் பணி யில் 27 மாதங்களாக சம்ப ளம் வழங்கப்படாமல் பணிபுரி யும் 6 பணியாளர்களினால் வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடி தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களால் கடந்த 25 ஆம் திகதியிடப்பட்டு அனுப்ப ப்பட்ட கடிதத்தில் மேலும் தெரி விக்கப்பட்டிருப்பதாவது,

திக்கம் வடிசாலையில் பணி யாற்றிவரும் ஆறு பணியா ளர்களான எமக்கு மாதச் சம் பளம் வழங்கப்படாது ஐந்து தடவைகள் சம்பள முற்பண மாக 60 ஆயிரம் மட்டும் வழ ங்கப்பட்டது.

சம்பளம் வழங்கப்படாது நாம் கடமையாற்றிவரும் கால ங்கள் இன்றுவரை 27 மாதங் களாகும். இறுதியாக சம்பள முற்பணம் இவ்வருடம் மாசி மாதம் 15 ஆயிரம் ரூபா மட் டும் வழங்கப்பட்டது என அக் கடிதத்தில்மேலும்சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (இ-60)

# ரவிராஜ் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் நட ராஜா ரவிராஜ் மற்றும் அவ ரது மெய்ப்பாதுகாவலர் படு கொலை செய்யப்பட்ட சம் பவம் தொடர்பிலான வழக் கின் சந்தேக நபர்களின் விள க்கமறியல் காலம் எதிர்வ ரும் 6 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.



ரவிராஜ் கொலை வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது கொழும்பு மேல திக நீதவான் திலின கமகே இந்த உத்தரவினை பிறப்பித் துள்ளார்.

சிறைச்சாலை அதிகாரி கள் சந்தேக நபர்களை நீதி மன்றில் முன்னிலைப்படுத் தியிருந்தனர்.

சந்தேக நபர்களை தொடர்ந் தும் விளக்கமறியலில் வைக் குமாறு நீதவான் உத்தரவிட் டுள்ளார்.

அரச தரப்பு சாட்சியா ளராக மாறிய பிரித்விராஜ் மற்றும் சந்தேக நபர்களான காமினி செனவிரட்ன, பிர சாத் சந்தன குமார மற்றும் பிதீப் சமிந்த ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களுக்கு எதி ராக உயர் நீதிமன்றில் வழக் குத் தொடர போதுமானளவு சாட்சியங்கள் காணப்படுவ தனால் வழக்கை உயர் நீதி மன்றில் விசாரணை செய் யுமாறு கடந்த 16 ஆம் திகதி உத்தரவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மேலதிக நீத வான் திலின கமகேவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது. (இ-5)

# மகிந்தவிற்கு குண்டு துளைக்காத வாகனத்தை விரைவில் வழங்கவும்

## ஜகத் குமார பஸ்நாயக்க கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு குண்டு துளைக்காத வாகனத்தை பழுதுபார்த்து விரைவில் வழங்குமாறு. மேல் மாகாண முன்னாள் அமைச்சர் ஜகத் குமார பஸ்நாயக்க கோரியு ள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஊடகங்க ளின் ஊடாக அவர் இதனைக் கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குண்டு துளைக்காத வாகனம் நீண்ட காலமாக பழுதடைந்த நிலை யில் காணப்படுகின்றது.

இதனைத் திருத்திக் கொடு க்குமாறு ஜனாதிபதி பணிப் புரை விடுத்துள்ளார். எனி னும். இதுவரையில் குறித்த வாகனம் பழுதுபார்க்கப்பட வில்லை.

அரசியல்பேதங்கள் பாராது உண்மையான உணர்வு டன் வாகனத்தை பழுதுபார் க்க ஜனாதிபதியின் செயலா ளர் நடவடிக்கை எடுக்க வேண்டு மென ஜகத் குமார பஸ்நா யக்க மேலும் தெரிவித்துள் ளார். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா:40செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:O/Lகனடா PR<br>தொ.இ: B/4075 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 7<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:பிரான்ஸ் மட்டும்<br>தொ.இ: G/4886 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 18செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>அவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4077 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 21<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4887 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 24செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/Lகனடா PR<br>தொ.இ: B/4080 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 32செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/4888 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 14சூரி செவ் 3 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BBM/தனியார் தொழில்<br>தொ.இ: B/4081 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 73 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/4891 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# வலம்புரிச் செய்தியை அடுத்து மத்திய வங்கி பெயர்ப்பலகையின் சொற்பிழைகள் திருத்தம்

வலம்புரிச் செய்தியையடுத்து கிளிநொச்சி அறிவியல்நகர் பகுதியில் அமைந்துள்ள மத்திய வங்கியின் பிரதேச அலுவலகத்திற்கு செல்லும் பாதையை அடையாளப்படுத்தும் பெயர்ப்பலகையில் இருந்த பல தமிழ்ச் சொற்பிழைகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.




வலம்புரிப் பத்திரிகையில் கடந்த மாதம் 25 ஆம் திகதி மத்திய வங்கிப் பாதையை அடையாளப்படுத்தும் பெயர்ப் பலகையில் தமிழ்ச் சொற்பிழைகள் எனும் தலைப்பில் செய்தி வெளியாகி இருந்தது.

இதனையடுத்து குறித்த பெயர் பலகையில் இருந்த சொற் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த பெயர்ப்பலகையில் பல்வேறு தமிழ் சொற் பிழைகள் காணப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அத்துடன் தமிழ்மொழியை கொச்சைப்படுத்துவதாகவும் தெரிவித்திருந்தனர்.

இலங்கை மத்திய வங்கி பிரதேச அலுவலகம் கிளிநொச்சி என்ற பெயர்ப் பலகையில் பிர(நே)ச, அலுவல(ச)ம் கிளி(தொக)சி என சொற்பிழைகள் விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-31)

# இரணைமடுக்குளத்தின் நீர் கடலை சென்றடைவதால் மீனவர் பாதிப்பு

(திருமுறிகண்டி)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் நீர் ஆனையிறவு கடல் நீரேரியை தொடர்ச்சியாக வந்தடைந்து கொண்டிருப்பதால் இறால் பெருக்கம் பாதிக்கப்பட்டுள்ளதாக அப் பகுதி கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இரணைமடு குளத்தின் புனரமைப்பு பணிகள் காரணமாக குளத்தின் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இரணைமடுக்குளத்தின் நீர் கடலை நோக்கி சென்றடைகின்றன. இக்கடல் ஏரியை நம்பி ஆயிரத்து 500 குடும்பங்கள் வாழ்கின்றன.

இவ்வாறு தண்ணீர் திறந்து விடப்பட்டதால் தாம் வாழ்வாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமக்கு நிவாரண உதவிகள் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-3-31)

## கிளி.,முல்லை.மாவட்டங்களை சேர்ந்த

# கால்களை இழந்துள்ள 26 பேருக்கு செயற்கை கால்கள் பொருத்தப்பட்டன



(சோலைநகர்)

எஸ்.ரி.எ.சொலிடரிற்ரி பௌண்டேஷன் மற்றும் வாழ்வுதயம் அமைப்பு என்பன இணைந்து கிளிநொச்சி.முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கால்களை இழந்த செயற்கை கால்கள் பொருத்த வேண்டிய தேவையுடையவர்களுக்கு செயற்கைக்கால் பொருத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் தர்மபுரம் பொதுக்கட்டடத்தில் நிறுவனத்திட்டப்பணிப்பாளர் வே.வாமதேவன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது 26 பேருக்கு செயற்கைக்கால் பொருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-3-309)

# முல்லைத்தீவு மாஞ்சோலையில் வார இறுதிச்சந்தை; மாட்டிறைச்சி தவிர்ந்த பொருட்கள் விற்பனைக்கு இரவு வரை சந்தை திறந்திருக்கும்

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முல்லைத்தீவு பிரதேசத்தின் வார இறுதிச் சந்தை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு மாஞ்சோலை வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை ஆகியன இணைந்து திறந்து வைக்கவுள்ளன.

இச்சந்தையில் பொதுமக்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யக்கூடியதாகவும் கொள்வனவு செய்யக் கூடியதாகவும் இருக்கும்.தென்பகுதிகளில் இயங்கும் வார இறுதிச் சந்தைகளைப் போன்று இரவு வரை இச் சந்தை திறந்து இருக்கும்.

இங்கு மாட்டிறைச்சி தவிர்ந்த ஏனைய பொருட்கள் யாவும் கொள்வனவு மற்றும் விற்பனை நடவடிக்கைக்காக வரி அறவீடு இன்றி தொடர்ச்சியாக வாராந்தம் ஞாயிறு சந்தையாக நடைபெறுமெனவும் இதனால் உள்ளூர் மற்றும் வெளி யூர் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் நன்மை அடைவார்கள் எனவும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் எஸ்.குணபாலன் அறிவித்துள்ளார். (2-3-292)




# கிளி.மாவட்டத்தில் 7ஆயிரத்து 891 குடும்பங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான வசதிகள் இல்லை

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏழாயிரத்து 891 குடும்பங்கள் மின்சார கட்டுமானவசதிகள் இன்றிக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 41 ஆயிரத்து 934 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.

இந்நிலையில் கரைச்சி. கண்டாவளை. பூநகரி. பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் 26 ஆயிரத்து 737 குடும்பங்களுக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைவிட 7 ஆயிரத்து 332 குடும்பங்கள் மின்சார கட்டுமான வசதிகள் உள்ளபோதும் மின்னிணைப்புக்கள் வழங்கப்படாத நிலையில் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்தில் 5 ஆயிரத்து 267 குடும்பங்களும் கண்டாவளைப் பிரதேசத்தில் ஆயிரத்து 244 குடும்பங்களும் பூநகரிப் பிரதேசத்தில் 786 குடும்பங்களும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 594 குடும்பங்களுமாக 7ஆயிரத்து 891 குடும்பங்கள் வாழ்ந்துவரும் பகுதிகளில் மின்சார கட்டுமான வசதிகள் மேற்கொள்ளப்படவில்லை என மின்சார சபையின் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் 85 வீதமான மக்களுக்கு மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளபோதும் மின்சார இணைப்பு வசதிகள் இருந்தும் 7 ஆயிரத்து 332 குடும்பங்களுக்கு மின்னிணைப்புக்கள் வழங்கப்படாமலும் 7 ஆயிரத்து 891 குடும்பங்கள் வாழும் பகுதிகளில் மின்சார கட்டுமான வசதிகள் ஏற்படுத்தப்படாமலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(2-3-15)

# புதுமுறிப்பு-சோலைநகர்-சாலோம் நகர் மக்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்கள்

## சிறிதரன் எம்.பி. வழங்கி வைப்பு



கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புதுமுறிப்பு கேஎன் 37 கிராம சேவையாளர் பிரிவின் கீழ் வசிக்கின்ற புதுமுறிப்பு, சோலைநகர் ,சாலோம் நகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் புதுமுறிப்பு பொது மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

புதுமுறிப்பு அபிவிருத்தி சங்கத்தலைவர் எஸ்.சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு காணி அனுமதிப் பத்திரங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், கரைச்சி பிரதேச செயலக உதவி திட்டப்பணிப்பாளர் ,வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச குடியேற்ற உத்தியோகத்தர் எஸ்.சாருமதி ,புதுமுறிப்பு கிராம சேவை உத்தியோகத்தர் மஞ்சுளா பாலகுமாரன் ,கரைச்சி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர், புதுமுறிப்பு அபிவிருத்திக்கான உத்தியோகத்தர், புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் த.கண்ணபிரான், மூத்த பிரஜைகள் குழு தலைவர் அ.நவரட்ணம், புதுமுறிப்பு முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், சோலைநகர் கிராம அபிவிருத்திச் சங்கதலைவர் அ.எமிலியானுஸ்பிள்ளை உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை புதுமுறிப்பு கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட மத்திய வகுப்பு மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லையென புதுமுறிப்பு கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் சந்திரன் கவலை தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக தகர கொட்டகை வீடுகளில் வசித்து வரும் பாதிக்கப்பட்ட புதுமுறிப்பு மத்திய வகுப்பு மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படாமல் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

உரிய பதிவுகள் மேற்கொண்டுள்ளபோதும் இவர்களுக்கான காணிப்பத்திரங்கள் வழங்கப்படாமையால் தொடர்ந்தும் அவர்கள் பல இடர்களை சந்திக்க வேண்டியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (2-3-309)



வவுனியா,ஓமந்தை புதிய வேலர் சின்னக்குளம் அன்னை மொனிக்கா முன்பள்ளியின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.பி. நடராஜ்,கௌரவ விருந்தினராக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.கெனடி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-கற்குழி செய்தியாளர்)

# வவுனியா மாவட்டத்தில் 19 சிறுவர்கள் கடந்த வருடம் கடத்தப்பட்டுள்ளனர்

## கிளிநொச்சியில் 24 சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம் வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைப் பிரிவு தகவல்

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு 19 சிறுவர்கள் கடத்தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை பிரிவின் புள்ளிவிபரத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த புள்ளிவிபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 400 முறைப்பாடுகள் அந்தந்த பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் 31 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் 10 சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகத்துக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் 16 சிறுவர்கள் உடல் ரீதியான முறைகேடுகளுக்கு. உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், 6 சிறுவர்கள் தற்கொலைக்கு முயற்சிசெய்துள்ளார்கள் எனவும், 3 சிறுவர்கள் உளரீதியாக துன்புறுத்தப்பட்டுள்ளார்கள் எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் 30 சிறுவர்களும் பாடசாலையில் இருந்து இடை விலகிய 30 சிறுவர்களும், இள வயதில் திருமணம் செய்து கொண்டதாக 30 சிறுவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக 105 சிறுவர்களும், குடும்பத்துடன் இருந்து சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்பட்ட 13 சிறுவர்களும் தத்தெடுக்கப்பட்டுள்ளதாக 5 சிறுவர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை சிறுவர் இல்லங்களில் இணைந்து கொள்வதற்காக கடந்த 2015 ஆம் ஆண்டு 158 சிறுவர்கள் விண்ணப்பித்துள்ளதுடன் அதில் 21 பேர் சிறுவர் இல்லங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள் என புள்ளிவிபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர் இல்லங்களில் இணைந்து கொள்வதற்காக கடந்த 2015 ஆம் ஆண்டு 644 சிறுவர்கள் விண்ணப்பித்துள்ளதுடன் அதில் 63 பேர் சிறுவர் இல்லங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள் என வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை பிரிவின் புள்ளிவிபரத தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த வருடம் 24 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளதாக பதிவு மேற்கொளளப்பட்டுள்ளதென குறித்த புள்ளி விபரத் தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் குறித்த புள்ளி விபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 81 முறைப்பாடுகள் அந்தந்த பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை 24 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் 4 சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகத்துக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் 31 சிறுவர்கள் உடல் ரீதியான முறை கேடுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் 12 சிறுவர்கள் தற்கொலைக்கு முயற்சிசெய்துள்ளார்கள் எனவும் 5 சிறுவர்கள் உளரீதியாக துன்புறுத்தப்பட்டுள்ளார்கள் எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் 35 சிறுவர்களும் பாடசாலையில் இருந்து இடை விலகிய 88 சிறுவர்களும், இள வயதில் திருமணம் செய்து கொண்டதாக 30 சிறுவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக 519 சிறுவர்களும், குடும்பத்துடன் இருந்து சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்பட்ட 47 சிறுவர்களும தத்தெடுக்கப்பட்டுள்ளதாக 2 சிறுவர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறித்த புள்ளிவிபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3-9)




## ஒருவர் மாட்டினார் மற்றையவர் தப்பினார்



(திருமுறிகண்டி)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த பட்டா ரக வாகனம் எதிரே இருந்த மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் மற்றைய நபர் அதிர்ஷ்டவசமாக காயமின்றி உயிர் தப்பினார். இச்சம்பவம் கடந்த 30ஆம் திகதி வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்றது. இவ் விபத்து தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சியிலிருந்து மாங்காய் வியாபாரம் செய்வதற்காக பிற்பகல் நீர் கொழும்பு நோக்கிச் சென்ற பட்டா ரக வாகனம் எதிரே வந்த வாகனத்திற்கு இடம்கொடுக்க முற்பட்ட வேளை வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே இருந்த மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

அதில் படுகாயமடைந்தவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டனர். (2-3-31)

## சிவில் அமைப்புக்களின் முறைப்பாட்டையடுத்து வவுனியா செட்டிகுளம் பிரதேச சபை எல்லை நேற்று மீண்டும் மீள்நிர்ணயம்

செட்டிகுளம் பிரதேச சபைக்கான எல்லை மீள்நிர்ணம் தொடர்பில் குழப்பநிலை காணப்படுவதாக எல்லை மீள்நிர்ணம் தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவிடம் மக்கள் செய்த முறைப்பாட்டையடுத்து மீணடும் எல்லை மீள்நிர்ணயம் செய்யும் நடவடிக்கை இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அரச அதிபர் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் வாழும் செட்டிகுளம் பகுதியில் இனவிகிதாசாரத்தை பாதிக்கும் வகையில் எல்லை மீள்நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் எல்லை நிர்ணயம் தொடர்பில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவிடம் சிவில் அமைப்புக்கள் மற்றும் மக்கள்



பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கையையடுத்து இந்த மீள்நிர்ணயம் இனப்பரம்பலை பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் அரச அதிபர் ரோகண புஸ்பகுமார, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ஜெயதிலக, வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ச.சத்தியசீலன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோனோதராதலிங்கம், தேர்தல் திணைக்கள அதிகாரிகள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் காஞ்சன புஸ்பகுமார, பிரதேச சபை செயலாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-3-250)

## புகைப்பிடிப்பவர்களுக்கு இன்று பிறந்தநாள் என நேற்று (ஏப்ரல் 1) வவுனியாவில் விழிப்புணர்வு

### பாடலுடன் துண்டுப்பிரசுரமும் விநியோகிப்பு

புகைப்பிடிப்பவர்களுக்கு இன்று (நேற்று) பிறந்த நாள் என வவுனியாவில் விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

ஏப்ரல் முதலாம் திகதி முட்டாள்கள் தினத்தை முன்னிட்டு புகைப் பிடிப்பவர்களுக்கு இன்று(நேற்று) பிறந்த நாள் எனத் தெரிவித்து விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று இடம் பெற்றது.

வவுனியா சுகாதார பணிமனையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வின் போது லான்ட் மாஸ்ரர் ஒன்றில் சிகரெட் புகைப்பவர்களுக்கு இன்று பிறந்த நாள் எனக்குறிப்பிட்ட பதாகைகள் தொங்கவிடப்பட்டு கேக் போன்று வடிவமைக்கப்பட்ட பெட்டி ஒன்று வைக்கப்பட்டு வவுனியா நகரை வலம் வந்தது.

இதன்போது இன்று பிறந்தநாள் என்று பாடலும் இசைக்கப்பட்டதுடன, துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(2-3-250)



# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 86

## சேதனப்பசளைகளுடன் உயிர்ப் பசளைகளும் அவசியம் தேவை!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 83

**வாருங்கள்
எம்மினிய உறவுகளே!**

எமது பிரதேசம் அசேதன, இரசாயனப்பொருட்களால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றது. பசளையாக,பீடை நாசினிகளாக, உணவாக, அதன் கழிவுகளாக இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். வாழ்க்கை,வசதி அனைத்திலும் இரசாயனப் பொருட்கள் கலக்கப்பட்டிருக்கின்றன. மென்பானம் தொடங்கி குடிவகை வரை,உணவின் பல வகைகளிலும் வேதியியல் பொருட்கள் கலக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் அவற்றை உணவாக்கலாம் என விஞ்ஞானம் பரிந்துரைத்தாலும் அவற்றின் பாதிப்பு இருக்கத்தானே செய்யும்.

மண்ணினை வளமானதாக வைத்திருக்க வேண்டியது முக்கியமாகும். மண்ணென்பது ஒரு கூட்டுத் தொகுதியாகும். அதனுள் உயிரியல மற்றும் பௌதீக காரணிகளின் தொழிற்பாடு நடந்து கொண்டிருக்கின்றது. எவ்வளவுக்கெவ்வளவு சேதனப் பொருட்கள் அதிகமாக உள்ளதோ உயிரியல் காரணிகளின் இயக்கமும் அதிகரித்துக் காணப்படும். அவ்வளவிற்கு மண்ணின் வளமும அதிகரித்துக்காணப்படும். வளமான மண் என்பது நன்மைதரும் நுண்ணங்கிகளின் செயற்பாடு அதிகமாகக் காணப்படுகின்ற மண்ணாகும். நன்மை தரும் நுண்ணங்கிகளின் எண்ணக்கை அதிகமாக இருக்கும் போது மண்ணினுள் உள்ள உயிரிகளின் செயற்பாடு அதிகரித்துக் காணப்படும். இவ்வாறான நன்மைதரும் நுண்ணங்கிகளின் செயற்பாட்டின் மூலமாக தாவரத்திற்கு தேவையான ஊட்டச்சத்தினை வழங்க முடியும். நுண்ணங்கிகளின் செயற்பாட்டுக்கு தேவையாக காபன் மண்ணில் காணப்படுவதற்கு முக்கிய பங்கு வகிப்பது அதில் காணப்படும் சேதனப் பொருளின் அளவு ஆகும். இங்கே சேதனப்பொருளென்பது விளை நிலத்திற்கு நாம் இடுகின்ற கூட்டுரமும் மற்றும் சேதன பசளைகளாக இடப்படும் பசுந்தாள் பசளைகள் மற்றும் பசுந்தாள் இலைப் பசளைகளாகும்.

அசேதன, இரசாயனங்களுக்கான மாற்று வழியாகவே உயிர்ப்பசளைகளை நாம் கவனத்திற் கொள்ளலாம். அவரைப் பயிர் தாவரங்களில் வளிமண்டல நைதரசனை வேர் முடிச்சுக்களாக நிலைநாட்டும் செயற்பாடு பற்றி நாமெல்லோரும் அறிந்திருக்கிறோம் அல்லவா. அவ்வாறான தாவரத்திற்கும் றைசோபியம் என்னும் நன்மைதரும் பக்றீரியாவுக்குமான ஒன்றிய வாழ்க்கையில் பக்றீரியாவுக்கான இடவசதியையும் தேவையான ஊட்டச்சத்தை தாவரம் வழங்கும் போது தாவரத்திற்கு தேவையான தழைச்சத்தை பக்றீரியா வளியிலிருந்து நிலைநாட்டி வேர் முடிச்சுக்களில் சேமித்து வைக்கும். இதனை தாவரம் இலகுமுறை தழைச்சத்தாக அகத்துறிஞ்சக் கூடியதாக இருக்கும். இவ்வாறான பக்றீரியாவை நாம் செயற்கை முறையில் விருத்தி செய்தால் அதனை பயிர்செய்கை காலத்தில் விதை விதைக்கும் போது சேர்த்து கலந்து விதைப்பதால் வேர்முடிச்சுக்கள் விரைந்துருவாவதை ஊக்குவிக்கலாம்.




உயிர்ப்பசளைகளை மண்ணினுள் இடும்போது இவை சேதன பசளைகளின் இருப்பை உறுதி செய்வதோடு அவற்றினால் கிடைக்கும் பயனையும் அதிகரிக்க உதவும். இவ்வாறான இயற்கையாக கிடைக்கும் பசளைகளையும் பல வகையான உயிர்ப்பசளைகளை வளர்த்து மண்ணில் இடும்போதும் இச்சேதன பசளைகளை உணவாக்கும் நன்மை தருகின்ற நுண்ணங்கிகளின் பெருக்கம் அதிகரிப்பதுடன் மண்ணினுள் தேவையான ஊட்டச்சத்தினளவும் அதிகரிக்கும். மேற்கூறிய நிலைக்கு விளை நிலத்தின் தன்மையை அதிகரிப்பதற்கும் அதிலுள்ள நன்மை தருகின்ற நுண்ணங்கிகளை அதிகரிக்க செய்வதற்கும் பயிர்ச்செய்கையில் நம்மவர்களால் இடப்படும் கூட்டுரத்திற்கும் மேலதிகமாக பசுந்தாள் இலைகள் மற்றும் பசுந்தாள் இலைப்பசளைகளுடன் உயிர்ப் பசளைகளையும் இடுதல் சிறந்தது. இங்கே இடப்படும் இவ்வாறான பசுந்தாள் மற்றும் பசுந்தாள் இலைப்பசளைகள் மற்றும் உயிர்ப்பசளைகள் உக்கி பிரிவடையும் போது நுண்ணங்கிகளுக்கான உணவாகவும் அதிலுள்ள ஊட்டச்சத்துக்கள் தாவரம் இலகுவில் அகத்துறிஞ்சத்தக்கதாகவும் மாறிவிடுகின்றன. பசுந்தாள் பசளைகள் அதிகமாக இடப்படும் போது மண்ணினுள்ள ஊட்டச்சத்தினளவு அதிகரிக்கின்ற தன்மையும் அதனுடன் சேர்ந்து மண்ணில் உள்ள நுண்ணங்கிகளின் உயிர்ப்பு தன்மையும் அதிகரிக்கின்றது. இது மண்ணினை உயிர்ப்புடனாக வைத்திருக்க உதவும்.

அசேதன, இரசாயணங்களை பயன்படுத்துவதை நாம் மட்டுப்படுத்த வேண்டிய நிலைக்குள் இருக்கின்றோம். அதே வேளையில் பயிர்ச்செய்கையில் நாம் பயிர்களுக்கு தேவையான சத்துக்களையும் பசளை வடிவில் இடவேண்டிய கட்டாயத்திற்குள்ளும் தள்ளப்பட்டிருக்கின்றோம். இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்க்கும் போது அசேதன, இரசாயனங்களுக்குப் பதிலாக சேதனப் பசளைகளையும் உயிர்ப்பசளைகளையும் ஊக்குவிப்பதை நாம் கடைப்பிடிக்கலாம். அசேதன, இரசாயனப்பசளையின் நச்சுத தன்மைக்குப் பதிலாக சேதன மற்றும் உயிர்ப்பசளைகளின் உற்பத்தியை அதிகரிப்பதுடன் அவற்றின் பயன்பாட்டையும் நாம் மக்களிடையே ஊக்குவிப்பது மிகவும் நல்லது. நஞ்சின் தாக்கத்திலிருந்து விடுபட சேதன முறை மூலமான பசளைகளை பயன்படுததுதல் நல்லதல்லவா. உயிர்ப பசளைகளின் பயன்பாடானது உலக நாடுகளில் முக்கியத்துவம் மிக்கதாக பயன்படுத்தப்படும் போது எமது நாட்டில் இவற்றின் பயன்பாட்டில் பெரிதும் நாம் தங்கியில்லை என்பது கவலையளிப்பதாகும். இதற்கான வசதிவாய்ப்புக்களை நாம் பெருக்கத் தவறினால் நமது நாடு இன்னும் அசேதன, இரசாயன பயன்பாட்டிற்குள் மூழ்கி விடும அபாயம் உண்டு. இதனை எமது மண்ணினதும் மக்களினதும் சுகாதாரம் கருதி நாம் முன்னெடுக்க வேண்டும்.

அசேதன முறையிலான பயிர்ச்செய்கையில் விரைவான முடிவுகளை பெறக் கூடியதாக இருந்தாலும்சேதன முறை மூலம் உற்பத்தி செயயப்படும் பயிருணவில் நஞ்சற்றதாக இருப்பதனால் மக்கள் தற்போது சேதன முறை மூலமான உணவை உற்பத்தி செய்ய விருப்பம் தெரிவித்திருப்பதும் இதற்கான நலல சமிக்ஞை. ஏற்கனவே நஞ்சுடையதாக மாற்றப்பட்டுள்ள எமது உற்பத்தி பிரதேசங்களை சிறிதுசிறிதாக நஞ்சற்றதாக மாற்ற அனைவரும் சேர்ந்து முயற்சி செய்வோம். வெளிநாடுகளிலிருந்து வருகின்ற உணவுப்பதார்த்தங்களைத் தவிர்த்து எமது நாட்டின் உற்பத்தியை நஞ்சற்றதான உற்பத்தியாக மாற்றி நாம் உயர்வு பெறுவோம்.

# 'தற்புனைவு ஆழ்வு' ஆட்டிசம் (Autism) பற்றி அவதானமாயிருங்கள்

*சர்வதேச ஆட்டிசம தினத்தை (April 2 ஆம் திகதி) முன்னிட்டு பிரசுரிக்கப்படுகிறது.*

ஆட்டிசம் என்பது குழந்தைகளின் விருத்தியில் ஏற்படும் ஒரு பின்னடைவு ஆகும். இதனை முன்கூட்டியே கண்டறிவதன் மூலமும் தகுந்த ப்யிற்சிகள் கொடுப்பதனாலும் இந்நோயினால் பிற்காலத்தில் ஏற்படும் பல பின்னடைவுகளை தடுக்கலாம்.

**முன்கூட்டி கண்டறிவதற்கான அறிகுறிகள்**

♦6 மாதகாலமளவில் பிள்ளை வாய்விட்டு சிரிக்காதிருத்தல்.

♦9 மாதமளவில் முகம் பார்த்து சிரிக்காதிருத்தல் அல்லது ஒலி எழுப்பாதிருத்தல்.

♦12 மாதமளவில் மழலைச் சத்தங்களை எழுப்பாதிருத்தல்.

♦12 மாதமளவில் சுட்டிக்காட்டாதிருத்தல்.

♦16 மாதமளவில் சொற்களை சொல்லாதிருத்தல்.

♦2 வயதளவில் இரு சொற்களைச் சேர்த்து வசனம் கதைக்காதிருத்தல்.

♦எந்த வயதிலும் எதுவிதமான பேச்சு, சமுதாய உணர்வு இல்லாதிருத்தல்.

**மேலதிகமாக காணப்படும் அறிகுறிகள்**

♦பெயர் கூப்பிடும் பொழுது கேட்காதது போலிருத்தல்.

♦மற்றவர்களுடன் பழக விருப்பமில்லாதிருத்தல்.

♦பெரியவர்கள் செய்யும் செயற்பாடுகள் போல் செய்யாதிருத்தல் (Imitation).

♦சாதாரணமாக ஒரு குழந்தை 2-3 வயதில் கற்பனை செய்து வின்ளயாடுகிறது. ஆனால் ஆட்டிசம் உள்ள குழந்தை எதுவித கறபனையும் இன்றி தாமாக தனியே விளையாடுவார்கள்.

♦மற்றவர்களின் உணர்வுகள், அவர்கள் எதை சொல்ல வருகிறார்கள் என்பன பற்றி விளங்காதிருத்தல்.

♦தமது உணர்வுகளை (emotions) கட்டுப்படுத்த தெரியாதிருத்தல். இதனால் தேவைக்கதிகமாக அழுதல், மற்றவர்களை அடித்தல், கடித்தல் தலையை அடித்துக் கொள்ளல், மயிரை இழுத்தல், தன்னைத்தானே கடித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

♦திரும்பத்திரும்ப செய்யும் செயற்பாடுகள (Repetitive behaviour)

♦கையை கண்முன் வைத்து விளையாடுதல்.

♦தன்னைத்தானே சுற்றுதல் மேலும் கீழும் அசைதல். (Rocking)

♦திரும்பத்திரும்ப சில சொற்களைக்கூறுதல்.

♦விளையாட்டுப்பொருட்களை சிறியதிலிருந்து பெரியது வரை அடுக்குதல்.

♦தமது அன்றாட செயற்பாட்டில் மாற்றம் ஏற்படின் அளவுக்கு அதிகம்ாக கோபம் வருதல்.

♦ஒரு செயற்பாட்டில் அதிக ஆர்வம் காட்டுதல்.

உ+ம் :-

சிறிய பிள்ளைகள் கூடுதலாக மின்னழுத்தியை மீண்டும் மீண்டும் போட்டு அணைப்பர். வளர்ந்த பிள்ளைகளாயின் கணக்கு, திகதிகள், விஞ்ஞானம், உருவங்களில் அதிக ஆர்வம் காட்டுவர்.

♦ஒலி, ஒளி, தொடுகை போன்ற வெவ்வேறு உணர்வுகளை கட்டுப்படுத்த இயலாதிருத்தல். (sensory processing problems)

உ+ம் :-

சாதாரண ஒலி எழுப்பும் சாதனங்களின் சத்தத்திற்கு காதை மூடுதல்.

**சிகிச்சை படிமுறைகள்:**

ஆட்டிசம் ஆயுட்காலம் முழுவதிலும் காணப்படுகின்ற நோயாயினும் பல்வேறுபட்ட பயிற்சி முறைகளினால் அவர்களின் ஆற்றல் மற்றும் திறனை அதிகரிக்கச் செய்யலாம். இதற்கான பயிற்சி முறைகளை சிறுபராயத்தில் செய்வதனால் அதிக நன்மைகள் உண்டு. சிலருக்கு இப் பயிற்சிகள் வாழ்நாள் முழுவதும் தேவைப்படலாம்.

ஒவ்வொரு குழந்தைக்குமான பயிற்சி முறைகள் தனிப்பட்டவை. முன்கூட்டியே செய்யும் இப்பயிற்சி முறைகள், பிள்ளையின் நடத்தையை மாற்றுவதற்கான சிகிச்சை முறைகள் (behaviour intervertions) என்பன குழந்தையின் பெற்றோர்கள் பயிற்சி வழாங்குவோரால் சேர்ந்து செய்யப்பட வேண்டியவை,

**பயிற்சியின் போது கவனிக்க வேண்டியவை**

♦ஒரு கிழமையில் 25 மணி நேரமாவது திட்டமிட்ட ஒரு பயிற்சி கொடுக்க வேண்டும். (structured therapeutic actions)

♦பயிற்சி கொடுப்பவர்கள் இதில் தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும்.

♦ஒவ்வொரு குழந்தைக்கும் பயிற்சியின் இலக்குகளை முன்கூட்டியே வரையறை செய்ய வேணடும். இலக்குகளை சரியான நேரத்தில் குழந்தை சாதிக்கிறதா? என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

♦பயிற்சியின் குறிக்கோள்கள் குழந்தையின் பேச்சு, விளையாட்டு, தினமும் செய்யும் செயற்பாடுகளை மையப்படுத்தி அமைக்க வேண்டும்.

♦பயிற்சியில் பெற்றோரை முற்று முழுதாக ஈடுபடுத்தல் வேண்டும்.




♦பயிற்சி சம்பந்தமான முடிவுகளை பெற்றோருடன் கலந்தாலோசித்து செய்யவேண்டும்.

♦பயிற்சியை ஒருவர் அல்லது ஒரு குழுவாக மேற்கொள்ளல் வேண்டும். குழுவில் பேச்சுப் பழக்குபவர், விளையாட்டுப் பழக்குபவர், குழந்தை மருத்துவர் போன்றோர் அங்கம் வகிக்க வேண்டும.



**சில சிகிச்சை படிமுறைகள்:-**

♦பிரயோக நடத்தை பகுப்பாய்வு (Applied behaviour Analysis)

நேர்மறை வலுவூட்டல் எனும் செயன்முறையை கையாளுதல் (Positive reinforcement) உ+ம்:- ஒரு நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் பிள்ளை, அநத நடத்தை மாற்றத்தை செய்யும போது தட்டிக்கொடுக்க வேண்டும். (reward)

♦சாதாரணமாக ஒரு குழந்தை தானாக 12-48 மாதங்களில் செய்யும் செயற்பாடுகளை ஆட்டிசம் உள்ள குழந்தைகளுக்கு மேலதிக காலத்தை செலவுசெய்ய விட்டு பழக்க வேண்டும். இதற்கு பெற்றோரின் ஈடுபாடும் கூடுதலாக தேவைப்படும்.

♦பேச்சு மற்றும் மற்றவர்களுடன் பழகும் ஆற்றலை ஊக்குவிக்க விளையாட்டுப் போன்ற செயற்பாடுகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

♦சில விடயங்களை திரும்ப திரும்ப கூறுவதால் நடத்தையில் மாற்றத்தை கொண்டுவரலாம்.

♦பேச்சுத்திறனை மேம்படுத்துதல் சொற்கள் உச்சரிக்க கஷடமாக இருபபோருக்கு படங்களைக்காட்டி பேச்சுத்திறனை ஊக்குவிக்கலாம்.

♦உணர்வு ஒருங்கிணைப்புச் சிகிச்சை (Sensory integration therapy)

அநேகமான ஆட்டிசம் நோய் உள்ள குழந்தைகள் தொடுகை, மணம், ஒலி, ஒளி போன்றவற்றை உள்வாங்கி செயற்பட சிரமப்படுவர்.

உடற்தொழிற்பாட்டை கூட்டுவதன் மூலம் தசை, என்பு போன்றவற்றை ஒருவகையில் அடக்கி மற்றைய புலன்களை பாவிக்க ஊக்குவிக்கலாம்.

உ+ம்:-ஊஞ்சல் ஆடுதல், சறுக்கியில் விளையாடுதல்

மேற்கூறிய சிகிச்சை படிமுறைகளை செய்வதன் மூலம் ஆட்டிசம் நோயை கட்டப்படுத்தலாம். தற்பொழுது இவ்வகையான சிகிச்சை முறைகள் இலங்கையின் ஏனைய பகுதிகளில் மட்டுமல்லாது யாழ்ப்பாணத்திலும் மேற்கொள்ளப்படுகின்றன.


**கீதாஞ்சலி சத்தியதாஸ்**
குழந்தை வைத்திய நிபுணர்
யாழ் .போதனா வைத்தியசாலை


# ஆட்டிச பிள்ளைகளுக்கான கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகள்

ஆட்டிச பிள்ளைகளுக்கான கற்றல்– கற்பித்தலின் தொடக்க நிலையாக புலனுறுப்புப் பயிற்சியே சிறந்தது. அதாவது அவர்கள் புலன்களை பயன்படுத்தி நன்னடத்தைகளை கட்டியெழுப்புவதற்கு பயிற்சி வழங்குதலாகும். இரண்டாவது அழகியற் செயற்பாடுகளுக்கும் வாழ்க்கைத் திறன்களுக்கும் முக்கிய இடமளித்தலாகும். மூன்றாவது கற்றல்–கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்திக் கற்பித்தலாகும்.

இவர்களுக்கான கற்றல் – கற்பித்தலை திட்டமிடும் போதும் பாடக் குறிப்பு, பாடத்திட்டம் வடிவமைக்கும் போது பின்வரும் 8 விடயங்களில் அக்கறையுடன் செயற்படுவது வினைத்திறன் விளைதிறனுடைய செயற்பாடாக அமையும்.

**01. பேரியக்கத்திறன்கள்**

ஒருவரது பெரிய தசைகளின் அசைவுகள் மூலம் செய்யப்படும் செயற்பாடுகள் பேரியக்கத்திறன்களாகும். அதாவது உடலசைவுகளுக்கும் நடத்தலுக்கும் (அசைந்து செல்வதற்கும்) உரிய செயற்பாடுகளே பேரியக்கத்திறன்கள் என்பதால் கருதப்படுகின்றது.

**02. நுண்ணியத்திறன்கள்**

பிள்ளைகளின் கைகளை ஆக்கபூர்வமான வகையில் கையாளும் திறனே நுண்ணியக்கத்திறன் எனலாம். கண்–கை இசைவாக்கத்திறனும் இதில் அடங்கும். இதற்கு கண்பார்வை மிக முக்கியமானது. கைகளை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் பயன்படுத்தும் திறனின் மீது கண்பார்வை செல்வாக்குச் செலுத்துகின்றமையே அதற்கான காரணமாகும்.

**03. மொழி விருத்தி**

சொற்களையும் வாக்கியங்களையும் பயன்படுத்தி பேசும் திறனும் ஏனையோர் கூறுபவற்றை விளங்கும் ஆற்றலுமே மொழி விருத்தி என்பதால் கருதப்படுகின்றது.

**04.வாசிப்பு, எழுத்து அடிப்படைக் கணிதத்திறன்கள்**

சுயாதீனமாக வாழ்க்கையைக் கழிப்பதற்குத் தேவையான அடிப்படையான எழுத்தறிவு ஆற்றல்கள் இவற்றில் அடங்கும்.

**05. சுய உதவித் திறன்கள்**

நாளாந்த வாழ்க்கைக்குரிய செயற்பாடுகள் இதில் அடங்கும். உதாரணம் உணவு உண்ணல், பருகுதல், மலசலகூடப்பாவனை, முகம், கால், கை கழுவுதல் போன்ற திறன்கள் காணப்படுமாயின் நாளாந்த வாழ்க்கையில் தமது செயல்களைத் தாமே செய்து கொள்ளும் திறன் கிடைக்கும்.

**06 சமூகத் திறன்கள்**

ஏனைய பிள்ளைகள் மற்றும் வளர்ந்தோருடன் இடைத்தொழிற்பாடுகளைப் பேணுவதையே இது குறிக்கின்றது.

**07. அழகியல் திறன்கள்**

தாளம், சந்தம் ஆகியவற்றை விளங்கி, அதற்கமைய உடலை அசைக்கும் திறனும் அதன் மூலம் இரசனை பெறுத்தலும் இதில் அடங்கும்.

**08. சமயமும் ஒழுக்கமும்**

நாளாந்த வாழ்க்கைக்குரிய நற்பழக்க வழக்கங்கள் தொடர்பான விளக்கமும் அவற்றை பயன்படுத்துவதும் சமயம் தொடர்பான அடிப்படையான விளக்கத்தைப் பெறுவதும் சமயத்துக்கு அமைவாக நடந்து கொள்வதுமே சமயமும் ஒழுக்கமும் சார்ந்த திறன்கள் என்பதால் கருதப்படுகின்றது.

தொகுத்து நோக்குமிடத்து ஆட்டிசக் குழந்தைகளும் எமது சொத்துக்களே. அவர்களிடம் உள் பொதிந்துள்ள ஆற்றல்களை இனங்கண்டு வெளிக்கொணரும் சந்தர்ப்பத்தில் அவர்களும் எமதுநாட்டின் வளம்என்பதை அனைவரும் உணர்ந்து கொள்வர். அவர்களுக்குரிய சந்தர்ப்பங்களும் கிடைக்கப்பெறும். எனவே நாம் அனைவரும் அவர்களுக்காக ஒரு நிமிடம் சிந்தித்து பணியாற்றுவோம்.


**த.சிவகுமார்**
உதவிக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# வார பலன்கள்-01.04.

## தர்மம் செய்வதில் அதிக ஆர்வம் கொண்ட மேஷ ராசி அன்பர்களே!



மேஷம்
அசுவினி, பரணி கிருத்திகை 1-ம் பாதம்

வெற்றியைப் பெற கடினமாக உழைப்பீர்கள்.
கொடுக்கல்- வாங்கலில் கவனம் தேவை.

உத்தியோகம் :- உங்கள் பணிகளில் குறைபாடு வராமல் கவனமாக நடந்து கொள்வது அவசியம். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு குறையும்.

தொழில் : சொந்தத்தொழில் செய்பவர்களுக்கு, தொழில் வாய்ப்புகள் பெருகும். வாடிக்கையாளர்களிடம் சுமுகமாக நடந்து கொள்வது அவசியம்.

கூட்டுத்தொழில் செய்பவர்களுக்குப் பணவரவு அதிகமாகலாம். தொழில் போட்டிகளை சமாளித்துவிடுவீர்கள்.

பங்குச்சந்தை வியாபாரத் தில் அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனை இலாபம் தரும். தினசரிகளில் வரும் அன்றாட நிலவரங்களை கவனிப்பது நல்லது.

**கலை:-** கலைஞர்கள் பிரபல நிறுவனங்களில் இருந்து, ஒப்பந்தங்களைப் பெற முயற்சிகளை மேற்கொள் வீர்கள். சகக்கலைஞர்கள் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த வருமானம் தாமதமாகும்.

**குடும்பம்:-** குடும்பத்தில் கணவன் - மனைவி அன்பு சீராக இருக்கும். பெண்கள் பணிகளில் கவனமாக இருப்பது நல்லது. புதிய நண்பர்களின் வருகையால் சில பிரச்சினைகளை சமாளிப்பீர்கள்.

**வார வழிபாடு:-** சூரிய பகவானுக்கு ஞாயிற்றுக் கிழமை தீபமிட்டு வழிபட்டால் செல்வம் சேரும்.

**அதிர்ஷ்ட எண்கள்:-** 5,6,9 **அதிர்ஷ்ட நிறம்:-** சிவப்பு **அதிர்ஷ்டக்கிழமை:** ஞாயிறு

## எந்த செயலையும் அழகாக செய்யும் இடப ராசி அன்பர்களே!



ரிஷபம்
கிருத்திகை 2,3,4-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்,

வெள்ளி மாலை 4.15 மணி வரை சந்திராஷ்டமம் உள்ளதால் எதிலும் நிதானம் தேவை.

**உத்தியோகம்:-** உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு, புதிய பதவி கிடைக்கும். பாதியில் நிறுத்தி வைத்திருந்த பணி தொடரும். தடைபட்ட உயர் பதவி அல்லது பண உதவி தக்க நேரத்தில் தேடி வரும்.

**தொழில்:-** சொந்தத்தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளர்களின் அவசரத்தை உணர்ந்து பணியில் விரைவாக செயறபட நேரிடும். கூட்டுத்தொழில் செய்பவர்கள், புதிய வாய்ப்புகளை பயன்படுத்தி முன்னேறுவீர்கள். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும். நண்பர்களின் ஆலோசனை இலாபம் ஈட்டித் தருவதாக அமையும்.

**கலை:-** கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள் கிடைத்தாலும் வருமானம் எதிர்பார்க்கும் அளவு இருக்காது. சகக் கலைஞர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

**குடும்பம்:-** குடும்பத்தில் செலவுகள் எதிர்பார்த்ததை விட அதிகமாகும். உயர் பதவியில் உள்ள பெண்கள் சக பணியாளர்களிடம் சுமுகமாகப் பழகுவது நல்லது. கடுமையான பேச்சால் உறவினர்களிடையே மனக்கசப்பு உண்டாகலாம்.

**வார வழிபாடு:-** துர்க்கைக்கு செவ்வாய்க்கிழமை நெய் தீபமிட்டு வழிபட்டால் வெற்றிகள் குவியும்.

**அதிர்ஷ்ட எண்கள்:-** 5,6,9 **அதிர்ஷ்ட நிறம்:-** இளம்பச்சை **அதிர்ஷ்டக்கிழமை:-** புதன்

## நேர்மையுடன் பழகும் குணம் கொண்ட மிதுன ராசி அன்பர்களே!



மிதுனம்
மிருகசீரிடம் 3,4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3-ம் பாதம்,

வெள்ளி மாலை 4.15 மணி முதல் ஞாயிறு வரை சந்திராஷ்டமம் உள்ளதால் எதிலும் கவனம் தேவை.

**உத்தியோகம்:-** உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு அதிக ஆதாயமுள்ள புதிய வேலைக்கு செல்லக் கூடும்.

பணப்பொறுப்பில் உள்ளவர்கள், அதில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**தொழில்:-** சொந்த தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரித்தாலும் வழக்கமான இலாபம் கிடைக்கும். கூட்டுத்தொழிலில் இ

சிப்பீர்கள். பங்குச்சந்தை வியாபாரம் முன்னேற்றம் தரும்.

**கலை:-** கலைஞர்கள், புதிய வாய்ப்புகள் மூலம் புகழும், பொருளும் பெறக்கூடும். குடும்பத்துக்குத் தேவையான நவீன பொருட்களை வாங்குவீர்கள். சகக்கலைஞர்கள் ஆதரவு இருக்கும்.

**குடும்பம்:-** குடும்பத்தில் அமைதி நிலவினாலும் சிறு சிறு சிரமங்களும் ஏற்படலாம். பெண்களுக்கு விரும்பியபடி பணி உயர்வு மற்றும் இடமாற்றம் வந்துசேரும். வீட்டில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**வார வழிபாடு:-** மகாலட்சுமிக்கு வெள்ளிக்கிழமை நெய் தீபமிட்டு வழிபட்டால் செல்வ வளம் சேரும்.

**அதிர்ஷ்ட எண்கள்:-** 5,6,8 **அதிர்ஷ்ட நிறம்:-** நீலம் **அதிர்ஷ்டக்கிழமை:-** வெள்ளி

## சாமர்த்தியமாக செயறபடும் கடக ராசி அன்பர்களே!



கடகம்
புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்

திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்கள் சந்திராஷ்டமம் உள்ளதால் எதிலும் முயற்சி தேவை.

**உத்தியோகம்:-** உத்தியோகத்தில் உள்ளவர்கள், உயரதிகாரிகளின் விருப்பப்படி செயறபட்டு பாராட்டுகளைப் பெறுவார்கள். தடைப்பட்ட பதவி உயர்வோ, பணம் சம்பந்தமான அனுகூலமோ உங்களைத் தேடி வரக்கூடும்.

**தொழில்:-** சொந்தத்தொழில் செய்பவர்களுக்கு புதிய நபர்களால் வேலைகள் அதிகமாகலாம். ஓய்வின்றி உழைப்பதால் ஆரோக்கிய குறைபாடு வரலாம். கூட்டுத்தொழிலை

எதிர்பார்க்கும் இலாபம் இருக்காது.

**கலை:-** கலைஞர்களுக்கு பழைய ஒப்பந்தங்களிலேயே பணவரவு ஏற்படலாம். வெளியூர் செல்வதற்கான வாய்ப்புகள் வந்துசேரும். சகக்கலைஞர்கள் ஒத்துழைப்பு அளிப்பார்கள்.

**குடும்பம்:-** குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் செலவுகள் உண்டு. பெண்களுக்கு ஆரோக்கியக் குறை ஏற்படலாம். மருத்துவ செலவு உண்டு.

**வார வழிபாடு:-** ஆறுமுகனுக்கு செவ்வாய்க்கிழமை தீபமிட்டு வழிபட்டால் நினைத்தது நிறைவேறும்.

**அதிர்ஷ்ட எண்கள்:-** 5,6,9 **அதிர்ஷ்ட நிறம்:-** இளஞ்சிவப்பு **அதிர்ஷ்டக்கிழமை:-** வெள்ளி

## ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடு கொண்ட சிம்ம ராசி அன்பர்களே!

புதன், வியாழன் ஆகிய தினங்கள் சந்திராஷ்டமம் உள்ளதால் காரியங்களில் தடைகள் தோன்றும்.

**உத்தியோகம்:-** உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு விருப்ப ஓ
கிடைக்கலாம். உயர் அதிகாரிகளிடம் பொறுமையாக நடந்து கொ
வது நல்லது. பதற்றத்தால் பேசும் பேச்சுகள் மனக்கசப்பை தரும்.

**தொழில்:-** சொந்தத்தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கு பழைய
வாடிக்கையாளர் மூலம் அதிக வேலைகள் வரும். அதனால் இல
மும் கிடைக்கும். கூட்டு வியாபாரம் செய்பவர்களுக்கு எதிர்பார்க்
இலாபம் கிடைக்காமல் போகலாம். பங்குச் சந்தை வியாபாரத்தில்

**கலை:-** கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கலாம். சகக்கலைஞர்கள் சிலருக்கு உதவும் நிலை ஏற்படலாம்.

**குடும்பம்:-** குடும்பத்தில் சிலருக்கு வசிக்கும் வீட்டை மாற்ற
கள் தாய்வீடு சென்று மங்கலப் பொருட்களுடன் திரும்புவர். பிரி
குலதெய்வக் கோவிலுக்கு செல்ல திட்டமிடுவீர்கள்.

**வார வழிபாடு:-** லட்சுமி ஹயக்ரீவருக்கு வியாழக் கிழமை

**அதிர்ஷ்ட எண்கள்:-** 3,6,9 **அதிர்ஷ்ட நிறம்:-** சிவப்பு

## முன்னெச்சரிக்கை குணம் கொண்ட கன்னி ராசி அன்பர்களே!

புணம் வரும் முன்பே செலவுகள் காத்திருக்கும்.
பூர்வீக சொத்து பராமரிப்பில் கவனம் அவசியம்.

**உத்தியோகம்:-** உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பொறு
களில் மாற்றங்கள் வரலாம். வரவேண்டிய பணத்தை வசூலிக்க
முயற்சி செய்வீர்கள். சேமிப்பு பெருக வாய்ப்புண்டு.

**தொழில்:-** சொந்தத்தொழில் செய்பவர்களுக்கு, புதிய வாய்
கிடைக்கும். ஊழியர்களின் போக்கு திருப்திகரமாக இருக்கும்.
தொழில் செய்பவர்களுக்கு அதிக இலாபம் வரும். பங்குதாரர்க
சேர வேண்டியதை பிரித்துக்கொடுப்பீர்கள். பங்குச்சந்தை வியா
லாம்.

**கலை:-** கலைஞர்கள் பிரபல நிறுவனங்களின் ஒப்பந்தங்க
பணமும், புகழும் தேடி வரும். சகக் கலைஞர்கள் உதவிகரம

**குடும்பம்:-** குடும்பத்தில் மகிழ்வான சூழ்நிலை காணப்படு
வராது. பெண்கள் சகோதர வழி உறவுகள் இல்ல நிகழ்வுகளி

**வார வழிபாடு:-** ஆஞ்சநேய சுவாமிக்கு சனிக்கிழமை நெ

**அதிர்ஷ்ட எண்கள்:-** 3,8,9 **அதிர்ஷ்ட நிறம்:-**

## ஜோதிட 'சிம்மம்'

## அதிக உழைப்பை வெளிப்படுத்தும் துலாம் ராசி அன்பர்களே!

காரியங்களை வெற்றியாக முயற்சிப்பீர்கள்.
எதிர்பார்த்தபடி பணவரவு இருக்கும்.

**உத்தியோகம்:-** உத்தியோகத்தில் உள்ளவர்கள் கடின மு
கள் மூலம் எதிர்பார்க்கும் காரியம் வெற்றியளிக்கும். உயரதி
களின் ஆதரவுடன் முக்கிய வேலைகளில் பலன் பெறுவீர்கள்

**தொழில்:-** சொந்தத்தொழில் செய்பவர்களுக்குப் புதிய நப
அறிமுகத்தால் முன்னேற்றம் ஏற்படக்கூடும். இயந்திரங்களோ
தொழில் சார்ந்த நூதனப் பொருட்களோ வாங்க வாய்ப்புண்டு
தொழில் வியாபாரம் முன்னேற்றமாக நடைபெறும். இலாபம்
வழக்கமான இலாபம் கிடைக்கும்.

**கலை:-** கலைஞர்கள் பணிகளில் சிறப்பாக ஈடுபடுவார்கள்
கட்டுப்பாட்டில் கவனமின்றி ஆரோக்கியக்குறையை சந்திக்க

**குடும்பம்:-** குடும்பத்தில் விருந்தினர்களின் வருகையால்
களில் பெண்கள் கலந்துகொள்வார்கள். உறவினர்களுடன்

**வார வழிபாடு:-** சனீஸ்வரனுக்கு சனிக்கிழமை கருநீல ம

**அதிர்ஷ்ட எண்கள்:-** 3,6,8 **அதிர்ஷ்ட நிறம்:-** வெள்

## கவலைகளை மறைத்து சிரிக்கும் விருச்சிக ராசி அன்பர்களே!

அதிக முயற்சியோடு வெற்றிகளை குவிப்பீர்கள்.
தனவரவு வந்தாலும், செலவுகள் இருக்கும்.

**உத்தியோகம்:-** உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின்
ணப்படி செயற்பட வேண்டிய நிலைமை வரும். மனக்கசப்பு
அகலும். சக ஊழியர்களுடன் சுமுகமாக நடந்துகொள்வது ந
தரும். வீண் விவாதங்கள் வேண்டாம்.

**தொழில்:-** சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பா
தைவிட அதிக வருமானம் கிடைக்கலாம். கூட்டுத்தொழிலி
பங்குதாரர்கள் சரியான நேரத்தில் கைகொடுப்பார்கள். பங்
நடைபெறும். முதலீடு அதிகரிக்கும்.

**கலை:-** கலைஞர்கள், சகக்கலைஞர்கள் மூலம் புதிய ஒ
கள். சகக்கலைஞர்களின் ஆதரவு பெருகும்.

**குடும்பம்:-** குடும்பம் சீராக நடைபெற்றாலும் சிறுசிறு பிர
பெண்களுக்குப் பதவி உயர்வு வர வாய்ப்பு உண்டு. சகோ

**வார வழிபாடு:-** தட்சிணாமூர்த்திக்கு வியாழக்கிழமை

**அதிர்ஷ்ட எண்கள்:-** 3,6,9 **அதிர்ஷ்ட நிறம்:** வெ

# 4.2016-07.04.2016

காண்ட



## சிம்மம்

மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்,

ஷ்டமம்
றும்.
கு விருப்ப ஓய்வு
க நடந்து கொள்
சப்பை தரும்.
நக்கு பழைய
அதனால் இலாப
கு எதிர்பார்க்கும்
வியாபாரத்தில் இலாபம் சுமாராகவே இருக்கும்.
கிடைக்கலாம். பணிகளில் ஈடுபடும்போது கவனம் தேவை.
ாம்.
டை மாற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். பெண்
நம்புவர். பிரிந்த உறவுகள் சேர வாய்ப்பு உண்டாகும்.

ழக் கிழமை நெய் தீபமிட்டு வழிபாடு செய்வது நல்லது.
:- சிவப்பு **அதிர்ஷ்டக்கிழமை:-** செவ்வாய்

ணட



## கன்னி

உத்திரம் 2,3,4-ம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்

க்கும்.
வசியம்.
ளுக்கு பொறுப்பு
தை வசூலிக்க

புதிய வாய்ப்புகள்
க இருக்கும். கூட்டுத்
பங்குதாரர்களுக்கு
சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்க

ஒப்பந்தங்கள் பெற்று ஆர்வமுடன் பணியாற்றுவார்கள்.
உதவிகரகமாக இருப்பார்கள்.
காணப்படும். சிறுசிறு தொல்லைகள் இருந்தாலும் பாதிப்பு
நிகழ்வுகளில் கலந்து கொள்வார்கள்.
கிழமை நெய்தீபமிட்டு வழிபட்டால் வெற்றி உண்டாகும்.
ஷ்ட நிறம்:- வெளிர்நீலம் **அதிர்ஷ்டக்கிழமை:-** சனி

## ம்மம்' கண்ணன்

த்தும்



## துலாம்

சித்திரை 3,4-ம் பாதம் சுவாதி, விசாகம் 1,2,3-ம் பாதம்

கள்.

ர்கள் கடின முயற்சி
கும். உயரதிகாரி
பெறுவீர்கள்.
குப் புதிய நபர்களின்
யந்திரங்களோ,
வாய்ப்புண்டு. கூட்டுத்
றும். இலாபம் அதிகரிக்கும். பங்குச்சந்தை வியாபாரத்தில்

ஈடுபடுவார்கள். வெளியூர் பயணங்கள் உண்டு. உணவுக்
யை சந்திக்க நேரலாம்.
வருகையால் செலவுகள் அதிகரிக்கும். மாங்கல நிகழ்ச்சி
னர்களுடன் சுமுகமாக நடந்துகொள்ளுங்கள்.
மை கருநீல மலர் சூட்டி வழிபட்டால் சகல நலனும் உண்டாகும்.
நிறம்:- வெளிர்நீலம் **அதிர்ஷ்டக்கிழமை:** சனி

க்கும்



## விருச்சிகம்

விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை

ிப்பீர்கள்.
க்கும்.
அதிகாரிகளின் எண்
. மனக்கசப்புகள்
துகொள்வது நன்மை

ளுக்கு எதிர்பார்த்த
ட்டுத்தொழிலில் உள்ளவர்களுக்கு அதிக இலாபம் வரக்கூடும்.
பார்கள். பங்குச்சந்தை வியாபாரம் ஏதிர்பார்க்கும் இலாபத்தில்

மூலம் புதிய ஒப்பந்தங்கள் பெற முயற்சிகளை மேற்கொள்வார்

ம் சிறுசிறு பிரச்சினைகள் வந்து போகும். வேலைக்குப் போகும்
ண்டு. சகோதர வழி உறவில் நல்ல செய்தி தேடிவரும்.
பாழக்கிழமை நெய்தீபமிட்டு, வழிபட காரிய தடைகள் விலகும்.
நிறம்: வெளிர்மஞ்சள் **அதிர்ஷ்டக்கிழமை:** வியாழன்

### செய்யும் செயல்களில் உற்சாகமாக ஈடுபடும் தனுசு ராசி அன்பர்களே!



## தனுசு

மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்

சில செயல்களில் தளர்வடைந்தாலும் தக்க நபர்களின் துணையுடன் வெற்றி காண்பீர்கள்.

**உத்தியோகம்:-** உத்தியோகத்தில் மகிழ்வான சூழ்நிலை காணப்படும். உயர் அதிகாரிகளின் ஆதரவோடு சில சலுகைகளைப் பெறுவீர்கள். சக ஊழியர்கள் தக்க நேரத்தில் கைகொடுப்பார்கள்.

**தொழில்:-** சொந்தத்தொழில் செய்பவர்களுக்கு வேலை வாய்ப்பும், பணவரவும் உண்டாகும். கூட்டுத்தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். புதிய கிளைகள் தொடங்கும் நிலைபற்றி பங்குதாரர்களிடம் ஆலோசிப்பீர்கள். பங்குச்சந்தை வியாபாரம் இலாபம் தரும். தினசரிகளில் வரும் அன்றாட நிலவரங்களை கவனிப்பது நல்லது.

**கலை:-** கலைஞர்கள், சகக்கலைஞர்கள் மூலம் புதிய வாய்ப்புகளைப் பெற்று, அந்தப் பணிகளில் ஈடுபாட்டுடன் செயறபடுவார்கள்.

**குடும்பம்:-** குடும்பத்தில் பழைய பொருட்களை மாற்றிப் புதிய பொருட்களை வாங்குவீர்கள். விருந்தினர்கள் வருகையால் பெண்களுக்கு வேலைகள் அதிகமாகலாம். சேமிப்பு செலவழிந்தாலும் நல்ல திருப்பங்களை எதிர்பார்க்கலாம்.

**வார வழிபாடு:-** செவ்வாய்க்கிழமை அன்று முருகப்பெருமானை வழிபடுவது வெற்றியை கொடுக்கும்.
**அதிர்ஷ்ட எண்கள்:-** 1,3,9 **அதிர்ஷ்ட நிறம்:** இளஞ்சிவப்பு **அதிர்ஷ்டக்கிழமை:-** செவ்வாய்

### கலைகளில் ஈடுபாடு கொண்ட மகர ராசி அன்பர்களே!



## மகரம்

உத்திராடம் 2,3,4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதம்

எதிர்பார்த்த விடயங்கள் சற்றே தள்ளிப்போகும். முக்கிய முடிவு எடுப்பதில் தடுமாற்றம் வரலாம்.

**உத்தியோகம்:-** உத்தியோகத்தில் சிலருக்கு பொறுப்புகள் கூடும். எதிர்பார்த்த இனங்கள் தள்ளிப் போகும். அவசர வேலைகளால் ஓய்வு நேரம் குறையும். எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம்.

**தொழில்:-** சொந்தத்தொழில் செய்பவர்களுக்கு அதிக வேலைகள் இருந்தாலும் வருமானம் வருவதில் தாமதம் ஏற்படலாம். கூட்டு வியாபாரத்தில் போட்டிகளால் மனச்சஞ்சலம் வரலாம். பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் இல்லாமல் போகும். நிதானப் போக்கு அவசியம். நண்பர்கள் ஆலோசனை பலன் தருவதாக அமையும்.

**கலை:-** கலைஞர்கள், பணிகளில் உற்சாகம் காட்டினாலும், வருமானம் எதிர்பார்க்கும் அளவு இல்லாமல் போகக்கூடும். ஆரோக்கியக் குறை ஏற்படும். சேமிப்புகள் செலவழியும்.

**குடும்பம்:-** குடும்பத்தில் அமைதியான போக்கு காணப்பட்டாலும், சிறுசிறு தொல்லைகளும் வந்து போகும். பெண்கள் கவனமாக இல்லாவிட்டால் சிறு மனக்கசப்புகளைச் சந்திக்க நேரிடும்.

**வார வழிபாடு:-** மகாலட்சுமிக்கு வெள்ளிக்கிழமை செந்தாமரை மலர் சூட்டி வழிபாடு செய்யுங்கள்.
**அதிர்ஷ்ட எண்கள்:-** 2,5,9 **அதிர்ஷ்ட நிறம்:-** இளஞ்சிவப்பு **அதிர்ஷ்டக்கிழமை:-** வெள்ளி

### சாமர்த்தியமாக பேசி காரியத்தை சாதிக்கும் கும்ப ராசி அன்பர்களே!



## கும்பம்

அவிட்டம் 3,4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1,2,3-ம் பாதம்

எடுக்கும் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். திட்டமிட்டபடி பணவரவுகள் வந்து சேரும்.

**உத்தியோகம்:-** உத்தியோகஸ்தர்கள், உயரதிகாரிகளின் விருப்பப்படி பாராட்டுப் பெறுவார்கள். சிலருக்கு அலுவலகத்தில் எதிர்பார்த்த பணம் வந்து சேரும். வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும்.

**தொழில்:-** சொந்தத்தொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர்கள் மூலம் பணம் கிடைக்கும். கூட்டுத்தொழில் வியாபாரத்தில் இலாபம் அதிகமாகும். பங்குதாரர்களின் ஆலோசனைகளோடு புதிய தொழில் தொடங்குவீர்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும்.

**கலை:-** கலைஞர்கள் பிரபல நிறுவனங்களின் ஒப்பந்தங்கள் மூலம் வாய்ப்புகளும், வசதிகளும் பெறுவார்கள். சகக்கலைஞர்களுக்கு உதவும் சூழ்நிலை ஏற்படக்கூடும்.

**குடும்பம்:-** குடும்பத்தில் மகிழ்வான போக்கு காணப்படும். எதிர்பாராத பணவரவுகள் மகிழ்வளிக்கும். மங்கல நிகழ்வுகள் குடும்பத்தில் நடைபெறும். பெண்கள் புதிய ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

**வார வழிபாடு:-** லட்சுமி நரசிம்மருக்கு புதன்கிழமை நெய்தீபமிட்டு வழிபட்டால் விரோதிகள் விலகுவர்.
**அதிர்ஷ்ட எண்கள்:-** 5,6,9 **அதிர்ஷ்ட நிறம்:-** இளம்பச்சை **அதிர்ஷ்டக்கிழமை:-** புதன்

### கற்பனை வளம் அதிகம் கொண்ட மீன ராசி அன்பர்களே!



## மீனம்

பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

**உத்தியோகம்:-** உத்தியோகஸ்தர்கள் தங்கள் கடமைகளில் கவனமாக இருப்பது அவசியம். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும்போதும், பணப்பரிவர்த்தனை செய்யும் போதும் கவனமாக கையாள வேண்டும்.


**தொழில்:-** சொந்தத்தொழில் செய்பவர்களுக்கு பழைய வாடிக்கையாளர் மூலம் புதிய நபர்களின் அறிமுகமும், அவர்களால் பணவரவும் உண்டு. கூட்டு வியாபாரம் சுமாராக இருந்தாலும், வழக்கமான இலாபம் கிடைக்கும். பங்குச்சந்தை வியாபாரம் இலாபம் குறையாமல் நடைபெறும்.

**கலை:-** கலைஞர்கள் பழைய வாய்ப்புகளிலேயே தேவையான வருமானம் பெறக்கூடும். சகக்கலைஞர்கள் மூலம் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களை பெற தீவிரம் காட்டுவீர்கள்.

**குடும்பம்:-** குடும்பம் சிறுசிறு பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். சகோதர வழி உறவுகளின் இல்லங்களுக்கு சென்ற பெண்களுக்கு வீண் பேச்சுகளால் மனக்கசப்பு ஏற்படக்கூடும்.

**வார வழிபாடு:-** துர்க்கைக்கு திங்கட்கிழமை தீபமிட்டு வழிபாடு செய்வதால் நன்மைகள் வந்து சேரும்.
**அதிர்ஷ்ட எண்:-** 2,3,6 **அதிர்ஷ்ட நிறம்:-** வெண்மை **அதிர்ஷ்டக்கிழமை:-** திங்கள்

# டெங்கு ஒழிப்புப் பணி வடமராட்சியில் தீவிரம்



டெங்குபரவலில் யாழ்.மாவட்டத்தில் வடமராட்சிப் பகுதி மூன்றாம் இடத்தில் இருப்பதனால் டெங்கு ஒழிப்புப் பணியில் சுகாதார ப் பகுதியினர் ஈடு பட்டுள்ளனர்.

கரவெட்டி, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் குட்பட்ட பகுதிகளில் சுகாதாரப் பரிசோதகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து இச் செயற்றிட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

டெங்கு பரவல் ஏற்படும் என இனங்காணப்பட்ட பகுதிகள் அழிக்கப்படுவதுடன் அவை பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருப்போருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-60)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 01.04.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 143.32 | 147.23 |
| பவுண்ட் | பிரிட்டன் | 205.14 | 212.62 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 162.25 | 168.88 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 148.36 | 154.70 |
| டொலர் | கனடா | 109.52 | 116.21 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 108.97 | 114.18 |
| டொலர் | சிங்கப்பூர் | 105.92 | 110.07 |
| ரூபா | இந்தியா | 2.1683 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6774 |
| குவைத் | டினார் | 476.5690 |
| ஓமான் | ரியால் | 373.7614 |
| கட்டார் | ரியால் | 39.5243 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3667 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1783 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 35 | 70 | 40 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 65 | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 80 | 120 | 80 | 120 | 80 |
| தக்காளி | 50 | 30 | 25 | 30 | 40 | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 35 | 40 | 50 | 60 | 40 |
| கோவா | 70 | 80 | 65 | 60 | 70 | 100 | 40 |
| கரட். | 100 | 80 | 70 | 80-120 | 100 | 120 | 80 |
| பூசணி | 40 | 30 | 20 | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 70 | 80 | 30 | 50 | 50 | 80 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 35 | 50 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 75 | 80 | 70 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 65 | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 180 | 110 | 140 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 | 80 | 40 | 100 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 60 | 80 | 70 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 30 | 80 | 80 | 60 | 50 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 100 | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 55 | 80 | 80 | 120 | 70 |
| கறிமிளகாய் | 140 | 100 | 50 | 120 | 100 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 550 | 500 | 425 | 400 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 120 | 200 | 70 | 100 | 120 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 35 | 60 | — | 60 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 20 | 40 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 200 | 150 | 150 | 140 | 160 | 300 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-40 | 50 | 40 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 140 | 200 | 110 | 140 | 140 | 120 | 160 |
| வெங்காயப்பூ | 250 | 150 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | 40 | 25 | 40 | 40 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | 50 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சிங்களத் தீவிரவாதிகளால் சந்திரிகாவின் கணவர் கொலை 145

**தப்பி ஓட்டம்**

ரணதுங்காவைச் சுட்டவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடிவிட்டார்கள். அவர்கள் கொண்டு வந்த சூட்கேசும் தலையில் அணியும் டோப்பாவும் தரையில் கிடந்தன. அவர்கள் மாறு வேடத்தில் வந்து இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

ரணதுங்கா சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி ரேடியோவில் அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இலங்கை முழுவதும் பரபரப்பு ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் அவரது வீட்டில் கூடினார்கள்.

சம்பவம் நடந்த போது ரணதுங்காவின் மாமியாரான சிறிமாவோ பண்டாரநாயகா கிராமத்தில் உள்ள தன் வீட்டில் இருந்தார். மருமகன் சுட்டுக் கொல்லப்பட்ட தகவல் தெரிந்ததும் அவர் கொழும்புக்கு விரைந்தார்.

ரணதுங்காவைச் சுட்டுக் கொன்றவர்கள் சிங்களத் தீவிரவாதிகள் என்பது விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது.

**நடிகர்**

43 வயதான ரணதுங்கா கொழும்பில் உள்ள பெனடிக்ட் கல்லூரியில் படித்தவர். 100 க்கும் மேற்பட்ட படங்களில் கதாநாயகனாக நடித்து இருக்கிறார்.

இவர் முதலில் நடித்த அந்தனே கதரேலி படம் 1969 ஆம் ஆண்டு வெளிவந்தது.

**தமிழகம் வந்தார்**

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண தீவிர முயற்சி எடுத்துக் கொண்டவர் ரணதுங்கா.

அதற்காகத் தன் மனைவி சந்திரிகாவுடன் 1986 ஆம் ஆண்டு ஜுன் மாதம் தமிழ் நாட்டுக்கு வந்தார். 22,23,24 ஆகிய 3 நாட்களும் சென்னையில் தங்கி தமிழர் தலைவர்களையும் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார்.

மனிதாபிமான அடிப்படையில் நல்லெண்ணத் தூதுவனாக வந்து இருக்கிறேன். இலங்கை தமிழர் பிரச்சினைக்கு நல்ல முடிவு ஏற்படும் வரை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை வற்புறுத்திக் கொண்டே இருப்பேன் என்று அப்போது அளிக்கப்பட்ட வரவேற்பில் கூறினார்.

**எம்.ஜி.ஆருடன் சந்திப்பு**

அந்த நேரத்தில் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆரை ரணதுங்கா சந்தித்துப் பேசினார். இருவரும் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தனர். சென்னை ராமாவரம் தோட்டத்தில் உள்ள எம்.ஜி.ஆர். வீட்டில் இந்தச் சந்திப்பு நடந்தது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றியும் ஜெயவர்த்தனாவுடன் நடத்த இருக்கும் பேச்சுப் பற்றியும் எம்.ஜி. ஆரிடம் ரணதுங்கா கூறினார். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர் அமிர்தலிங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களையும் ரணதுங்கா சந்தித்தார்.

தமிழீழ விடுதலைப்புலி இயக்க ஆலோசகர் பாலசிங்கம், தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத் தலைவர் உமாமகேஸ்வரன், ஈழ புரட்சிகர அமைப்பு (ஈராஸ்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர். எல்.எப்.), தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) ஆகியவற்றைச் சேர்ந்த தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

(கணவர் சுட்டுக் கொல்லப்பட்டதால் அதிர்ச்சியடைந்த சந்திரிகா, அரசியலை விட்டு ஒதுங்கி, வெளிநாடு சென்று வாழ்ந்தார்.

நீண்ட இடைவெளிக்குப் பின் இலங்கை திரும்பி தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியானார்.)

விடுதலைப்புலிகள் மீது இந்திய அமைதிப்படை தாக்குதல் நடத்துவதாகப் பிரதமர் ராஜீவ்காந்திக்குப் பிரபாகரன் கடிதம் எழுதினார்.

இலங்கையில் பூரண அமைதியை நிலைநாட்டும் நோக்கத்துடன் இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு ராஜீவ்காந்தி அனுப்பினார்.

ஆனால் எதிர்பாராத விதமாக அமைதிப் படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமே மோதல்கள் ஏற்பட்டன.

**பிரபாகரனின் கடிதம்**

இது பற்றி 12.10.1987 அன்று பிரதமர் ராஜீவ்காந்திக்குப் பிரபாகரன் ஒரு கடிதம் எழுதினார்.

அதில் அவர் கூறியிருந்ததாவது,மிகவும் அபாயகரமான சூழ்நிலையில் இந்த அவசர கடிதத்தை அனுப்புகிறேன்.

விடுதலைப்புலிகளுடன் போர் தொடுப்பது என்ற நிலையை அமைதிப்படை எடுத்த பிறகு எதிர்த்தாக்குதல் நடத்தும்படி நாங்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறோம். எங்களையும் எங்களது மக்களையும் தற்காத்துக் கொள்ளவே இந்த எதிர்த் தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது.





(தொடரும்)

# வெட்கக்கேடு

## துமிந்த திஸாநாயக்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஜெனீவா சென்றமை வெட்கப்பட வேண்டியது என கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரித்துள்ளார்.**



கொழும்பு பத்திரிகை யொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நிறுவப்பட்டுள்ள தேசிய அரசாங்கத்திற்கு எதிராக முறைப்பாடு செய்ய சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினர் ஜெனீவா சென்றுள்ளனர்.

இந்த நிலைமை வெட்கப்பட வேண்டிய ஓர் நிலைமையாகும். எதிர்க்கட்சியில் அமரும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கட்சியின் பிரதிநிதிகளாகவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களாகவோ ஜெனீவா செல்லவில்லை.

தனிப்பட்ட ரீதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே ஜெனீவா சென்றுள்ளனர். கட்சி என்ற ரீதியில் ஜெனீவா சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் எந்தவொரு நடவடிக்கைக்கும் பொறுப்பு ஏற்கப்போவதில்லை.

மின்சார நாற்காலி தண்டனையிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் படையினரை பாதுகாத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டவர்களுக்கு நன்றி பாராட்ட ஜெனீவா சென்றிருக்க வேணடும்.

எனினும் இந்த தரப்பினர் ஜனாதிபதி உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக முறைப்பாடு செய்யவே ஜெனீவா சென்றுள்ளனர்.

உலகின் அனைத்து நாடுகளது ஆதரவும் ஜனாதிபதிக்கு கிடைத்துள்ளது. இனறு நாட்டுக்கு சர்வதேச ரீதியில் எதிரிகள் யாருமில்லை.

கடந்த காலங்களில் ஜெனீவாவைக் காண்பித்து காண்பித்து முன்னாள் ஜனாதிபதியை மின்சார நாற்காலயில் வைத்து தண்டிக்கப் போவதாக கூச்சலிட்டவர்கள் யாரின் ஒப்பந்த அடிப்படையில் தற்போது ஜெனீவா செல்கின்றனர் என்பது முழு நாட்டுக்குமே தெரியும் என துமிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## அடுத்த 2 மாதத்துக்குள் வெளிப்படுத்துவோம்

### பிரதமர் அறிவிப்பு

நல்லாட்சி அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியின் படி இளைஞர். யுவதிகளுக்கு 10 இலட்சம் தொழில்வாய்ப்புக்களை வழங்கும் வேலைத் திட்டம் எதிர்வரும் 2 மாதங்களில் ஆரம்பித்து வைக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் பற்றி சிலர் கேள்வி எழுப்பி வருகின்றனர். எமது அரசாங்கம் என்ன செய்தது? என்ன செய்யப்போகிறது என்பதை எதிர்வரும் 2 மாதத்துக்குள் வெளிப்படுத்துவோம் எனவும பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் ஒளித்து மறைத்து எதனையும்செய்யாது. எதனைச்செய்தாலும்அதுபாராளுமன்றத்துக்கு முன் வைத்து. நாட்டுக்கு அறிந்து கொள்ள வழி செய்வோம் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

## முன்னாள் அரச தலைவர்கள் மீது ஜனாதிபதி மைத்திரி குற்றச்சாட்டு



முன்னைய அரச தலைவர்கள் சிலர் ஸ்ரீலங்கன் விமானசேவைக்கு கடும் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தி இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற நிதியமைச்சின் புதிய அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. முன்னைய அரச தலைவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது தனி விமானங்களில் பயணங்களை மேற்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் செல்லும் நாடுகளில் குறித்த விமானங்கள் பல நாட்கள் வரை நிறுத்தப்பட்டிருக்கும். இதன் காரணமாக விமானசேவைக்கு பாரிய பொருளாதார இழப்பு ஏற்பட்டிருந்தது.

ஆனால் எனது வெளிநாட்டுப் பயணங்களுக்கு நான் ஒருபோதும் தனி விமானங்களைப் பயன்படுத்தியது கிடையாது.

அத்துடன் பயணிகள் விமானத்தில் பயணம் செய்யும் போதும் குறிப்பிட்ட சிலர் தவிர பெருமளவானோரை அழைத்துச் செல்வதும் இல்லை.

கடந்த. காலங்களுடன் ஒப்பிடுகையில் ஜனாதிபதி செயலகத்தின் செலவுகள் 60 வ்தம் குறைந்துள்ளது. பொதுமக்களின் பணத்தை வீணாக்கும் செயற்பாடுகள் எனது பதவிக் காலத்துக்குள் முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

அத்துடன், அரச அதிகாரிகள் மட்டுமன்றி அரசியல் வாதிகளும் நிதிக்கையாளுகை தொடர்பான அரச விதிகள் தொடர்பில் மீண்டும் கவனம் செலுத்துவது சிறந்தது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-5)

## சிகரெட் கம்பனிக்கு எதிராக மட்டக்குளியில் ஆர்ப்பாட்டம்




கொலைகார சிகரெட் கம்பனிக்கு எங்களது சாபக்கேடு என்ற வாசகங்களை ஏந்திய ஆயிரக கணக்கானவர்களுடன் சர்வ மதத் தலைவர்கள் பங்கு பற்றிய ஆர்ப்பாட்ட பேரணியொன்று நேற்று முன்தினம் மட்டக்குளியில் அமைந்துள்ள சிகரெட் கம்பனிக்கு முன்னால் இடம் பெற் றது. இலங்கையில்சிகரெட்பாவனையினால் வருடத்திற்கு 20 ஆயிரம் பேர்வரை உயிரிழக்கின்றனர். மேலும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளின் தந்தையர்களை கொலை செய்யும் கொலைகார சிகரெட் கம்பனியானது, தங்களது இலாபத்தில் 92% த்திற்கு அதிகமான தொகையை பிரித்தானியா மற்றும்அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கே வழங்குகின்றது.

இலங்கையர்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றி சூறையாடும் சிகரெட் கம்பனியின் வருடாந்த பொதுக் கூட்டம் நேற்று முன்தினமாகும். மக்களின் துயரங்களை கருத்திற் கொள்ளாது இலாபத்தை மட்டும் நோக்காகக் கொண்டு செயற்படும் சிகரெட் கம்பனிக்கு தங்களின் கண்டனத்தை தெரிவிப்பதற்காகவும், இவர்களால் இறந்த ஆத்மாக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவுமே இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதாக தெரிவித்தனர். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### பிறந்த வீடும் புகுந்த வீடும்

தான் வைத்ததுதான் சட்டம். மாமியாருடன் சண்டை, மச்சாள்மாருடன் பேச்சுவார்த்தை இல்லை. மைத்துனர்களுடன் ஒற்றுமை இல்லை. புகுந்த வீட்டிற்கும் பிறந்த வீட்டிற்கும் இடையே சுமுகமான உறவு இல்லை. கணவனை அவன் தாயிடம் இருந்து பிரித்த இரக்கமற்ற செயல். தாய் வழிச் சொந்தத்துடன் மட்டும் நல்லுறவு அல்லது அடியோடு மாறி விட்டாள் என்ற குற்றச்சாட்டு.

இவை ஒரு பெண்ணிற்குப் பெருமையா சேர்க்கும்? ஒருக்காலும் இல்லை.

திருமணமான ஒரு பெண் தன் கணவனை விட அவனது தாயையே பெரிதும் கவர்ந்து இழுத்துக் கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படை உண்மையை உணர்ந்த பெண்கள் நற் பெயருடன் காலத்தை ஓட்டுகிறார்கள்.

அதை நினைத்துக் கணவன் வெளியில் விரும்பாதது போல் காட்டிக் கொண்டாலும் உள்ளூர மிகவும் விரும்புவான்.

மாறாக கணவனைக் கைக்குள் போட்டுக் கொண்டு விட்டு மாமியாரைப் பொருட்படுத்தாமல் நடந்து கொள்ளும் பெண்களுக்கு மனக் கஸ்டம் ஒன்றே மிஞ்சும்.

பிறந்தகத்துடன் சம்பந்தப்பட்டவர்களை ஒருவிதமாகவும் புகுந்தகத்துடன் சம்பந்தப்பட்டவர்களை வேறு விதமாகவும் நடத்துவதாக இரு வழியினரும் குறைகூறாத படி பார்த்துக் கொண்டால் அதுவும் நற்பெயருக்கு வழி வகுக்கும்.

புகுந்த வீட்டைப் பற்றி பிறந்த வீட்டிலும் பிறந்த வீட்டைப் பற்றி புகுந்த வீட்டிலும் விரும்பத்தகாத விடயங்களையெல்லாம் காதில் விழும். கண்டும் காணாமல் இருப்பதை விட்டு விட்டு. இங்கே சொல்வதை அங்கே சொல்வது. அங்கே சொல்வதை இங்கே சொல்வது என ஆரம்பித்து விட்டால் அதன் விளைவுகள் சமாளிக்க முடியாததாய் ஆகிவிடும். சொல்லித்தான் ஆக வேண்டும் என்கிற சூழ்நிலை உருவான பின்பும் கூட மிகைப்படுத்தாமலும் முடிந்தால் அடக்கியும் சொல்ல வேண்டும்.

மாமியார், மாமனார், மச்சாள்மார், மைத்துனன் ஆகியோரிடம் காணும் நற்குணங்களை மட்டும் சுற்றி இருப்பவர்களிடம் சொல்ல வேண்டும். நேரிடையாகப் பாராட்டுவது என்பது முகஸ்துதி என்றும் ஐஸ் என்றும் பட்டங்கள் சூட்டப்பட்டு எடுபடாமல் போய்விட மேற்கூறிய முறை மட்டும் பெரும் வெற்றியைத் தரும்.

ஒரு தாய்க்கு தன் மகள் புகுந்த வீட்டில் நன்கு நடத்தப்படுகிறாளா? அவள் மகிழ்ச்சியுடன் இருக்கிறாளா? என்பதைப் பற்றி மட்டுமே அதிக அக்கறை.

ஒருமாமியாருக்குத் தன் மருமகள் தன்னை மதிக்கிறாளா? தன்னைப் பற்றி உயர்வான கருத்து வைத்திருக்கிறாளா? குடும்பப் பொறுப்புக்களை அக்கறையுடன் மேற்கொள்கிறாளா? என்பது பற்றியே மிகுந்த அக்கறை. மற்றவையெல்லாம் அவளுக்கு இரண்டாம் பட்சம்.

இவற்றையெல்லாம் திருமணமான ஒரு பெண் உணர்ந்து வைத்திருப்பதோடு அதன்படி செயற்படவும் செய்தால் அவளால் அனைவருக்கும் மன மகிழ்ச்சியைத் தரமுடியும். எல்லாவற்றிற்கும் மேலாக—

புகுந்த வீட்டிற்கும் பிறந்த வீட்டிற்கும் இடையே உறவுப் பாலமாக செயற்படவும் ஏதுவாக இருக்கும்.

**லேனா தமிழ்வாணன்**

# வடக்கு முதலமைச்சருடன் எந்தப் பிரச்சினையும் இல்லை!



# நல்லிணக்கமே எமக்குத்தேவை

## வடக்கு ஆளுநர் குரே வலியுறுத்து

(கொழும்பு)

**வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் எனக்கு இதுவரை எந்தப் பிரச்சினையும் இல்லை.என்னால் அவருக்கும் பிரச்சினை இல்லை. நல்லிண்ணக்கமே எமக்குத்தேவை என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.**

பத்தரமுல்லையிலுள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

நயினாதீவில் புத்தர் சிலை அமைப்பதற்கு யாரா லும் தடை விதிக்கப்படவில்லை.

நயினாதீவில் புத்தர் சிலை அமைப்பது தொடர்பாக வடக்கிலிருந்து தெற்கிலுள்ள பத்திரிகைகளைப் பார்த்தேன். புத்தரின் சிலை அமைக்கப்படுவது நிறுத்தப்படுகிறது என்று தெற்கிலுள்ள பத்திரிகைகளில் உள்ளது. இதைப் பார்த்தவுடன் தெற்கிலுள்ள அப்பாவி மக்கள் கவலையடைவர்.

வடக்கிலுள்ள பத்திரிகைகளில் எவ்வாறிருந்தது? கோயிலை மறைத்து இந்த சிலை அமைக்கப்படுவதாக இருந்தது. இவை இரண்டும் உண்மையல்ல. இரண்டிலும் பொய்யான பிரசாரங்கள்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நான் நயினாதீவுக்குச் சென்றேன். தடை என்று கூறப்படும் கதை பொய்யாகும். இதற்கு கரையோர பாதுகாப்புத் தரப்பினரிடம் அனுமதி பெற வேண்டும். அதைத்தான் யாழ். அரச அதிபரும் குறிப்பிட்டிருந்தார். தடை செய்யப்படவில்லை.

இதேவேளை, வடக்கில் கூறப்படுவதுபோல கோவிலும் மறைக்கப்படவில்லை. நயினாதீவு விகாரைக்குள் தமிழ்க் கடவுள்கள் இருக்கின்றனர். ஊடகங்களில் காட்டப்படுவது எல்லாம் உண்மை என்ற நிலையில் மக்கள் உள்ளனர். ஆனால், ஊடகங்களும் தவறிழைக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

தமிழ் மக்களின் அதீத நம்பிக்கையை வென்ற தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளங்குகின்றார்.

என்னுடன் பேசும் மக்களின் கருத்துக்களில் இது வெளிப்படுகின்றது. அதைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது அவருடையதும் - அரசினதும் - எம்முடையதும் பொறுப்பாகும்.

முரண்பாடுகள் எவ்வளவு ஏற்பட்டாலும், இறுதியில் நல்லிணக்கமே ஏற்படும்.

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு மீண்டும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என வெவ்வேறு தரப்பினரால் கருத்து வெளியிடப்பட்டுவருகின்றது. அத்துடன் பல்வேறு விதமாக செய்தி வெளியிடப்பட்டு வருகின்றது. அதனால் வட மாகாண ஆளுநர் என்ற வகையில், உண்மையை வெளிப்படுத்த வேண்டியது எனது பொறுப் பாகும்.

நல்லிணக்கம் என்ற சொல்லை நகைப்புக்குட்படுத்தவும் அது நடைமுறைச் சாத்தியமற்றது என்றும் அது அடைய முடியாத இலக்கு என்றும் சிலர் தற்போது காட்ட முயற்சிக்கின்றனர்.

நாட்டில் மீண்டும் தீவிரவாதம் தலை தூக்குவதாகக் கூறி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்ப டுத்த முயற்சிக்கின்றனர். முரண்பாடுகள் எவ்வளவு ஏற்பட்டாலும் இறுதியில் நல்லிணக்கமே ஏற்படும். நல்லிணக்கம் என்பது அவசியம்.

கருத்துக்களுக்கிடையிலான யுத்தம் ஊடகங்களுக்கிடையிலான யுத்தமே தற்போதுள்ளது. தகவல் பகிரப்படும் முறையில்தான் மக்களின் கருத்து வெளிப்படுகிறது.

இந்தக் குறுகிய காலத்தில் நான் பார்த்த அளவில் வடக்கில் நூற்றுக்கு 70 வீதமான மக்கள் மிகவும் அப்பாவிகள், கஷ்டப்படுபவர்கள், மிகவும் நல்லவர்கள்.

ஆனால் அந்த மக்களின் கருத்து வெளிப்படுத்தப்படுவதில்லை. மிகைப்படுத்தப்பட்ட - திரிபுபடுத்தப்பட்ட கருத்து அவர்களின் கருத்தாக வெளிப்படுத்தப்படுகிறது. இது குறித்து நாம் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

தவறைத் திருத்திக் கொள்ள வரலாற்றில் மற்றுமொரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறி பண்டா - செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபோது அது கிழித்தெறியப்பட்டது.

அதன் பின்னர் ஐ.தே.க. அரசு இதைத் தீர்க்க முயற்சித்தபோது பேரணி சென்று 'ஹர்த்தால் செய்து நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் கொல்வின் ஆர்.டி.சில்வா இரு மொழிக ளையும் அரச கரும மொழிகளாக்க வேண்டும் என்றார்.

அதைப் புறக்கணித்து செய்த போராட்டங்கள் பாரதூரமானது. இன்று யாழ்ப்பாணம் சென்றால் நாம் சொல்வது புரியவில்லை. இது பாரிய பிரச்சினையாக உள்ளது. அந்த மக்களுக்கு சிங்களம் தெரியாது.

அதனால், மொழி கற்பிக்கும் நடவடிக்கை தெற்கில் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. இதை வடக்கில் செயற்ப டுத்த வேண்டும்.

தொடர்ந்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது.

**கேள்வி -சாவகச்சேரி சம்பவத்தில் ஜனாதிபதியின் உயிருக்கு அச்சுறுத்தல் எனக் கூறப்படுகின்றதே?**

பதில்- இணையத் தளங்களைப் பற்றித் தெரியும் தானே. இதுதான் உள்ள பிரச்சினை. என்னைக் கொல்ல வந்ததாக என்னால் குறிப்பிட முடியும். வெள்ளவத்தையை தாக்க வந்ததாக மற்றொருவர் குறிப்பிட முடியும்.

பொது மத்திய நிலையத்தில் இதை வெடிக்கக் கொண்டு வந்ததாக மற்றுமொருவருக்கு கூற முடியும்.இவை அனைத்தும் எண்ணங்களின் வெளிப்பாடு.

எண்ணங்களின் சுதந்திரமான வெளிப்பாடு சமூகமயமாக்கப்படுகிறது. இருப்பினும் அது நன்மைக்காக கொண்டுவரப்பட்டதொன்றல்ல. வடக்கில் ஜனாதிபதி பிரபல்யமடைந்து வருவதற்கு அங்குள்ள அடிப்படைவாதிகள் எதிர்க்கின்றனர். மக்களின் ஆதரவை இந்தத் தலைவர் அதிகளவில் பெறுவதை அடிப்படைவாதிகள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். அப்படி நடப்பதற்கும் இடமுள்ளது. இதில் அரசியல் அர்த்தமும் இருக்க முடியும்.

வடக்கு மக்கள் ஒரு விடயத்தால் மட்டும் துன்பம் அனுபவிக்கவில்லை. மொழி தெரியாததால் பிரச்சினை. பொருளாதார பிரச்சினை. தெற்கில் விரட்டப்பட்ட குல பேதம் உள்ளது. இதைப் பற்றி எவரும் பேசுவதில்லை. எமது பகுதியிலும் இந்த குல பேதம் இருந்தது. ஆனால், எம்மைவிட மிகப் பாரியளவில் அங்குள்ளது. இது சரியான முறையில் வெளிக் கொணரப்படுவதில்லை. அந்த அப்பாவி மக்கள் பாவம்.

**கேள்வி - கொக்கிளாய் பிரதேசத்தில் பொது மக்களின் காணியில் விகாரை அமைக்கப்படவுள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளதே?**

பதில் - அது குறித்து நான் தகவலறிந்தேன். அனைத்து தகவல்களையும் என்னிடம் தருமாறு கூறியுள்ளேன். தகவல்களைப் பெற்றுக் கொண்ட பின்னர்தான் நான் கூற முடியும். தனிப்பட்ட இடத்தில் தாம் விரும்பி விகாரை, கோவில் அமைப்பதை எவராலும் தடுக்க முடியாது.

**கேள்வி - முதலமைச்சரின் ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைக்கின்றதா?**

பதில் - எனக்கு எதற்கு ஆதரவு? நல்லிணக்கமே எமக்குத் தேவை. முதலமைச்சர் விக்னேஸ்வரனால் எனக்கு இதுவரை எந்தப் பிரச்சினையும் இல்லை. என்னால் அவருஜக்குப் பிரச்சினையும் இல்லை. அரசியல் பிரச்சினைதான் இருக்கின்றது. அதை அரசியல் ரீதியாக தீர்க்க வேண்டும். எனது எந்த பணிக்கும் அவர் தடை ஏற்படுத்தவில்லை.

வடக்கில் தமிழ் ஆளுநர் வரவேண்டும் என்ற கோரிக்கை இருந்தது. ஆனால் நான் ஆளுநராக சென்ற போது எனக்கு சிறந்த வரவேற்பு கிடைத்தது. நாம் கடைப்பிடிக்கும் கொள்கைக்கு கிடைத்த வெற்றிதான் அது.

**கேள்வி- வடக்கில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்படுமா அல்லது தேசிய பாதுகாப்பு கருதி சில காணிகள் விடுவிக்கப்படாமலிருக்குமா?**

பதில்- தேசிய பாதுகாப்பு என்பது முக்கியமாகும். அதை ஒருபோதும் நிபந்தனைகளுக்கு உட்படுத்தமாட்டோம். தேசிய பாதுகாப்புக்குத் தேவையானவற்றை வைத்துக்கொண்டு ஏனையவற்றை வழங்குவோம்.

தேசிய பாதுகாப்புக்கு எவர் முன்னிலையிலும் நிபந்தனையிட முடியாது. யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படுள்ள நிலையில், நாட்டின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மக்கள் வாழ்க்கைக்கு ஏற்றவாறு காணிகளை வழங்க வேண்டும்.

**கேள்வி - வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை மீள் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கின்றீர்களா?**

பதில் - வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட வேண்டும்.

**கேள்வி:- வடக்கின் பாதுகாப்பு நிலைவரம் குறித்து பல்வேறு தரப்பினர் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனரே?**

பதில் - நான் யாழ். கட்டளைத்தளபதி மஹேஸ் சேனாநாயக்கவுடன் உரையாடினேன். யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 6 ஆண்டுகளில் இவ்வாறான பொருட்கள் கண்டெடுக்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன. எதிர்காலத்திலும் இன்னும் கிடைக்கும்.

மழை நின்ற பின்னும் தூறல் போல, மழை நின்ற பின்னும் மண்ணில் ஈரம் இருப்பது போலாகும். இது தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயம் அல்ல என்று அவர் கூறினார்.

எமது இராணுவம் புதுமையானது.

30 வருட யுத் தம் புரிந்து பாரிய அனுபவத்தைக் கொண்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (இ-9)

# கேபிள் கார் செயற்றிட்டத்தை இலங்கையில் ஆரம்பிக்க அனுமதி

## முதற்கட்டமாக நுவரெலியாவில்

கேபிள் மூலம் பயணிக்கும் கார் செயற்றிட்டத்தை இலங்கையின் நுவரெலியா பகுதியில் ஆரம்பிப்ப தற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையில் நிறுவப்படும் முத லாவது கேபிள் கார் திட்டத்திற்கு எயிட்கன் ஸ்பென்ஸ் மற்றும் சீனா வின் ஷன்டான் இன்ரர்நஷனல் ஆகிய நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இந்தச் செயற்றிட்டத்திற்கு 60 மில்லியன் அமெரிக்க டொலர் வரை செலவாகும் என மதிப்பிடப் பட்டுள் ளது.

முதற்கட்டமாக நுவரெலியா வலது மலையிலிருந்து



கிரெகரி வாவிக்கு மிடையில் அமையவுள்ளது. இது சுமார் 2 கிலோமீற்றர் தூரமாகும். இரண்டாம் கட்டமாக நானுஓயா நகரிலிருந்து நுவரெலியா நகருக்கு நான்கு கிலோமீற்றர்தூரத்திற்குஇந்தக்கேபிள் கார் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இந்த நிர்மாணப் பணிகள் இந்த வருடத்தின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்படும் என்றும் இதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் நுவரெலியா மேயர் மகிந்த தொடம்பேகமகே தெரிவித்துள்ளார். (3)

# சாவகச்சேரியில் மீட்ட தற்கொலை அங்கி பொது எதிரணியின் சதியாகயிருக்கலாம்

## விக்கிரமபாகு கருணாரட்ன சந்தேகம்

(கொழும்பு)

**சாவகச்சேரியில் கிடைக்கப்பெற்ற தற்கொலை அங்கி ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் சதித்திட்டமாகவும் இருக்கலாம் என்று நவ சமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்த சந்தேகம் வெளியிட்டுள்ளார்.**



கொழும்பில் அமைந்துள்ள சமசமாஜ கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல், தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள், வெள்ளை வான் கலாசாரம் மற்றும் உண்மைக்காக குரல் கொடுப்பவர்களுக்கு அச்சுறுத்தல் போன்ற காரணங்களை முன்வைத்து நாங்கள் ஜெனிவாவில் உள்ள மனித உரிமை பேரவையில் முறைப்பாடு செய்வதற்கு அன்று முற்பட்டோம்.

இதன் போது ஜெனிவாவில் முறைப்பாடு செய்வதற்கு செல்பவர்கள் தேசத்துரோகிகள் என்றும் அவர்களை கல்லெறிந்து கொலை செய்ய வேண்டும் எனவும் கூறினார்கள்.

இவ்வாறான நிலையில் இன்று எதிர்க்கட்சியில் இருக்கும் தங்களுக்கு பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு போதுமான நேரம் வழங்கப்படுவதில்லை, எதிர்க்கட்சியில் அதிக பலம் இருக்கும் எங்களுக்கு எதிர்க்கட்சி பதவி மறுக்கப்பட்டுள்ளது, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு தொடர்ந்து நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றனர் போன்ற காரணங்களை முன்வைத்து ஜெனிவாவில் அமைந்துள்ள சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தில் முறைப்பாடு செய்வதற்காக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் ஜெனிவா சென்றுள்ளனர். இவர்களின் நிலைப்பாட்டை மக்கள் புரிந்துகொள்வார்கள்.

மேலும் யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் கண்டெடுக்கப்பட்ட தற்கொலை அங்கி எவ்வாறு அங்கு வந்தது என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் இது விரக்திக்குள்ளான தமிழ் இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் தூக்க ஆரம்பித்துள்ளார்களா? என்று ஆராய்ந்து பார்க்க வேண்டிய விடயமாகும்.

தமிழ் அரசியல் கைதிகள் இன்னும் விடுதலை செய்யப்படாமல் இருக்கின்றனர் என்ற வேதனைக்கு இதனை செய்திருக்கலாம். இந்த நிலைமையில் இருந்து அவர்களை மீட்பதென்றால் அதிகாரப்பகிர்வு, அவர்களின் காணிகளை மீள ஒப்படைத்தல், இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்தல்போன்ற வேலைத் திட்டங்களை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டும்.

அப்படியில்லையென்றால் இந்த செயல் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் சதித்திட்டமாகவும் இருக்கலாம்.

அவர்களுக்கு இராணுவத்துக்குள் மற்றும் யாழில் தொடர்புகள் இருக்கின்றன. இராணுவத்துக்குள் இருக்கும் அரசியல் இலாபம் கொண்டவர்கள் மூலம் இதை மேற்கொண்டு சர்வதேசத்துக்கு காண்பிக்க இதனை செய்தார்களா என்பது குறித்தும் ஆராய வேண்டும்.

சதிகாரர்கள் திட்டமிட்டு இதனை இந்த இடத்தில் வைத்து சர்வதேசத்துக்கும் நாட்டு மக்களுக்கும் காட்டி பீதியை ஏற்படுத்தி, அரசாங்கத்தின் நல்லிணக்கம், அதிகாரப்பகிர்வு இவை அனைத்தும் பொய்யானவை என்று கூற செய்திருக்கலாம்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி எப்படியாவது அதிகாரத்துக்கு வர வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர்.

தற்போது இந்த தற்கொலை அங்கி கிடைத்திருப்பது அவர்களுக்கு இனிப்பு கிடைத்தது போன்றதாகும். அத்துடன் அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரத்தை கொண்டு செல்வதற்கும் வாய்ப்பாக மாறியுள்ளது.


எனவே இது தொடர்பாக அரசாங்கம் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு உண்மை நிலையை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

இல்லையென்றால் இவ்வாறான செயல்கள் அரசாங்கத்துக்கு எதிரான எதிர்க்கட்சியினரின் பிரசாரத்தை உண்மைப்படுத்தி விடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 680

Search for people, places and things Nagendram Home

ரொகான்




சங்கவி




கோபிகா




நிஷாந்தன்



ரதி




கரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தடையை மீறி நேற்றும் ஏவுகணை பரிசோதனை

## வடகொரியா அத்துமீறல்

(பியாங்யாங்)

**சர்வதேச நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் எதிர்ப்பை மீறி கண்டம் விட்டு கண்டம் பாயும் சக்தி வாய்ந்த ஏவுகணையை வடகொரியா நேற்றும் பரிசோதித்துள்ளது.**



வடகொரியா, சக்திவாய்ந்த அணுகுண்டு, ஐதரசன் குண்டு மற்றும் அணு ஆயுதங்களை நீண்டதூரம் சுமந்து சென்று தாக்குதல் நடத்தும் ஏவுகணைகள் ஆகியவற்றை அவ்வப்போது பரிசோதித்து வருகிறது.

இதுதவிர, அண்டை நாடான தென்கொரியாவை அச்சுறுத்தும் விதமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது. ஐ.நா. பாதுகாப்பு சபை கட்டுப்பாட்டை மீறி வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் நடந்துகொள்வதால் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளின் எதிர்ப்பையும் சந்தித்து வருகிறார்.

இதனால் அந்த நாட்டின் மீது சில தடைகளும் விதிக்கப்பட்டன. இருந்தபோதும், பேரழிவை ஏற்படுத்தும் ஐதரசன் குண்டு சோதனை நடத்தி மேலும் பதற்றத்தை உருவாக்கியது வடகொரியா.

இதையடுத்து வடகொரியா மீது கடுமையான பொருளாதார தடைகள் விதிக்க ஐ.நா. பாதுகாப்பு சபை அண்மையில் ஒருமனதாக ஒப்புதல் அளித்தது. இந்த தடைகளை எல்லாம் பொருட்படுத்தாத வடகொரியா அடுத்தடுத்து கண்டம் விட்டு கண்டம் தாண்டி பாய்ந்து செல்லும் அணு ஆயுத ஏவுகணைகளை கடந்த மாதம் பரிசோதித்தது.

இந்நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை மேலும் ஒரு சக்தி வாய்ந்த ஏவுகணையை வடகொரியா பரிசோதித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

உள்ளூர் நேரப்படி நேற்று பிற்பகல் 12.35 மணியளவில் கண்டம் விட்டு கண்டம் தாவும் அதிநவீன சக்தி வாய்ந்த ஏவுகணையை வடகொரியா பரிசோதித்ததாக தென்கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சான்டாக் நகரில் இருந்து ஏவப்பட்ட இந்த ஏவுகணை எவ்வளவு தூரம் பாய்ந்து சென்றது? திட்டமிட்ட இலக்கை துல்லியமாக தாக்கி, அழித்ததா? இல்லையா? என்பது தொடர்பான உடனடி தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

1300 கிலோமீற்றர் தூரம்வரை பாய்ந்து சென்று தாக்கக்கூடிய வல்லமையுள்ள 'ரோடாங்' ஏவுகணைகளால் அண்டைநாடான ஜப்பானை நொடிப்பொழுதில் தாக்கிவிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஒரு எலியைக் கொன்றால் ரூ.25 பரிசு வழங்கப்படும்

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் எலியை கொல்பவர்களுக்கு ரூ.25 பரிசுத் தொகையாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


பொதுமக்களுக்கு தொடர்ந்து அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் எலிகளை கட்டுப்படுத்த அந்த அரசு இத்தகைய நடவடிக்கையை எடுத்துள்ளது.

குறிப்பாக எலி கடித்து இளம் குழந்தை ஒன்று உயிரிழந்ததை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பெஷாவர் நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவை அமைப்பு சார்பில் கொல்லப்பட்ட எலிகளை சேகரிக்கும் மற்றும் உரிய நபர்களுக்கு ரொக்கத்தை வழங்கும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அதிக எலிகள் புழக்கத்தால் மக்கள் மிகுந்த அவதிக்குள்ளாவதாக தாக்கல் செய்யப்பட்ட பொதுநல வழக்கில் பெஷாவர் உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-5)

## சூகிக்கு அரச ஆலோசகர் பதவி



மியன்மாரின் ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சியின் தலைவியும் அந்நாட்டின் ஜனநாயகப் போராளியுமான ஆன சாங் சூகிக்கு, அரச ஆலோசகர் எனும் பதவியொன்று வழங்கப்படுவதற்கான முன்மொழிவு நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தப் பதவி அதிகாரம் மிக்கதாக அமையுமெனவும் பிரதமர் பதவி போல இருக்குமெனவும் அறிவிக்கப்படுகிறது.

50 ஆண்டுகளுக்கும் மேலாக இராணுவ ஆட்சிக்கு உள்ளாகியிருந்த மியன்மார், கடந்தாண்டு நவம்பரில் இடம்பெற்ற தேர்தலைத் தொடர்ந்து, ஜனநாயக மாற்றமொன்றுக்கு உட்பட முயன்றுவருகிறது. இதில் ஓர் அங்கமாக, 54 ஆண்டுகளுக்குப்பின் ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியாக டின் ஹாயோ நேற்று முன்தினம் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மியன்மாரின் அரசியலமைப்பின்படி, வெளிநாட்டவரொருவரைத் திருமணம் முடித்து, வெளிநாட்டவரின் குழந்தையைக் கொண்டுள்ள ஆன சாங் சூகி, ஜனாதிபதியாக மாற முடியாத நிலை காணப்படுவதன் காரணமாகிறது.

எனினும், ஜனாதிபதியை விட அதிக பலமுள்ள பதவியைத் தான் வகிப்பாரென, ஆன சாங் சூகி தெரிவித்து வந்தார். இந்நிலையிலேயே, சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவின் படி, நாடாளுமன்றத்துக்கு ஆலோசனை வழங்குவதற்கான பொறுப்பு அவருக்குக் காணப்படுவதோடு, தேவைப்படுவதாக எண்ணும் கூட்டங்களைக் கூட்டவும் வரவு-செலவுத்திட்டத்தை உருவாக்கவும் அதிகாரம் வழங்கப்படுகிறது. ஏற்கனவே வெளிநாட்டு அலுவல்கள், கல்வி, சக்தி, ஜனாதிபதி அலுவலக அமைச்சர் ஆகிய நான்கு அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுள்ள ஆன சாங் சூகி, பலமான அமைப பொன்றை அடைந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. புதிதாக உருவாகியுள்ள ஜனநாயக ஆட்சியில், வைத்தியர்கள் தொடக்கம் கவிஞர்கள் வரை இடம்பெற்றுள்ள போதிலும், அரசாட்சிக்கான அனுபவம் குறைந்தவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர்.

எனவே, ஆன சாங் சூகியின் அனுபவம், அவர்களுக்கும் முக்கியமானது எனக் கருதப்படுகிறது. இதே வேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள ஜனநாயக மாற்றத்துக்குப் பின்னரும், நாட்டின் நாடாளுமன்றத்தில் காற்பங்கு ஆசனங்களை இராணுவத்தினரே கொண்டுள்ளதோடு, அமைச்சரவையில் முக்கியமான 3 பதவிகளை, அவர்களே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கிழக்கு ஐரோப்பாவில் அமெரிக்க இராணுவ பிரசன்னம் அதிகரிப்பு

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு பதிலடியாக கிழக்கு ஐரோப்பாவில் அமெரிக்கா தனது இராணுவ பிரசன்னத்தை அதிகரிப்பதாக இராணுவ வட்டாரங்கள குறிப்பிட்டுள்ளன. ஏற்கனவே குறித்த பகுதியில் அமெரிக்காவின் மூன்று படைப்பிரிவுகள் நிலைகொண்டிருக்கும் சூழலில் அங்கு மேலதிகமாக படைப்பிரிவொன்று அனுப்பப்படவுள்ளது.

உக்ரைன்விவகாரத்தில்ரஷ்யாவுடனான பதற்றம் அதிகரித்ததை அடுத்து அங்கு நேட்டோவில் அமெரிக்கா மேலும் படைகளை குவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பா எங்கும் அமெரிக்காவின் 21 இராணுவத் தளங்கள் இருப்பதோடு 62 ஆயிரம் இராணுவத் தரப்பினர் நிரந்தரமாக நிலைகொண்டுள்ளனர். இதில் 25 ஆயிரம் இராணுவத்தினரும் அடங்கும். இந்நிலையில் அனுப்பப்படவிருக்கும் புதிய படைப்பிரிவில் சுமார் 4200 துருப்பினர்கள் இருப்பார்கள் என்று அமெரிக்காவின் ஐரோப்பிய கட்டளையகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு உக்ரைனின் கிரிமியா பிராந்தியத்தை ராஷ்யா தனது ஆட்புலத்திற்குள் இணைத்ததை அடுத்தே ரஷ்யா மற்றும் மேற்கத்தேய நாடுகளுக்கு இடையிலான விரில் அதிகரித்தது.

இந்நிலையில் அண்டை நாடுகளில் ரஷ்யாவின் அத்துமீறல்கள் அதிகரித்திருப்பதாக நேட்டோ தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது. (இ-5)

## ஐ.எஸ்.முன்னணி தளபதி வான் தாக்குதலில் பலி!



சிரியாவின் வடக்குப் பகுதியில் உள்ள ரக்கா நகரில் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதல் ஒன்றில் இஸ்லாமிய தேச குழுவின் (ஐ.எஸ்) மூத்த தளபதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அபு அல்-ஹய்ஜா அல்-ருனுசி என்ற பெயரால் அவர் அறியப்பட்டவர் என தெரிவிக்கும் பிரித்தானியாவை தளமாக கொண்டு செயற்படும் மனித உரிமைகள் நிறுவனமாக சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பகம், அவர் ஐ.எஸ். தலைவர் அபு பக்கர் அல் பக்தாதியின் பிரதிநிதி என கூறியுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் அவரை ஆளில்லா விமானம் மூலம் இலக்கு வைத்ததாக நம்பப்படுகிறது. இந்த அறிக்கை தொடர்பில் அமெரிக்க படையினர் இதுவரை எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

அவர்கள் இதனை உறுதிப்படுத்தினால் அண்மைய வாரங்களில், அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினரால் கொல்லப்பட்ட ஐ.எஸ். குழுவின் மூன்றாவது மூத்த தளபதி இவன் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# தேசிய முக்கியத்துவத்துக்குக் கட்டுப்பட்டதாக ‘சர்வதேச அணு பாதுகாப்பு’ அமைய வேண்டும்

## பிரதமர் மோடி வலியுறுத்தல்



(வோஷிங்டன்)

**சர்வதேச அணு பாதுகாப்பு என்பது அனைத்து நாடுகளின் தேசிய முக்கியத்துவத்துக்கு கட்டுப்பட்டதாக அமைய வேண்டும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவில் வலியுறுத்தியுள்ளார்.**

அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் நடைபெறும் சர்வதேச அணு பாதுகாப்பு உச்சி மாநாட்டில் பங்கேற்க வந்த உலகத் தலைவர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் விருந்து அளித்தார்.

இதன்போது பேசிய மோடி,

அணு பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்து வருவதன் மூலம் உலக நாடுகளின் பாதுகாப்புக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மிகப்பெரிய சேவையாற்றியுள்ளதாக புகழாரம் சூட்டினார். பெல்ஜியம் தலைநகரான பிரஸல்ஸில் அண்மையில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலின்போது தீவிரவாதம் என்பது அணு பாதுகாப்புக்கு எப்படி அச்சுறுத்தலாக மாறும்? என்பதை நாம் கண்கூடாக அறிந்து கொண்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.


இந்த விருந்தில் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்ட உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர். இந்த விருந்தின்போது ஒபாமாவின் அருகில் அமர்ந்து உணவருந்திய பிரதமர் மோடி, அணு பாதுகாப்பு என்பது அனைத்து நாடுகளின் தேசிய முக்கியத்துவத்திற்கு கட்டுப்பட்டதாக அமைய வேண்டும் என வலியுறுத்தினார்.

நமது எதிரிகள் குகைகளில் பதுங்கி இருப்பதில்லை. மாறாக, தற்காலத்தில் கணனி அதிநவீன, ஸ்மார்ட் தொலைபேசிகளுடன் பெரு நகரங்களில் வலம்வரும் தீவிரவாதிகளை கண்டுபிடித்து நாம் வேட்டையாட வேண்டியுள்ளது. இவர்களுடன் சிலநாடுகள் கைகோர்த்துக் கொண்டு அணு ஆயுதங்களை கடத்த முயல்வதால் மிகப்பெரிய ஆபத்தை நாம் எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

தீவிரவாதம் என்பது வேறொருவருக்கு ஏற்பட்ட பிரச்சினை என்ற மனப்போக்கை நாம் கைவிட வேண்டும். ‘அவனது’ தீவிரவாதி, ‘எனது’ தீவிரவாதி என்ற சித்தாந்தத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். தீவிரவாதம் என்பது உலகளாவிய அளவில் இணைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த அச்சுறுத்தலை எதிர கொள்ள நாம் இன்னும் தேசிய அளவில் மட்டுமே செயலாற்றி கொண்டிருக்கிறோம்.

தற்கால தீவிரவாதிகள் 21 ஆம் நூற்றாண்டின் நவீன கண்டுபிடிப்புகளின் மூலம் பேரழிவை ஏற்படுத்த துடிக்கின்றனர். ஆனால் நாமோ, கடந்தகால அணுகுமுறைகளின் மூலமாகவே அவர்களின் சவால்களை சந்தித்து வருகிறோம். தீவிரவாதிகளின் தொடர்புகளும், ஆயுத பரிமாற்றமும் உலகளாவியதாக உள்ளது. ஆனால், நாடுகளுக்கிடையிலான உண்மையான ஒத்துழைப்பு என்பது இதற்கு இணையாக இல்லை என மோடி மேலும் தெரிவித்தார். (இ-5)

# கொல்கத்தாவில் பாலம் இடிந்ததில் பலி எண்ணிக்கை 25 ஆக உயர்வு



கொல்கத்தாவில் கடந்த 7 வருடமாக கட்டப்பட்டு வந்த பாலம் ஒன்று திடீரென நேற்று முன்தினம் இடிந்து விபத்துக்குள்ளானதில் பலியானோரின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐதரபாத்தை சேர்ந்த IVRCL கட்டுமான நிறுவனம் கொல்கத்தாவில் கடந்த 7 வருடமாக கட்டி வந்த பாலம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் பலியானோரின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது. மேலும் இடிபாடுகளுக்குள் இருந்து 90 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.


IVRCL கட்டுமான நிறுவன அலுவலகம் சீல் வைக்கப்பட்டுள்ளதோடு, அந்நிறுவனம் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மீட்பு பணியில் இராணுவமும், மட்புக் குழுவினரும் கிரேன் போன்ற உபகரணங்களுடன் மீட்பு பணியை தொடர்ந்து வருகின்றனர்.

இடிந்து விழுந்த பாலத்தின் அடியில் ஒரு பேருந்து உட்பட ஏராளமான வாகனங்கள் சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு 5 இலட்சம் ரூபாயும் பலத்த காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு 2 இலட்சம் ரூபாயும் அறிவித்து அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீயுடன் பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பு



அமெரிக்காவில் நடைபெறும் அணு சக்தி உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக நேற்றுமுன்தினம் அதிகாலை வோஷிங்டன் சென்றடைந்த பிரதமர் நரேந்திர மோடி, அங்கு மாநாட்டில் கலந்து கொள்ள வந்த நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீயை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின் போது இரு தரப்பு உறவுகள், வர்த்தகம், தொழில்நுட்பம், சுற்றுலா உள்ளிட்ட துறைகளில ஒத்துழைப்பு ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது. இரு தலைவர்கள் சந்தித்தது குறித்து பிரதமர் அலுவலக டுவிட்டர் பக்கத்தில் “நியூசிலாந்து பிரதமருடன் இந்தியா- நியூசிலாந்து இடையேயான வலுவான உறவு குறித்து ஆலோசனை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# ஜெயா வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களை குவிக்கவே இல்லை

## உச்சநீதிமன்றத்தில் மறுப்பு

ஜெயலலிதா வருமானத்துக்கு அதிகமாக சொத்துகளை குவிக்கவே இல்லை என உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதா தரப்பு சட்டத்தரணி நாகேஸ்வரராவ் வாதிட்டுள்ளார்.

சொத்து குவிப்பு வழக்கில் ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேரை கர்நாடக உயர்நீதிமன்றம் விடுதலை செய்ததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்களின மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் விசாரணையில் தி.மு.க. பொதுச்செயலாளர் அன்பழகன் தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அந்தி அர்ஜுனா ஆஜராகியுள்ளார்.

ஜெயலலிதா தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி எல்.நாகேஸ்வரராவ் இதுபோன்ற வழக்குகளில் யாரால் மேல்முறையீடு செய்ய முடியும் என்பது குறித்து சட்டத்தில் மிகவும் தெளிவாகவுள்ளது.

இந்த வழக்கில் அன்பழகன் மேல்முறையீடு செய்ததில் அவருடைய உள்நோக்கம் மிகவும் தெளிவாக தெரிகிறது.

அவர் தி.மு.க.வைச் சேர்ந்தவர். அக்கட்சியின் பொதுச்செயலாளர். இந்த வழக்கில் ஏற்கனவே அரசு தரப்பில் 2 சட்டத்தரணிகள் தங்கள் வாதங்களை வைக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சிரேஷ்ட சட்டத்தரணிகளான துஷ்யந்தவே மற்றும் ஆச்சார்யா போன்றோர் தங்கள் வாதத்தை முடித்து விட்டனர்.

ஆனால் ஒரு கட்சியின் பொதுச் செயலாளர் உச்சநீதிமன்றத்தை தன்னுடைய தேர்தல் பிரசார மேடையாக பயன்படுத்திக் கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கக்கூடாது.

அன்பழகன் தரப்புக்கு இந்த வழக்கில் வாதாட எந்த முகாந்திரமும் கிடையாது. இதை அனுமதிக்கவும் கூடாது என வாதிட்டுள்ளார்.



இதற்கு ஆட்சேபம் தெரிவித்த அன்பழகன் தரப்பு சட்டத்தரணி அந்தி அர்ஜுனா, அன்பழகனுக்கு அனைத்து முகாந்திரங்களும் உள்ளன என்று கூறிய போது நீதிபதிபதிகள் குறுக்கிட்டு, இந்த வழக்கில் அரசாங்க தரப்பில் ஆஜராகி விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் உங்களுக்கு என்ன முகாந்திரம் உள்ளது?

ஏற்கனவே இந்த வழக்கு தொடர்பான ஆவணங்களை ஆராய்ந்து இருக்கிறோம்.

கணக்கில் உள்ள பிழைகள் பற்றி கர்நாடக அரசு தரப்பில் கூறி இருக்கிறார்கள்.

இந்நிலையில் அதையே மீண்டும் உங்கள் தரப்பில் எதற்கு கூற வேண்டும்? எனக் கூறி அன்பழகன் தரப்பு வாதங்களை முன்வைக்க அனுமதி வழங்க மறுத்துள்ளனர்.

ஜெயலலிதா தரப்பு சட்டத்தரணி எல்.நாகேஸ்வரராவ் தன்னுடைய வாதத்தில், இந்த வழக்கு அப்போதைய ஆட்சியினரால் அரசியல் உள்நோக்கத்துடன் தொடரப்பட்டது.

ஜெயலலிதா உள்ளிட்டோரின் வருமானம் அனைத்தும் சட்டத்துக்கு உட்பட்ட வருமானம் ஆகும்.

இதில் வருவாய்க்கு மீறிய சொத்து என்று ஏதுமில்லை என்று நிரூபிக்க எங்களிடம் அனைத்து ஆதாரங்களும் உள்ளன.

சட்டத்தின் அடிப்படையிலும் ஆவணங்களின் வலுவுடனும் நாங்கள் அதனை நிரூபிக்க தயாராக இருக்கிறோம்.

விசாரணை அமைப்பு என்ற முறையில் கர்நாடக அரசு தரப்பு குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க தவறிவிட்டது.

கர்நாடக அரசு குற்றச்சாட்டை முன்வைத்தோடு நிறுத்திக் கொணடார்கள். குற்றச்சாட்டு தொடர்பான ஆவணம் என்ன?

அந்த குற்றச்சாட்டில் எந்த அளவு உண்மைத்தன்மை உள்ளது என்பது போன்ற விடயங்களை அவரகள் முன்வைக்கவில்லை என வாதிட்டுள்ளார்.

பின்னர் இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-5)



# சிறுவர் அரங்கம்

1399

## என் கதை தெரியுமா!




முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை ஆண்டு வந்த அரசனுக்கு அவலட்சணமான ஒரு மகள் இருந்தாள். அவள் குள்ளமாகவும், கூனல் முதுகுடனும் இருந்தாள். வாய் கோணலாய் இருக்கும். பற்கள் வெளியே துருத்திக் கொண்டு தெரியும்

இளவரசிக்கு திருமண வயது வந்தது.

தன் மகளுக்கு திருமணம் செய்து பார்க்க ஆசைப்பட்ட அரசர், "என் மகள் இளவரசியைத் திருமணம் செய்து கொள்ளப் பிரியமுள்ளவர்கள் பெண்ணை வந்து பார்க்கலாம்" என்று முரசு கொட்டி அறிவித்தான்.

அரசனுக்கு ஒரே புதல்வியாதலால், அரசனுக்குப் பின் தங்களுக்கு ராஜ்யம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் பல இளவரசர்கள் வந்து பெண்ணைப் பார்த்தனர். பார்த்ததுமே பேச முடியாமல், தங்கள் ஊர் நோக்கி ஓட்டம் பிடித்தனர்.

மற்றவர்களை போலவே, தனக்கும் ஒரு அழகிய வாலிபன் கிடைக்க வேண்டும் என்று பெரிதும் ஆசைப்பட்டாள் இளவரசி. ஆனால், எந்த ஒரு வாலிபனும் தன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்பாததை அறிந்து, அவள் மனமுடைந்து போனாள்.

ஒருநாள்-

அவள் தன் தந்தையிடம் சென்று, "எந்த ஒரு வாலிபனும் என்னைத் திருமணம் செய்து கொள்ள முன் வரவில்லை. ஆகவே, நான் உயிர் வாழ விரும்பவில்லை," என்று சொல்லி, தன் தந்தை எதிரிலேயே கீழே விழுந்து உயிரை விட்டாள்.

தன் புதல்வியை நன்கு அலங்கரித்து, புதைக்க ஏற்பாடு செய்தான் அரசன். ஆனால், அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் எரிப்பதுதான் நல்லதென்று சொன்னார்கள்.

அதன்படி அரசன் ஈம விறகு அடுக்கி, அவளை எரித்துவிட்டான்.

அவலட்சணமான அந்தப் பெண்ணின் உடம்பு எரிந்து சாம்பலாகிவிட்டது.

அந்தப் பெண்ணினுடைய ஆவி, நேரே இறைவனிடம் போயிற்று. இறைவன் அந்தப் பெண்ணின் ஆவியைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து, "பெண்ணே! உனக்கு விருப்ப மான வரத்தைக் கேள்" என்றார்.

"இறைவா! மகிழ்ச்சி என்றால் எப்படி இருக்கும் என்பதை அறியாது நான் வாழ்க்கை முழுவதும் வாழ்ந்தேன். யாருமே என்னை நேசிக்கவில்லை, இனி எனக்கு ஏற்படுகிற பிறவியிலாவது உலக மக்கள் அனைவருமே என்னை விரும்புமாறு என்னைப் படைக்க வேண்டும்" என்று இறைவனிடம் அந்த ஆவி வேண்டிற்று.

இறைவன் அந்தப் பெண்ணின் ஆவியை, அவளைத் தகனம் செய்த ஈமச் சிதைக்கு அனுப்பி வைத்தார். அங்கு அவளுடைய விலா எலும்புத் துண்டு ஒன்று கிடந்ததால், அதனுள் அந்தப் பெண்ணின் ஆவி புகுந்து, ஒரு புகையிலைச் செடியாயிற்று.

நாட்கள் சென்றன-

ஆட்டு இடையன் ஒருவன் அந்த வழியாகப் போனபோது அந்த புகையிலைச் செடியைக் கண்டான், அந்தச் செடி புதிதாகவும், அழகாவும் இருக்கிறதே என்று நினைத்தான். பிறகு அந்தச் செடியிலிருந்து ஒரு இலையைக் கிள்ளி எடுத்துக் கசக்கி முகர்ந்து பார்த்தான். வாசமாய் இருந்தது. எனவே, அந்தச் செடியிலிருந்து சில விதைகளை எடுத்துப் போய், தனது தோட்டத்தில் பயிர் செய்தான். அவை வளர்ந்து அழகாய் இருந்தன. நாள் தோறும் ஒரு இலையைக் கிள்ளி அதை முகர்ந்து பார்ப்பது வழக்கம்.

ஒருநாள்-

அவன் அந்த இலையை வாயில் போட்டு மென்று பார்த்தான் சிறிது காரமாயும், சுவையாயும் இருந்தது. மனதுக்கு ஆனந்தமாகவும் இருந்தது.

ஆகவே, நாள்தோறும் வாயில் போட்டு மெல்லுவதை அவன் வழக்கமாக்கி கொண்டான். அதன் பிறகு ஒரு குழாயில் அடைத்தோ, இலையாகச் சுருட்டியோ, புகைத்தால் மனதுக்கு இதமாய் இருப்பதை அவன் கண்டான்.

இந்த இன்பத்தைப் பலருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையுடன், தனது நண்பர்களுக்கும் அவன் விவரத்தைச் சொன்னான்.

அவர்களும், புகையிலையைச் சுவைத்து மகிழ்ந்தனர். எல்லாரும் புகையிலையின் விதை வேண்டும் என்று அவனிடம் வேண்டினர்.

இடையன் உவகையோடு அந்த விதைகளை வழங்கினான். அதனால் புகையிலைச் செடி உலகம் முழுவதும் பரவி, மக்கள் விருப்பமுடன் அதை பயிர் செய்து வியாபாரம் செய்யலாயினர்.

இதுதான் புகையிலை செடி உருவான கதை!




- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜினியாவில் ரிச்மண்ட் நகரில் உணவுப் பற்றாக்குறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நூற்றுக்கும் அதிகமான பெண்கள் அமெரிக்கக் கூட்டமைப்புக்கெதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு தலைவர் ஜெபர்சன் டேவிஸ் மற்றும் அவரது அமைச்சர்கள் கூட்டமைப்பின் தலைநகர் ரிச்மண்ட்டை விட்டுப் புறப்பட்டனர்.
- 1902 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது திரையரங்கு கலிபோர்னியாவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் திறக்கப்பட்டது.
- 1902 - ரஷ்ய பேரரசின் உள்நாட்டமைச்சர் திமீத்ரி சிப்பியாகின் சென் பீட்டர்ஸ்பேர்க் நகரில் படுகொலை செய்யப்பட்டார்.
- 1930 - ஹைலி செலசி எதியோப்பியாவின் மன்னராக முடிசூடினார்.
- 1972 - நடிகர் சார்லி சப்ளின் 1950களில் கம்யூனிஸ்ட் என குற்றம் சாட்டப்பட்டபின்னர் முதற்தடவையாக ஐக்கிய அமெரிக்கா வந்தார்.
- 1975 - வியட்நாம் போர்: குவாங் காய் மாநிலத்தினுள் வடக்கு வியட்நாம் படைகள் முன்னேறியதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கானோர் அம்மாநிலத்திலிருந்து இடம்பெயர்ந்தனர்.
- 1975 - கனடா, டொரொண்டோவில் சி:என் கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. 553.33 மீட்டர் உயரமான இக்கோபுரம் உலகில் மிக உயரமானதாகும்.
- 1982 - போக்லாந்து தீவுகளை ஆர்ஜெண்டீனா முற்றுகையிட்டது.
- 1983 - யாழ்ப்பாணம் அரச அதிபரின் செயலகத்தில் விடுதலைப் புலிகள் குண்டுத்தாக்குதல் நடத்தினர்.
- 1984 - ராகேஷ் சர்மா சோயூஸ் T-11 விண்கலத்தில் பயணித்து, விண்வெளி சென்ற முதலாவது இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார்.

**பிறப்புகள்**

- 742 - சார்லமேன், பிரெஞ்சு அரசன் (இ. 814)
- 1618 - பிரான்சிஸ்கோ மரியா கிரிமால்டி, இத்தாலியக் கணிதவியலாளர், இயற்பியலாளர் (இ. 1663)
- 1725 - கியாகோமோ காசநோவா, இத்தாலிய நாடுகாண் பயணி, எழுத்தாளர் (இ. 1798)
- 1788 - பிரான்சிஸ்கோ பலக்டாஸ், பிலிப்பீனியக் கவிஞர் (இ. 1862)
- 1805 - ஆன்சு கிறித்தியன் ஆன்டர்சன், டென்மார்க்கு கவிஞர் (இ. 1875)
- 1881 - வ. வே. சு. ஐயர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1925)
- 1891 - மக்ஸ் ஏர்ண்ஸ்ட், ஜேர்மனிய ஓவியர், கவிஞர் (இ. 1976)
- 1984 - ஷாவ்ன் ரோபர்ட்ஸ், கனடிய நடிகர்

**இறப்புகள்**

- 1672 - பேத்ரோ கலூங்சோத், பிலிப்பீனிய மதப் பரப்புனர், பினிதர் (பி. 1654)
- 1872 - சாமுவெல் மோர்சு, மோர்ஸ் தந்திக்குறிப்பு கண்டுபிடித்த அமெரிக்கர் (பி. 1791)
- 2005 - திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் (பி. 1920)
- 2006 - பி. வி. பார்த்தசாரதி, குமுதம் இதழ் நிறுவனர்
- 2012 - எம். சரோஜா, நகைச்சுவை நடிகை

**சிறப்பு நாள்**

- உலக சிறுவர் நூல் நாள்

### உலக சிறுவர் நூல் நாள்



சர்வதேச குழந்தைகளின் புத்தக நாள் (International Child ren's Book Day - ICBD) 1967 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோராண்டும் ஏப்ரல் 2 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

இந்நாளாது ஆன்சு கிறித்தியன் ஆன்டர்சன் (1805-1875) என்னும் குழந்தை இலக்கிய எழுத்தாளரின் பிறந்த நாள் ஆகும். "இளம் மக்களுக்கான புத்தகங் களின் பன்னாட்டு வாரியம்" (International Board on Books for Young People - IBBY) என்னும் பன்னாட்டு ஆதாய நோக்கற்ற அமைப்பு (International Non–Profit Organization) இந்நாளைக் கொண்டாடும் முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பன்னாட்டுக் குழந்தைகள் புத்தக நாளானது புத்தகம் படிக்கும் விருப்பத்தை ஊக்குவித்தல், குழந்தைகளுக்கான புத்தகங்களின் மீது கவனத்தை ஈர்த்தல போன்ற இரண்டு நோக்கங்களை நிறை வேற்று வதற்காகக் கொண்டாடப்படுகிறது.

நீதியே ஆட்சியின் உயிர்
நடுவுநிலைமையே நீதியின் உயிர்.
-ஜஸ்டினியன்

வலம்புரி

T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடக்கின் ஆளுநருக்கு ஓர் அவசர மடல்...

வடக்கு மாகாணத்தின் ஆளுநர் றெஜினோல்ட் கூரே அவர்களுக்கு அன்பு வணக்கம்.

வடக்கு மாகாண சபையின் ஆளுநர் பதவியை வகிக்கும் தங்களுக்கு அவசரமாக இக்கடிதம் எழுத வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதென்பதை முதலில் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வடக்கு மாகாணத்தின் ஆளுநர் என்ற பதவி சமகால சூழ்நிலையில் மிகவும் முக்கியமானது. அதிலும் தமிழ் மொழி தெரிந்த ஆளுநர் என்ற வகையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அவர்களின் உணர்வு நிலைகளை தாங்கள் புரிந்து கொள்வீர்கள் என்பது எங்களின் நம்பிக்கையாக உள்ளது.

ஆளுநராக நீங்கள் பதவி ஏற்றபோது வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஒரு கனவான். எனவே அவருடன் இணைந்து பணியாற்றுவதில் சிரமம் இருக்க முடியாது என்று நீங்கள் கூறியபோது, உங்கள் மீதான மதிப்பும், நம்பிக்கையும் வடபுலத்து மக்களிடம் அதிகரித்தது.

அதேநேரம் வடக்கு மாகாணத்தின் ஆளுநராக பதவி ஏற்ற தாங்கள் தமிழ்மொழி தெரிந்தவர் என்பதால் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் என்று வடக்கின் முதலமைச்சர் உங்களை விழித்துக்கூற, உங்கள் மீதான எங்களின் மதிப்பு மேலும் ஒருபடி உயர்ந்தது எனலாம்.

அந்தவகையில் இந்த உண்மையை முதலில் தங்களுக்குத் தெரியப்படுத்துவது ஊடகம் என்ற வகையில் எங்களின் தார்மீகக் கடமை ஆகும்.

அதேநேரம் கடந்த காலங்களில் இரண்டு ஆளுநர்கள் வடபுலத்தில் இருந்துவிட்டுச் சென்றுள்ளனர். அதில் ஜி.ஏ.சந்திரசிறி ஒருவர். மற்றையவர் பலிக்கார இவர்கள் தொடர்பில் தமிழ் மக்கள் சில கருத்துப் பதிவுகளை வைத்துள்ளனர்.

ஜி.ஏ.சந்திரசிறி அவர்கள் பற்றிய கணிப்பு என்பது அவர் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியாக இருந்த போது ஆற்றிய கருமங்களும் கருத்தில் கொள்ளப்பட்ட அவர் தொடர்பிலான மதிப்பீட்டை தமிழ் மக்கள் பதிவாக்கிக் கொண்டனர்.

எனினும் யுத்தத்துக்குப் பின்னர் வடபுலத்தில் கட்டடங்கள், வீதிகள் அமைப்பு பெறுவதில் ஜி.ஏ.சந்திரசிறியின் வேகமான – இறுக்கமான ஆளுமை பெரும் பங்காற்றியது என்பதைக் கூறாமலும் விட்டுவிட முடியாது.

தவிர, தங்களுக்கு முன்னர் இருந்த ஆளுநர் பலிக்கார ஒரு நல்ல மனிதர். தேவையில்லாத சோலிகளில் அவர் தலையீடு செய்வதில்லை என்பது பொதுவான கருத்து.

எனினும் அவரின் சேவைக்காலம் குறுகியதாக இருந்தமை தமிழ் மக்களுக்கு விருப்பமானதல்ல என்பதையும் கூறித்தானாக வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, தற்போது வடமாகாணத்தின் ஆளுநர் பதவி ஏற்றுள்ள தாங்கள் அரசியல் புலத்தில் அமைச்சராக இருந்தவர் என்பதால் உங்களின் நடவடிக்கைகளுடன் அரசியல் சாயமும் சேர்ந்தே பார்க்கப்படும் என்பது உண்மையே.

எனினும் அரசியல் புலத்தை விடுத்து, வடக்கு மாகாணத்தின் ஆளுநர் பதவியை பொறுப்பேற்றுள்ள தாங்கள், யுத்தத்தால் பாதிப்படைந்துள்ள தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொள்வீர்கள் என்று நம்புகின்றோம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலம் போக்கிய ஆளுநர் றெஜினோல்ட் கூரே என்று வடபுலத்து மக்கள் உங்களைப் புகழக்கூடிய வகையில் நீங்கள் செயற்படவேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பு.

இதைவிடுத்து யுத்தத்தால் பாதிப்படைந்த மக்களிடம் நீங்கள் விவாதம் புரியவோ அல்லது வடபுலத்து மண்ணில் சமய அமைப்புகளை நிறுவவோ முற்படமாட்டீர்கள் என்பதும் எங்களின் திடமான நம்பிக்கை.

வடபுலத்தில் உங்களின் பணியில் மக்கள் நலன் பெற்றனர் என்று போற்றும் வகையில் உங்களின் சேவையை தமிழ்மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்.

## சிங்கப்பூர் தரத்தில் வைத்தியசாலைகள்

நாட்டு மக்களின் நன்மை கருதி சிங்கப்பூரில் உள்ள வைத்தியசாலைகளின் தரத்தில் புதிய வைத்தியசாலைகளை நிர்மாணிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இவ்வாறு 3 வைத்தியசாலைகள் அமைக்கப்படவுள்ளதாகவும், இந்த வைத்தியசாலை அமைப்பதற்குப் பொருத்தமான காணியும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனை நிர்மாணித்துத் தருவதற்கு ஜேர்மன் உடன்பாடு தெரிவித்துள்ளது. அத்துடன், ஒஸ்ட்ரியா, ரஷ்யா ஆகிய நாடுகளிலும் இதற்கான திட்டங்களை கையளித்துள்ளதாகவும் ராஜித சேனாரத்தின தெரிவித்துள்ளார். (செ-12)

## ரி20 உலகக்கிண்ண இறுதியாட்டம் பிரமாண்ட திரையில்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கார்கில்ஸ் வங்கியில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணி தொடக்கம் ரி-20 உலகக் கிண்ண இறுதியாட்டம் பிரமாண்ட திரையில் சுன்னாகம் பூட் சிட்டி முன்பாக காண்பிக்கப்படவுள்ளது. (இ-9)

## சிந்தனைக்கூட உரையாடல்

சிந்தனைக்கூடம்- யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தமிழ் ஊடகங்களில் கருத்தியலும் மொழிப்பாவனையும் செல் நெறியும் எனும் தலைப்பில் உரையாடல் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இளம் ஊடகவியலாளர்களுக்கு அதிகளவு பயன்படக்கூடிய மேற்படி உரையாடலில் பிரபல தமிழ் ஊடகவியலாளர் நடராசா குருபரன் கலந்து கொள்கின்றார். (இ

## உரிமை கோரப்படாத சடலம் போதனா வைத்தியசாலையில்

யாழ்.போதனா வைத்திய சாலையில் உரிமை கோரப்படாத நிலையில் சடலம் ஒன்று காணப்படுவதாகயாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர்அறிவித்துள்ளார்.

இவர் கடந்த 24ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் 12.20 மணிக்கு உயிரிழந்தார். இவரது சடலம் இது வரை உரிமைகோரப்படாத நிலையில் காணப்படுகின்றது. முகவரி தெரியாத 6516 74360V என்ற அடையாள அட்டை இலக்கத்தையுடைய எஸ். மோகன் என்பவரது சடலமே இவ்வாறு உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## சிறுநீரகம் அகற்றப்பட்டுள்ளதாக சி.சி.டி.நீதிமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

வெள்ளவத்தையில் அண்மையில் கைது செய்யப்பட்ட இந்திய பிரஜைகளின் சிறுநீரகங்கள் அகற்றப்பட்டுள்ளதாக சி.சி.டி.யினர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

வெள்ளவத்தைப் பகுதியில் கைது செய்யப்பட்ட 8 இந்தியப் பிரஜைகளில் 6 பேருக்கே சிறுநீரகம் அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சுவீடன் விமான நிலையத்தில் பயங்கர குண்டு வெடிப்பு

சுவீடனின் 2-வது பெரிய விமான நிலையமான லாண்ட் வெட்டர் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் நண்பகல் பயங்கர குண்டு வெடிப்பு நடந்தது. சம்பவ இடத்திற்கு வெடிகுண்டு நிபுணர்கள் பாதுகாப்பு படையினர் விரைந்து உள்ளனர்.

2 பிளாஸ்டிக் பைகளில் இருந்த வெடிகுண்டு வெடித்து உள்ளது.இதை தொடர்ந்து விமான நிலையத்தை சுற்றி உள்ள பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## 59 இந்திய மீனவர்களை சிறைபிடித்த பாகிஸ்தான்

### இந்திய ஊடகம் செய்தி

(இஸ்லாமாபாத்)

இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான சர்வதேச கடல்பகுதியான சர் க்ரீக் அருகே மீன் பிடித்து கொண்டிருந்த 59 மீனவர்களை பாகிஸ்தான் கடற்படையினர் நேற்று கைது செய்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவின் குஜராத் மற்றும் பாகிஸ்தானின் சிந்து மாகாணத்துக்கு இடையில் அத்துமீறி நுழைந்ததாக குற்றம்சாட்டி மீனவர்களை கைது செய்து கராச்சி நகர பொலிஸாரிடம் ஒப்படைத்த கடற்படையினர் இந்திய மீனவர்கள் சென்ற பத்து படகுகளையும் சிறைபிடித்துள்ளனர். (இ-5)

## போதனாசிரியர்களுக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு பின்வரும் கற்கைநெறிகளை கற்பிக்கும் போதனாசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

சமையற்கலை வல்லுநர், வெதுப்பாளர், மின் மோட்டர் மீள் முறுக்குநர், நீர்க்குழாய் பொருத்துநர் (பிளம்பர்), அழகுக்கலை வல்லுநர், வானொலி மற்றும் தொலைக்காட்சி திருத்துநர், முன்பள்ளி ஆசிரியர், டீசல் வாகன இயந்திர திருத்துநர், மின்னியலாளர், அலுமினியம் பொருத்துநர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்).

**கல்வித் தகைமை:** க.பொ.த.சா/த தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன் **தொழில் சார் தகைமை:** மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் NVQ-4 அல்லது அதற்கு மேல் தொழிற்றகைமை சான்றிதழ் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் ஒருவருட முழு நேர டிப்ளோமா சான்றிதழ் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் பட்டச் சான்றிதழ் அத்துடன் **அனுபவம்:** சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்திற்கு மேலான அனுபவம்.

எனவே மேற்படி தகைமைகளுடைய ஆர்வமுடையவர்கள் தங்கள் சுயவிபரக் கோவை மற்றும் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடன் நாளை மறுதினம் 4 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு முன்னர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம் என்ற அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து **யாழ்.பிரதேசத்தில** அம்பலவாணர் வீதி, உடுவில், ஆர்க்லேன், ஸ்ரீலங்கா பாடசாலை வீதி, இராமலிங்கம் வீதி, சோமணான் தோட்டம், சங்கத்தானை, மீசாலை, வங்களாவீதி, அல்லாரை, வெள்ளாம்பொக்கட்டி, கெற்பெலி, கச்சாய், பாலாவி, கச்சாய் துறைமுகம், அம்மன் கோவிலடி, புத்தூர் சந்தி, இராமாவில், கொடிகாமம், நாவலடி, வறணி, கரம்பைக் குறிச்சி, வாழைத்தோட்டம், வேம்பிராய், மந்துவில், தாவழை, இயற்றாலை, கலைவாணி, மிருசுவில் வடக்கு, சுடிபுரம், கொக்குவில் சந்தி, சம்பியன் லேன், ஆடியபாதம் வீதி, மருத்துவபீடப் பிரதேசம், குளப்பிட்டி, ஆனைக் கோட்டைவீதி, ஆனைக் கோட்டை சந்தி, யாழ் வீதி (மானிப்பாய்), ஆறுகால் மடம், கூழாவடி, ஆனைக் கோட்டை VC, நவாலி, மூத்தவிநாயகர் கோவிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயப் பிரதேசம், அரசடி, அட்டகிரி, வேலக்கை, கோம்பயன், பூநாறிமடம், சிவப்பிரகாசம், தலையாழி, கே.கே.எஸ் வீதி கொக்குவில் சந்தியிலிருந்து நாச்சிமார் கோவிலடிவரை, இராமநாதன் வீதியில் ஒரு பகுதி, காரைக்காடு, சொர்ணவடலி, மணியர்பதி, மானிப்பாய் வீதியில் கோம்பயனிலிருந்து ஓட்டுமடம் சந்திவரை, யாழ்.நுண்கலைப் பீடம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** தென்னியங்குளம், உயிலங்குளம், வேட்டலடைப்பு, இரணைமடு, திருவையாறு, முறிகண்டி, மத்தியவங்கி, இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம், MAS Active, யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாயபீடம், North Cargill's Agrifoods, 651ஆவது படைப்பிரிவு முகாம், 652 ஆவது படைப்பிரிவு முகாம், இராணுவ பாசறை I, இராணுவ பாசறை II, இராணுவ பாசறை, 7ஆவது படையணி இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** வவுனியா நகரம் 2ஆம் குறுக்குத்தெரு, சாம்பல்தோட்டம் கிராமம் ஆகிய இடத்திலும் **மன்னார் பிரதேசத்தில்** குஞ்சுக்குளம், மாதா கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



வேதாந்தம் பாவத்தை ஒப்புக் கொள்வதில்லை; பிழையை மட்டும் ஒப்புக் கொள்கின்றது; அனைத்திலும் பெரும் பிழை என வேதாந்தம் கூறுவது நான் பலமற்றவன், நான் பாவி, இழிந்தவன் என்றும் என்னிடம் சக்தி இல்லை, என்னால் இதைச் செய்ய இயலாது, அதனைச் செய்யமுடியாது என்றுமே சொல்லிக் கொள்வதையே.

கடவுளிடம் நம்பிக்கையற்றவனை நாத்திகன் என்று பண்டைய மதங்கள் கூறின. ஆனால் புதிய மதமோ தன்னிடமே நம்பிக்கையற்றவனை நாத்திகன் என்கிறது.

பலமே வாழ்வு, பலமின்மையே மரணம். பலமே இன்பம், நிலையான அழிவற்ற வாழ்வு. பலமின்மையே ஓயா வருத்தமும் துயரமும. பலமின்மை மரணமே. குழந்தைப் பருவம் முதலே ஆக்கமும் பலமும் நன்மையும் தரும் எண்ணம் உங்கள் மூளைக்குள்ளே புகட்டும்.

பலமின்மையே துயரத்திற்கு ஒரே காரணம்.நாம் பலவீனர்களாக இருப்பதால் நாம் கெட்டவர்களாகிறோம். நம்மிடம் பொய்யும் திருட்டும் கொலையும் வேறு பாவச் செயல்களும் இருப்பதற்குக் காரணம் நமது பலவீனமே. நாம் துன்பமடைவது நமது பலவீனத்தாலேயே. நாம் இறப்பதும் நமது பலவீனத்தால்தான். நம்மைப் பலவீனர்களாக்க ஒன்றும் இல்லாத போது மரணமும் இல்லை, துயரமும் இல்லை.

நமக்கு வேண்டிய ஒரே பொருள் பலமே. உலகத்தின் நோய்க்கு மருந்தும் பலமே. பணக்காரர்களின் கொடுமைக்கு உட்படும்போது ஏழைகளுக்கு கட்டாயம் வேண்டிய மருந்தும் பலமே.படித்தவர்களின் கொடுமைக்குட்படும் போது படிக்காதவர்களுக்கு வேண்டிய மருந்தும் பலமே. பாவிகளின் கொடுமைக்கு உட்படும் போது பிற பாவிகளுக்கு வேண்டிய மருந்தும் பலமே.

# திக்கம் இளைஞர் வி.கழக உதைபந்து சுற்றுத்தொடர்



**யங்கம்பன்ஸ் வெற்றி**

சமநிலை உதை தவிர்ப்பில் வெற்றி பெற்றது யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம். திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடர் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா இரு கோல்கள் போட்டதால் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

சமநிலைக்கான உதையில் 4:3 என்ற வித்தியாசத்தில் யங்கம்ன்ஸ் வெற்றி பெற்றது. அணிசார்பாக நிறோ. மகிந்தன், ஜெகதீஸ்.பார்த்தீபன் தலா ஒரு கோலினை போட்டனர். (க)

# காற்பந்து போட்டி கில்லறி வெற்றி

எவ்.ஏ. கிண்ணத்துக்காக இலங்கை காற்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் தொடரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் கில்லறி அணி வெற்றி பெற்றுள்ளது.

தாழ்வுபாடு ஆயர்ஜோசெப் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து திருகோணமலை ஒலிம்பிக் அணி மோதிக் கொண்டது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டது. இதில் மன்னார் கில்லறி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# சிற்றி ஸ்போட்ஸ் நிறுவன வடமாகாண ரீதியிலான துடுப்பாட்டம் வல்வை அணி வெற்றி



RCC விளையாட்டுக் கழகத்திற்கு எதிரான போட்டியில் வல்வை விளையாட்டுக்கழகம் 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

சிற்றி ஸ்போட்ஸ் நிறுவனம் வடமாகாணரீதியில் அணிக்கு11 பேர் 8பந்துப் பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்டப் போட்டியினை நடத்தி வருகிறது.

அண்மையில் நடைபெற்ற போட்டியில் RCC விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய RCC விளையாட்டு கழகம் 8 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 55 ஓட்டத்தினை பெற்றுக்கொண்டுள்ளது.

பந்துவீச்சில் மணிமாறன் 2 விக்கெட்டினையும்றுசா, மயூரன் தலா ஒரு விக்கெட்டினை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வல்வை விளையாட்டுக்கழகம் 7.3 ஓவர்களில் 6விக்கெட்டினை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பிரகலாதன் ஆட்டமிழக்காமல் 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 19 ஓட்டத்தினை பெற்றார். (க)

# தெல்லிப்பழை நாமகள் வி.கழக காற்பந்து தொடரின் முடிவுகள்



தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் காற்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுகழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் இதுவரையில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விபரங்கள் வருமாறு:-

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம் பெற்ற ஆட்டதில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து ஞானகலா அணி மோதிக்கொண்டது.

இதில் யங்கம்பன்ஸ் அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் அணியை எதிர்த்து திருமகள் அணி மோதிக் கொண்டது. இதில் உடுப்பிட்டி யுத் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில், முதலில் இடம்பெற்ற ஆட்டத்தல் யாழ். ஐக்கிய அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணி மோதிக்கொண்டது. இதில் சமரபாகு நியூட்டன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து குப்பிளான் விக்னேஸ்வரா அணி மோதிக் கொண்டது.

இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில், முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் நவாலி சென்பீற்றர்ஸ் அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை சிறிஅம்பாள் அணி மோதிக் கொண்டது.

இதில் நவாலி சென். பீற்றர்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம் பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி அணியை எதிர்த்து அராலிசில்வெஸ்ரார் அணிமோதிக்கொண்டது.

இதில் அராலி சில்வெஸ்ரார் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில். முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதிக் கொண்டது.

இதில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் சிவானந்தா அணியை எதர்த்து பெரியவிளான் சென். அன்ரனிஸ் அணி மோதிக் கொண்டது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணிகளும் தலா மூன்று கோல்களைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதில் சிவானந்தா அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் பி அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் அணி மோதியது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் பி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் சரஸ்வதி அணியை எதிர்த்து நெடியகாடு இளைஞர் அணிமோதிக் கொண்டது.

இதில் உரும்பிராய் சரஸ்வதி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் அணியை எதிர்த்து சண்ஸ்ரார் அணிமோதிக் கொண்டது. இதில் உரும்பிராய் திருக்குமரன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)





அண்மையில் நடைபெற்ற வலயமட்ட 15.17 வயதுப் பிரிவினருக்கான பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் முதலாமிடத்தினை பெற்ற உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணியினரையும் கல்லூரி அதிபர்,பிரதி அதிபர், உடற்கல்வி ஆசிரியர் .பயிற்றுநர் மற்றும் அணிப் பொறுப்பாசிரியர்களை படங்களில் காணலாம்.

# இன்றைய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஸ்ரீவிக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக்கழகமும்

மாலை 4.30மணிக்கு நடைபெறும் போட்டியில் அன்பாலயம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து றோயல் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

(யாழ்ப்பாணம்)

97ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி (Set up Game) நடைபெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை இரவு 7.30மணிக்கு மின்னொளியில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் முதல் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி B விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து இரவு 8மணிக்கு நடைபெறும் போட்டியில் மல்லாகம் நியூவோறியஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி விளையாட்டுக்கழகமும் இரவு 8.30மணிக்கு நடைபெறும் போட்டியில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

ஊரெழு லயன்ஸ் கிரிக்கெட் கழகத்தினால் நடத்தப்படும் மென்பந்து துடுப்பாட்ட போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 104 2741,075 071 4655 என்ற இலக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

இப்போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதோடு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் உடனடியாக விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் அறிவுறுத்தியுள்ளனர். (க)

# கரப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்ரோறி விளையாட்டுக்கழகம் அமரர் சி.இராகவன் ஞாபகார்த்தமாக கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியினை நடத்த திட்டமிட்டுள்ளது.

இதற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 5 ஆம் திக்குக்கு முன்னர் ரி.விஜிதரன் 077-262-7869 என்பருடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

## கோவில்களில் மிருக...

வேள்விகளுக்கான ஆடு,கோழி என்பவற்றை வெட்டுவதற்கான அனுமதி வழங்கப்படுவதனால். ஆலயங்களுக்கு அத்தகைய அனுமதி வழங்குவது ச்ரியானதா? என்றும், மிருக பலி கொடுத்து வேள்வி நடத்தும் ஆலயங்களின் தர்மகர்த்தாக்கள் கோவில் நடத்துகின்றார்களா? அல்லது இறைச்சிக்கடை நடத்துகின்றார்களா? என்றும் நீதிபதி தனது உத்தரவில் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

யாழ் குடாநாட்டின் ஆலயங்கள் சிலவற்றில் மிருகபலி கொடுத்து நடத்தப்படும் வேள்வியை உடனடியாகத் தடுத்து நிறுத்தும் வகையில் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி அகில இலங்கை சைவமகா சபையின் தலைவர் சிவக்கொழுந்து சோதிமுத்து சட்டத்தரணி மணிவண்ணன் ஊடாக யாழ்.மேல் நீதிமன்றத்தில் தடையீட்டு எழுத்தாணை மனுதாக்கல் செய்திருந்தார்.

வலிகாமம் வடக்கு வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் மேற்கு மற்றும் கோப்பாய் பிரதேசசபைகளின் செயலாளர்கள், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், தெல்லிப்பழை, சங்கானை, உடுவில், சண்டிலிப்பாய், கோப்பாய் ஆகிய பிரதேசங்களின் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோரை இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்து ஆலயங்களில் வேள்வி நடத்துவதை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், நிறுத்துவதற்கு இடைக்காலத் தடையீட்டு எழுத்தாணை பிறப்பித்து, மிருக பலி கொடுக்கும் வேள்விக்கு நிரந்தர தடையாணை ஏன் பிறப்பிக்கக் கூடாது என எதிர் மனுதாரர்களுக்கு அறிவித்தல் வழங்குமாறும் இந்த மனுவில் மனுதாரர் கோரியுள்ளார்.

இந்த மனு மீதான விசாரணைக்கு நீதிபதி இளஞ்செழியன் அனுமதி வழங்கியதையடுத்து வெள்ளிக்கிழமை இந்த மனு மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அகில இலங்கை சைவ மகா சபையின் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சட்டத்தரணி மணிவண்ணன் மிருகபலி கொடுக்கும் வேள்வியைத் தடை செய்வதற்கான காரணங்களை மனுதாரர் சார்பில் தனது வாதத்தில் முன்வைத்தார்.

மனுதாரர் தரப்பிலான சட்டத்தரணியின் கோரிக்கையைப் பரிசீலனை செய்த நீதிபதி இளஞ்செழியன் அதற்கான இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்து தீர்ப்பளித்தார்.

அந்த இடைக்காலத் தடையுத்தரவில் சட்டத்திற்கு முரணானது. எனவே, இந்த நீதிமன்றம் இந்து ஆலயங்களில் மிருகங்களை அறுத்து வேள்வி நடத்தும் அனைத்து நிகழ்வுகளுக்கும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கின்றது.

மிருக பலி கொடுக்கும் வேள்வி நடத்துவதற்கு அனுமதி கோரி விண்ணப்பம் செய்தால், அதற்கான அனுமதி வழங்கக் கூடாது என அனைத்து பிரதேச சபைகளுக்கும், சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும், சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும், வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சு செயலாளருக்கும் மன்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கின்றது.

இந்த உத்தரவுக்கு முரணாக எந்த இந்து ஆலயமாவது, மிருக பலி கொடுத்து வேள்வி நடத்தினால் அவ்வாறான ஆலயங்களின் அனைத்து தர்மகர்த்தா சபை உறுப்பினர்களுக்கும் எதிராக, நீதிமன்ற அவமதிப்பு குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். என நீதிபதி இளஞ்செழியன் கட்டளை பிறப்பித்துள்ளார். (செ-4-9)

## சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முதியவர் நேற்று மரணம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவியைக் கடத்தி பாலியல வல்லுறவு புரிந்து அவரைப் பெண் குழந்தை ஒன்றுக்குத் தாயாக்கிய வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முதியவர் நேற்றையதினம் யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

நெல்லியடிப் பகுதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி 14 வயதுடைய பாடசாலை மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி அவரை ஒரு பெண பிள்ளைக்கு தாயாக்கிய குற்றத்தின் பேரில் எதிரியாகிய 69 வயதுடைய கந்தையா சித்தி விநாயகம் என்பவருக்கு எதிராக வழக்கு நடைபெற்று வந்தது.

வயோதிபருக்கு எதிராக சட்டமா அதிபரினால் குற்றம் சுமத்தப்பட்டு யாழ்ப்பாணம் மேல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்தது. டி.என்.ஏ ஆய்வின் மூலம் 99.99 வீதம் உறுதிப்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்ட பெண்ணின் குழந்தைக்கு எதிரியாகிய சித்திவிநாயகமே தந்தையாவார் என தனது சாட்சியத்தில் உறுதிப்படுத்தப்பட்டது.

வழக்கு விசாரணை முடிவடைந்து தீர்ப்புக்காக கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதியிட்ட போது குறித்த முதியவர் நஞ்சருந்தி தற்கொலை முயற்சி செய்து பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் கடந்த 15 நாட்களாக சிகிச்சை பெற்று வந்தார்.

குறித்த எதிரி இரண்டாவது தீர்ப்பு நாளான கடந்த 30 ஆம் திகதி மன்றில் ஆஜராக முடியாத நிலையில் இருந்தபோதும் விசாரணைகள் முடிவுற்ற நிலையில் தீர்ப்பு கூறுவதற்கு காலம் தாழ்த்த முடியாத காரணத்தால் குறித்த எதிரிக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 20 இலட்சம் ரூபாய் நட்டஈடும் வழங்கி யாழ்.மேல் நீதிமன்று தீர்ப்பளித்திருந்தது.

இந்த நிலையிலேயே குறித்த முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் காலை யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். (செ-9-60)

## 101 கிலோகிராம் ஹெரோயின் மீட்பு

(கொழும்பு)

தெற்குக் கடற்பகுதியில் கடற்படையினர் முன்னெடுத்த தேடுதலின் போது 101 கிலோக்கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான கப்பலொன்றை சோதனைக்குட்படுத்தியபோதே பெருந்தொகை ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக கடற்படை ஊடகப்பிரிவு குறிப்பிட்டது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை கடற்படையினர் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது ஈரான், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் பிரஜைகள் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களும் கைப்பற்றப்பட்ட ஹெரோயினும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவந்துள்ளது.

இதேவேளை ஒரு கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளின் சந்தை விலை ஒரு கோடி ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.(செ-12)

# 67 அடி புத்தர் சிலை விவகாரம்; தமிழர்கள் மீதான யுத்த சீண்டலே!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாக உள்ள நயினாதீவில் அமைக்கப்படவுள்ள அறுபத்து ஏழு அடி புத்தர் சிலை தமிழர்களை வலிந்து யுத்தத்திற்கு இழுக்கும் செயலாகவே அமையும், இது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் ஒரு வடிமாகவே உள்ளது. மகிந்த இராணுவத்தால் செய்ததை மைத்திரியும் ரணிலும் சமாதானம் பேசிக்கொண்டு செய்கின்றனர் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கடுமையாக சாடியுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் இன்று ஒரு புதிய கலாசாரம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. எந்தவொரு சிங்களவரும் வாழாத தமிழர் வாழும் இடங்களில் புத்தர் சிலைகளை, விகாரைகளை அமைத்து. இது பெரிய வடிவமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக மாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள புத்த ஆலயம் என்னத்துக்காக கட்டப்பட்டது என்பது யாருக்கும் தெரியாது.

கொக்குளாய் கர்நாட்டுகேணியில் தமிழர்களுடைய காணிகளை அடாத்தாக பிடித்து பிக்கு ஒருவர் தான் நினைத்தபடி புத்த கோவில் ஒன்றினை எத்தனையோ எதிர்ப்புகளுக்கும் மத்தியிலும் அமைத்து வருகின்றார். இதனை வடக்கு மாகாண ஆளுநரால் கூட தடுக்க முடியாமல் உள்ளது.

இந்த நிலையில் கூட யாழ்ப்பாணத்தில் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாக உள்ள நயினை நாகபூசணி ஆலயத்திற்கு முன்பாக அறுபத்து ஏழு அடி உயரமுடைய புத்தர் சிலை ஒன்றினை அமைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இதற்கு வடக்கு மாகாண ஆளுநரும் ஆதரவாக உள்ளார்.

ஆளுநர் இதற்கு ஆதரவாக செயற்படுகின்றார் என்ற செய்தி தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் மோசமான அதிர்ச்சிகர மனநிலையை ஏற்படுத்தியுள்ளது. தமிழர்கள் நல்லெண்ணம பற்றி சிந்திக்கிறார்கள், தீர்வு பற்றி சிந்திக்கிறார்கள், சொந்த இடங்களுக்கு அவர்களால் போகமுடியவில்லை, இங்கே அவர்களது வாழ்விடங்கள் விடுவிக்கப்பட்டவில்லை.

அரசியல் கைதிகள் சிறையில் செத்து கொண்டிருக்கிறார்கள். காணமல்போனவர்களுக்கு தீர்வு வழங்கப்படவில்லை, தமிழ் மக்களுடைய வாழ்வாதார பிரச்சனை தீர்க்கப்படவில்லை. இதற்கெல்லாம் பலகோடி ரூபாய் தேவைப்படும் போது பத்துக்கோடி ரூபாய் செலவில் அறுபத்து ஏழு அடி உயரமான புத்தர் சிலையை வலுக்கட்டாயமாக ஒரு சிங்கவர்கள் கூட வாழாத நயினாதீவில் அமைக்க வேண்டும் என அரசு முனைவது தமிழர்களை சீண்டி வலிந்து ஒரு யுத்தத்துக்கு அழைப்பதற்கு ஒப்பானதாகும்.

இது அப்பட்டமான இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையும் சிங்கள மயமாக்கலும் என்பதை யாரும் மறுக்க முடியாது. கிளிநொச்சி வைத்தியசாலையிலும் ஒரு புத்தர் சிலை அமைப்பதற்கு முயல்வதாக அறிய முடிகின்றது.

வடக்கில் உள்ள பல திணைக்களத்தின் தலைமை அதிகாரிகள் பலரும் சிங்கள இனத்தை சேர்ந்தவர்காளாகவே உள்ளனர். இவைகள் அனைத்துமே கட்டமைககப்பட்ட இனப்படுகொலையாகவே உள்ளது.

இது அபாயகரமான நிலையாகும். இது எமது மக்களை அழிக்ககூடிய மறைமுக யுக்தியுமாகும். இதனால் மகிந்த அரசு இராணுவத்தால் மேற்கொண்ட அழிப்பு நடவடிக்கைகளை சமாதானம் பேசிக்கொண்டு மைத்திரியும் ரணிலும் செய்கின்றார்களா என சந்தேகம் ஏற்படுவதாக சிறிதரன் எம்.பி தெரிவித்துள்ளார். (செ-4)

## வெடிபொருள் மீட்பு...

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் குற்றப் புலனாய்வுத்துறையினர் இன்று முற்பகல் 10 மணிக்கு விசாரணையை நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரியில் வெடிப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் இவ்விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது. இதேவேளை தாம விசாரணையின்போது வாக்குமூலம் அளிக்க முன்வந்துள்ளதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அமையவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி 2008-ம் ஆண்டு செய்தித்தாள் ஒன்றிலேயே சுற்றப்பட்டிருந்தது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பழைய தற்கொலை அங்கிகள் மற்றும் வெடிபொருட்கள் மீட்கப்படுவது வழமையான ஒன்றேயாகும்.

இரண்டாம் உலக யுத்தத்தில் மறைத்து வைக்கப்பட்ட அல்லது பயன்படுத்தபட்ட ஆயுதங்கள் சில நாடுகளில் இற்றைவரையில் மீட்கப்பட்டு வருகின்றது.

சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொலைபேசி அழைப்பின் மூலம் என்னிடம் கோரியுள்ளார். எனவே சம்பவம் குறித்து விசாரணை நடத்த மகிந்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த வெடிபொருட்கள் வெள்ளவத்தை பிரதேசத்துக்கு எடுத்துச் செல்லப்படவிருந்தமை எப்படி ஜீ.எல்.பீரிஸுக்கு தெரியும். தகவல்களை தெரிந்து கொண்டு அதனை மூடி மறைத்தால் அது பாரதூரமான ஓர் நிலைமை என குறிப்பிட்ட பிரதமர், வெடிபொருட்கள் மீட்கப்பட்ட சில மணித்தியாலங்களிலேயே இவ்வாறு ஊடகங்களுக்கு பீரிஸ் தெரிவித்த கருத்து சந்தேகத்துக்கு இடமானது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சாவகச்சேரி பிரதேசத்தில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி மற்றும் வெடி பொருட்கள் என்பன புலிகளினால் யுத்த காலத்தில் பயன்படுத்தப்பட்டவை என விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம்.விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மீட்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்டவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த வெடிபொருட்கள் தொடர்பில் பயங்கரவாத ஒழிப்பு பிரிவு தற்பொழுது விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் முன்னாள் புலி உறுப்பினர் என தெரிவித்த பதில் பொலிஸ்மா அதிபர், கொழும்பு தலைமையகத்தில் தடுத்து வைத்து அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். குறிப்பிட்ட நபரின கையடக்கத் தொலைபேசியிலிருந்து பெறப்பட்ட சந்தேகத்துக்கிடமான இலக்கங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பதில் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-12)

## யாழ். திறந்த நீதி...

மன்றிலுள் சாரதி அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்காக வந்திருந்த நபரிடம் யாழ் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சாஜன்ட் ஒருவர் 500 ரூபாய் இலஞ்சமாக கேட்டுள்ளார். குறித்த நபர் இலஞ்சமாக கொடுத்த ரூபாய் நோட்டின் இலக்கத்தினை குறித்து வைத்த பின்னர் பொலிஸாரிடம் கொடுத்துள்ளார்.

பின்னர் குறித்த விடயத்தை நீதிமன்றுக்கு தெரியப்படுத்தியதனை அடுத்து அவர் கையுமகளவுமாக பிடிபட்டுள்ளார். உடனடியாக யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறிவித்த நிலையில்,

குற்றமிழைத்த குறித்த பொலிஸார் கைது செய்யப்பட்டு யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இன்றையதினம நீதிபதி முன்னிலையில் அவர் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (செ-9)

# கொக்கிளாய் விகாரை குறித்து...

யாது. அதை பற்றி அறிந்த பினனரே பதிலை கூறமுடியும் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் குறித்த விகாரை அமையும் பகுதி தொடர்பான விபரங்களை கோரியுள்ளார். அதனடிப்படையில் அரச அதிபர் நேற்று முன்தினம் ஆளுநருக்கு குறித்த பகுதி தொடர்பான விபரங்கள் அனைத்தினையும் அனுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு கொக்கிளாய் மேற்கு பகுதியில் உள்ள கிராமத்தில் விகாரை அமைக்கப்பட்டு வரும் காணி குறிப்பாக 3 தனி நபர்களுடைய காணிகளாகும். அத்துடன் பிரதேச சபைக்குரிய 12 அடி அகலமான வீதி மற்றும் கொக்கிளாய் ஆதார வைத்தியசாலையின் ஒரு பகுதி காணியையும் உள்ளடக்கி விகாரை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

கடந்த 2015 ஆம் ஆண்டு 06 ஆம் மாதம் 12 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற காணி பிணக்குகள் சம்மந்தமான நடமாடும் சேவையில் காணி அமைச்சின் மேலதிக செயலாளர், உதவி பணிப்பாளர் (காணி கொள்கைகள்) ஆகியோர் கலந்து கொண்டிருந்த நிலையில் மேற்படி விகாரை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்து மாறு பணிக்கப்பட்டது.

இதன் பின்னரும் விகாரை அமைப்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்ற நிலையில், கடந்த 2015 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் 17 ஆம் திகதி மேற்படி காணி பிணக்குகள் தொடர்பான நடமாடும் சேவையில் கொடுக்கப்பட்ட உத்தரவை கரைத்துறைப் பற்று பிரதேச செயலர் குறித்த பௌத்த பிக்குவிற்கு கையளித்திருந்தார்.

அத்துடன் கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் திகதி வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதி பொலிஸ்மா அதிபருக்கு இந்த விடயம் தொடர்பாக கடிதம் எழுதியுள்ளார்.

இந்நிலையிலும் மேறபடி விகாரை அமைப்புக்கான கட்டுமான பணிகள் நிறுத்தப்படவில்லை. மாறாக படையினரின் ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்புடன் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

குறித்த விகாரை அமைக்கப்பட்டுவரும் பகுதியை சுற்றி தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் குறித்த விகாரை தொடர்பில் வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு உறுப்பினர் ரவிகரனிடம் இருந்து தகவல்களைப் பெற்ற ஆளுநர் எதிர்வரும் 6 ஆம் திகதி கொக்கிளாய பகுதிக்கு நேரில் சென்று குறித்த விடயங்களை ஆராயவுள்ளதாகவும் தெரிவித்திருந்ததாக வடமாகாண சபை உறுபபினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதே நேரம் நேற்று முன்தினம் பத்தரமுல்லையில் நடைபெற்ற வடமாகாண ஆளுநருடனான ஊடகவியலாளர் சந்திப்பின் போது கொக்கிளாய் பிரதேசத்தில் பொது மக்களின் காணியில் விகாரை அமைக்கப்படவுள்ளதாக ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ஆளுநர் தனிப்பட்ட இடத்தில் தாம் விரும்பி விகாரை, கோவில் அமைப்பதை எவராலும் தடுக்க முடியாது என தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்படத்தக்கது. (செ-9)

# தமிழ் தாயக மண்ணில்...

தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் 51 வீடுகள் அமைக்கப்பட்டு இராணுவக் குடும்பங்களுக்குநாளை 3-ம் திகதி கையளிக்கப்படவுள்ளன.

இந்த வீட்டுத்திட்டத்திற்கு இராணுவத்தை சேர்ந்தவர்களையும் இராணுவ சிப்பாய்களை திருமணம் செய்துள்ள தமிழ் யுவதிகளை கொண்டவையுமான குடும்பங்களே தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்திருக்கின்றது.

இதன் பின்னணியில் தமிழ்ப் பிரதேசங்களை சிங்களக் குடியேற்றத்தினால் கபளீகரம் செய்யும் நோக்கம் தெளிவாக தெரிகிறது.

சமீப காலத்தில் மூன்று வருடங்களுக்கு முன்னர் கடந்த அரசாங்கத்தினால் மகாவலித் திட்டத்தின் இடதுகரையில் முன்னெடுக்கப்பட்டு தொடர்ந்த இன்றைய அரசாங்கத்தினால் பூரணப்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டத்தின் கீழ் 4 ஆயிரத்து 500 சிங்கள குடும்பங்கள் வவுனியா மாவட்டத்தில் குடியேற்றப்பட்டுள்ளன.

இந்த குடியேற்றம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தொடர்ச்சியான எதிர்ப்பின் மத்தியிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இப்போது வவுனியா தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் கொண்டு வரப்படும் 51 சிங்கள குடும்பங்களும் அடுத்து அடுத்து வந்த அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கும் தமிழ் மண்ணை படிப்படியாக சிங்கள மயமாக்கும் திட்டத்தின் தொடர்ச்சி என்பதில் சந்தேகமில்லை.

தமிழ் மக்களால் ஆதரிக்கப்பட்டு தெரிவான ஜனாதிபதியின் அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுப்பது தேசிய நல்லிணக்கத்திற்கு எந்தவிதத்திலும் உதவப்போவதில்லை. மாறாக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வினை அடிக்கடி வலியுறுத்தும் ஜனாதிபதியின் அரசாங்கம் ஒரே நேரத்தில் இரண்டு இலக்குகளை குறிவைத்து செயற்படுகின்றதா? என்ற கேள்வியையே தமிழ் மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தும்.

தமிழ் இனத்தின் தாயக மண்ணில் தொடரும் சிங்கள குடியேற்ற நடவடிக்கைகளுக்கு கடுமையான கண்டனத்தை தெரிவிக்கும் அதே வேளையில்இத்தகைய நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கோருகின்றது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

# தமிழ் மக்கள் பேரவையின்...

தீர்வுத்திட்ட முன் மொழிவு தயாரிக்கப்படவுள்ளது.

மிகவிரைவில் வெளியாகவிருக்கும் தீர்வுத்திட்டத்தின் இறுதி முன்மொழிவானது வரலாற்றில் முதற் தடவையாக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், கொழும்பு வாழ் தமிழ மக்கள் மற்றும் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் பங்கு பற்றுவதற்கான சகலவிதமான சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டு, மக்களின் காத்திரமான கருத்துக்கள், ஆலோசனைகள் பெறப்பட்ட நிலையில் இன்னும் சில நாட்களில் இறுதி வடிவம்பெறவுள்ள இவ்முன்மொழிவு மிகவிரைவில் சர்வதே சத்திடமும், தமிழ்த் தலைமை களிடமும் கையளிக்கப்படவுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையானது ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதங்களில் வரலாற்றில் மிகவும் முக்கியமான வேலைத்திட்டத்தை நிறைவேற்றி தனது அடுத்தக்கட்ட நகர்வுக்கு ஆயத்தமாகிவரும் இவ் வேளையில்,

தமிழ் மக்களின் முழு ஆதரவை மிகவும் உரிமையுடன் தமிழ் மக்கள் பேரவை வேண்டி நிற்பதுடன், தீர்வு யோசனைகளின் இறுதிவரைபு வெளிவருகையில் அது முதன் முதலாக தமிழ் மக்களின் பங்களிப்புடன் கூடிய ஜனநாயக பூர்வமான ஒரு முன் வைப்பாக இருக்கும் என தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ரு)

# கண் கண்ட இரு சாட்சியங்...

பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

குறித்த கொலை வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

இந்த வழக்கின் கடந்த தவணைக்கு முதல் தவணையின் போது குறித்த வழக்கின் சந்தேக நபர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு அவர்களது சட்டத்தரணிகள் பிணை விண்ணப்பம் செய்திருந்த நிலையில், குறித்த கொலை தொடர்பில் கண்ணால் கண்ட சாட்சியம் இருப் பதாக கூறி பிணை அனுமதிக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தது.

சி.ஐ.டி யினால் கூறப்பட்ட கண் கண்ட சாட்சியம் அனைவரிடத்தேயும் பெரும் எதிர்பார்ப்பை தோற்றுவித்திருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றையதினம் ஊர்காவற்றுறை பதில் நீதவான் இ.சபேசன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது புங்குடுதீவினை சேர்ந்தவர்களான,

உதயசூரியன் சுரேஸ்குமார், தர்மலிங்கம் ரவீந்திரன் ஆகியோர் கண்கண்ட சாட்சியங்களாக ஆஜர்ப்படுத தப்பட்டனர்.

எனினும் நேற்றையதினம் இவர்கள் இருவரும் ஆஜர்ப்படுத்தப்படும் போது, குற்றப்புலனாய்வு துறையை சேர்ந்த எவரும் மன்றில் பிரசன்னமாகியிருக்கவில்லை. மேலும் குறித்த இருவரும் அரச தரப்பு சாட்சியாக மாறியுள்ள நிலையில்,

இவர்கள் இருவரும் பாதுகாப்பு காரணங்களுக்காக பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடி கின்றது.

இதேவேளை குறித்த இருவரும் எதிர்வரும் பன்னிரண்டாம் திகதி வாக்குமூலம் வழங்க உள்ளதாகவும் அறிய முடிகின்றது.

இதன் போது வித்தியா கொலை வழக்கில் உண்மைகள் பல வெளிவரலாம் என எதிர்பார்க்கபடுகின்றது. (செ-4)


**நடமாடும் மிருக வைத்திய சேவை**

தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு

தொடர்பு : Dr.k. கிருபாகரன்
0779738802 / 0212242502
446, நாவலர் றோட், நல்லூர் (4059) 4 - 6 PM

**சாரதி தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பேக்கறி ஒன்றுக்கு நடமாடும் பாண் வான் ஓடுவதற்கு அனுபவமுள்ள சாரதி தேவை. (4073)

தொடர்புகளுக்கு: 0776747277

**A/L 2018 வர்த்தகப்பிரிவு**

ஆரம்பம் :- 03.04.2016 ஞாயிறு
மாலை : 5.00 மணி

பொருளியல் : S. ஜெயகுமார்
வணிகக்கல்வி : V. நந்தீஸ்
கணக்கீடு : A.T. சுரேன்

இடம் :- 356/5, 1ம் ஒழுங்கை, இருபாலை வீதி, கோண்டாவில். (ஐயப்பன் கோவில் அருகில்) (4075)

T.P : 0777238597

யாழ் நகரின் NO -1 கல்வி நிறுவனம்

புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

O/L DAY CLASS (C-4192)

பிரிவு II ஆரம்பம் : 04-04-2016
திங்கள் காலை 8.00 மணி

- திங்கள் முதல் வெள்ளி வரை வாரத்தில் 5 நாட்கள்
- காலை 8.00 - 2.00 மணி வரை
- அலகுப் பரீட்சைகளும் மாதாந்தப் பரீட்சைகளும் அனுமதிகள் இன்று முதல்

தொடர்புகளுக்கு T.P :0774598440

**SUBRA (14) - சித்தங்கேணி**
**A/L - 2018 புதிய பிரிவு**
**ஆரம்பம் : 05/04/2016**
செவ்வாய் : மாலை 4.00மணி

எமது தனித்துவமான ஆசிரியர் குழாம்

வர்த்தகப்பிரிவு
பொருளியல் : S. ஜெயகுமார்
வணிகக்கல்வி : V. நந்தீஸ்
கணக்கீடு : A. சுபேஷன், T.விசுவராஜ்

கலைப்பிரிவு
தமிழ் : B. பத்மநாதன்
அளவையியல் : R.P. சர்மா
அரசியல் : S. இளங்கோ
புவியியல் : P.V.S. தினேஸ்
வரலாறு : Y. பிரதீபன்
இந்துநாகரீகம் : K. சிவகரன்
நாடகம் : R. வினோ
ஊடகம் : V. நவநீதன்
ICT : S. சசிதரன்

தொழிநுட்ப பிரிவு
E.Tech : Eng அகிலன், மயூரன் , சிவகுமார்
B.Tech / S.F.Tech : செல்வராசா

கணித - விஞ்ஞானப்பிரிவு
பௌதிகவியல் : கருணாநிதி
இரசாயனவியல் : கண்ணதாசன்
உயிரியல் : கெங்கா
இணைந்தகணிதம் : விஜேந்திரன் (4074)

வலிமேற்கில் எமது நிறுவனத்தில் மட்டுமே இவ் ஆசிரியர்கள் தமது சேவையை வழங்குவார்கள்

**யாழ் மாவட்ட அச்சகத்தார் இணையம்**
**அங்குரார்ப்பண அழைப்பிதழ்**

இடம்: கிறீன் கிறாஸ் ஹோட்டல், கிறீன் பலஸ் மண்டபம்
(ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.)

காலம்: 03.04.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03.00 மணி

நிகழ்ச்சி நிரல்
- விருந்தினர் வரவேற்பு
- மங்கல விளக்கேற்றல்
- அக வணக்கம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- பிரதம விருந்தினர் உரை
- கௌரவ விருந்தினர் உரை
- நிர்வாகக் குழு தெரிவு
- புதிய இணைய தலைவர் உரை
- நன்றியுரை

பிரதம விருந்தினர்
கௌரவ C.V.K. சிவஞானம்
(அவைத் தலைவர் - வடக்கு மாகாண சபை)

கௌரவ விருந்தினர்
திரு. K. பூரணசந்திரன்
(முன்னாள் தலைவர் - Chamber of Commerce and Industries of Yalppanam)

அச்சக உரிமையாளர்கள் அனைவரும் இவ்வழைப்பினை தயவுசெய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்று, தங்களின் எதிர்கால நன்மை கருதி தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அனுசரணை:
நியூக்கிளியஸ் பவுண்டேஷன்
075 98 71 302 (C-4190)

**குத்தகைக்கு காணி தேவை**

5 ஏக்கர் - 50 ஏக்கர் வரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் பகுதிகளில் விவசாயப் பண்ணைக்கு குத்தகைக்கு காணி தேவை.
நீர்,மின்சார வசதி கட்டாயம். கட்டிடவசதி விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு
0779273042 - 0773713000 (4071)
TIRUPATHY CONSTRUCTION

**வேலை ஆட்கள் தேவை**

வெள்ளவத்தை, கொழும்பில் இயங்கும் காஸ் நிறுவனத்திற்கு காஸ் விநியோகிக்க ஆட்கள் தேவை

சம்பளம் 45'000/=, தங்குமிட வசதி உண்டு
உடன் தொடர்பு கொள்ளவும்

Wellawatte Gas Centre
No.36, Hamdan Lane,Colombo-6
Tel : 0112554648 Mobile : 0773683070, 0772306496 (C-4188)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

**பிரெஞ்சு மொழி**



- பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது.தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
- எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA ( DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
- இலவசம் படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
- யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்



ஆரம்பம் விரைவில் : உடன் அழைத்துப் பதியவும்
021 222 8093 ௭, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (4072)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.